THAYAGAM

18 · 2 · 94

# தாயகம்

75¢

உண்மை:5
தொடல்:33

## சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினவின் விஜயத்தில் சமாதான முயற்சி

### யுத்தநிறுத்தம், பொருளாதார தடை நீக்க நிபந்தனைகளுடன் புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயார்

## தமிழீழச் சங்கத்திற்கு ஒன்ராறியோ அரசு நிதியுதவி

## குடாநாட்டில் குண்டுவீச்சில் எண்மர் பலி

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்

SENDURAN & Co
(416) 962 7397
584 A, PARLIAMENT ST

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## தமிழ் ஈழச் சங்கத்திற்கு ஒன்ராறியோ அரசு நிதியுதவி

தமிழ் ஈழச் சங்கத்திற்கு ஒன்ராறியோ அரசு 287288 டொலர்களை வழங்கியுள்ளது. தற்போது அலுவலகம் இயங்கும் கட்டடத்தை விலைக்கு வாங்கவும் திருத்தங்கள் செய்யவும் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும். சமூக சேவைகளை வழங்க பயன்படுத்தப்படும் இந்த நிலையத்தின் மூலமாக 25 குறுகிய கால வேலைவாய்ப்புகளும் 10 நீண்ட கால வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட உள்ளன. இந்த திட்டம்பற்றி ஒன்ராறியோவின் குடியுரிமை அமைச்சர் எலய்ன் ஸீம்பாவும் பாவனையாளர், வர்த்தக தொடர்புகள் அமைச்சர் மரிலின் சேர்லியும் அறிவித்தனர்.

ஒன்ராறியோவின் வேலைத் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த புதிய நிலையம் தேவையான சமூக, கலாசார சேவைகளை வழங்குவதுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்கி தொழிற்பயிற்சி, வர்த்தக சந்தர்ப்பங்களையும் வழங்கும் என்று அமைச்சர் ஸீம்பா தெரிவித்துள்ளார். புதிய நிலையத்தில் அச்சகம் ஒன்றும் விருந்து மண்டபமும் நிர்மாணிக்கப்படும். இவற்றினால் வருமானமும் பெறப்படும்.

இந்த திட்டத்திற்கு உலகத்தமிழர் இயக்கம், தமிழ் வர்த்தக சம்மேளனம், பத்து தமிழ் சமூக அமைப்புகள் சேர்ந்த ஃபெக்ற் எனப்படும் கனடிய தமிழ் அமைப்புகளின் சம்மேளனம் என்பன ஆதரவு வழங்கியுள்ளன. ஈழச்சங்கம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் தமிழ் சமூகத்திற்கு தேவையான தொழிற்பயிற்சி, மொழிப் பயிற்சி, கலை, கலாசார திட்டங்கள் மூலமும் உதவுகிறது என்று அமைச்சர் சேர்லி தெரிவித்தார்.

## குண்டுவீச்சில் எண்மர் பலி

வடக்கில் நடைபெற்ற விமானத்தாக்குதல்களில் எட்டுப்பேர் கொல்லப்பட்டதாக கொழும்பு வந்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். குடாநாட்டின் இந்த செவ்வாய்க்கிழமை இரண்டு இடங்களில் விமானம் மூலம் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதாகவும் ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்ததுடன் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே அப்பாவிப் பொதுமக்கள் என்றும் புலிகளுக்கு எந்த வித சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

புதிதாக சென்ற வியாழக்கிழமை விமானத் தளபதியாக பதவியேற்ற எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க இந்த தாக்குதல்கள் செய்திகளை ஊர்ஜிதம் செய்தார்.

சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. பொருளாதாரத் தடையை அகற்றி யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று புலிகள் கோரியுள்ளதாகவும் இந்த கோரிக்கைகள் கிறிஸ்தவ சமாதான தூதுக்குழுக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்து, பொருளாதாரத் தடையை நீக்கி சரியான சூழ்நிலையை ஏற்படுத்தினால் முதல் கட்டப் பேச்சுவார்த்தையை யாழ்ப்பாணத்தில் நடத்தலாம் என்று பாலசிங்கம் தெரிவித்துள்ளதாக யாழ்.பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

## பத்திரிகை சுதந்திரத்துக்காக ஜனாதிபதி குரல்

சரியாக செயற்படும் அரசாங்கத்திற்கு சுதந்திரமான தொடர்பு சாதனங்கள் அத்தியாவசியமானது என்று ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்திருக்கிறார். 'விமர்சிக்கவும் விமர்சிக்கப் படவும் ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்க வேண்டும்' என்று தேர்தல் திணைக்களத்தில் புதிய தலைமையகத்தை திறந்து வைக்கும்போது ஜனாதிபதி உரையாற்றினார்.

தேசிய அளவில் நடைபெறும் தேர்தல்களில் மார்ச் மாதம் வடக்கு கிழக்கில் தேர்தல்களும் பின்னர் தென் மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலும் நடைபெற உள்ளன.

ஜனாதிபதி தேர்தலும் பொதுத் தேர்தலும் பின்னர் டிசம்பருக்குள் நடைபெறும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். தேர்தல் ஒன்றில் சாதாரண வாக்காளர்கள் சரியான முடிவை எடுக்க முழுமையாக விடயத்தை விளங்கியிருக்க வேண்டும், அதற்கு சரியான தகவல்கள் கிடைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

# மீண்டும் ஒரு வீரபுரான் அப்பு

***சிலர் பிறக்கும் போதே மாமனிதர்களாக பிறக்கிறார்கள். சிலர் தங்களை அவ்வாறு வளர்த்துக் கொள்கிறார்கள். சிலர் மீது இந்தப் பெருமை திணிக்கப்படுகிறது.***

ஜனாதிபதி விஜேதுங்க பதவி ஏற்ற போது இந்த மேற்கோளை கூறி தன் மீது பெருமை திணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருந்தார். ஜே.ஆர் பிறக்கும் போதே மாமனிதராகப் பிறந்தார், பிரேமதாசா தன்னை வளர்த்துக் கொண்டார், ஆனால் தன் மீது இந்தப் பெருமை திணிக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்தாரோ என்னவோ? தான் ஒரு statesman ஆக நடந்து கொள்வேன் என்று கூறிய விஜேதுங்க, இந்தியாவின் நரசிம்மராவ் போல, மிதவாதப் போக்குடன் நடந்து கொள்வார் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்தது. பிரேமதாசாவின் ஆடம்பர, வன்முறை அரசியல் சூழ்நிலை மாறி ஒரு தன்னடக்கமான ஜனாதிபதி இலங்கைக்கு தலைவராகக் கிடைத்திருக்கிறார் என்ற ஒரு நம்பிக்கையைத் தந்தது இந்த கூற்று. ஆனால் அவரது இன்றைய நடைமுறை எல்லா நம்பிக்கைகளையும் தகர்த்து விட்டிருக்கிறது.

பிரேமதாசாவின் தமாஷாக்களும் தன் எதிரிகளை அழித்த விதமும் இலங்கை அரசியலில் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரத் தனத்தையே காட்டி நின்றன. ஆளணப்பட்ட ஜே. ஆரையே மௌனமாக்கிய பெருமை பிரேமதாசாவுடையது. பிரேமதாசா காலத்தில், லேக் ஹவுஸின் சண்டே ஒப்சேர்வர் கூட ஜே.ஆரின் ஆட்சிக்காலம் பற்றி விமர்சனம் செய்த போதும், ஜே.ஆர் பிரேமதாசா பற்றி வாயே திறக்கவில்லை. தனது எதிரிகளை தந்திரமாக மூலைக்குள் தள்ளி செயலிழக்கச் செய்த ஜே.ஆரின் பாணியைப் போன்றதல்ல (உதாரணம் சிறில் மத்தியூ) பிரேமதாசாவின் அணுகுமுறை. பிரேமதாசா தன் எதிரிகளை வன்செயல்கள் மூலமாக செயலிழக்கச் செய்தவர். காமினி, லலித் போன்றோர் பிரேமதாசாவுக்கு எதிராகக் கிளர்ந்த போது, தந்திரமாக முப்படைத் தளபதிகளையும் அழைத்து விசுவாசம் பெற்று, முகமதுவை தளரச் செய்ததில் ராஜதந்திரம் என்பதை விட, பயமுறுத்தல் அதிகமானதாக இருந்தது.

தன்னுடைய பாரம்பரியங்களை உணர்ந்த பிரேமதாசா சிங்கள மேன்மக்களுக்கு தான் பதவியில் இருப்பது மகிழ்ச்சி தராது என்பதை தெரிந்திருந்ததால் தனது பதவியைக் காத்துக் கொள்ள இவ்வாறான வன்செயல்களை நம்பியிருந்திருக்கக் கூடும். அல்லது பிரேமதாசாவின் பாரம்பரியமே அவ்வாறானது என்பதால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லாதிருக்கலாம். ஜே.ஆரின் பின்பான பதவிப் போட்டியில் லலித், காமினி போன்றோர் பிரேமதாசாவுக்கு வழி கொடுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. பிரதமர் பதவியை வேறு வழியின்றி ஜே.ஆர் இவருக்கு கொடுத்ததால் அடுத்த ஜனாதிபதியாகும் வாரிசு இவரே என்ற பிரமையும், ஜனாதிபதி பதவிக்கு கட்சிக்குள் போட்டி நடந்தால் தான் போட்டியிட மாட்டேன் என்ற நிபந்தனையும் பிரேமதாசாவை பதவியில் அமர்த்தின. இதுவரையும் மேன்மக்கள் எனப்படுவோரே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமயத்தில் முதன் முதலாக ஒரு சாதாரண பாரம்பரியத்தைக் கொண்டவர் ஜனாதிபதியானது நல்ல விடயம் தான்.

தனது பதவிக்கு வேட்டுவைக்க லலித், காமினி முயலக் கூடும் என்ற பயம் காரணமாக மேலே தூக்கப்பட்டு 'பெருமை திணிக்கப்பட்டவர்' தான் இந்த விஜேதுங்க. பிரேமதாசாவின் கணிப்பீடுகளில் தவருகிப் போனது இதுவாகத் தான் இருக்க வேண்டும். காமினி, லலித் இருவரையும் ஒதுக்கியதால் தான் ராஜீவ் மரணச் சடங்குக்கு சென்ற போது இருவரும் தங்களது கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு பிரேமதாசாவுக்கு எதிராக ஒன்றாக சேர்ந்தனர். இவர்களில் ஒருவரை பிரதமராக்கியிருந்தால் பிரித்தாளும் தந்திரத்தில் பிரேமதாசா வெற்றி பெற்றிருக்கக் கூடும். 'மேன்மகன்' ஒருவரை தனக்கு கீழ் விசுவாசமானவராக வைத்துக் கொண்டதால் மேன்மக்களையும் சமாளிப்பதாகிறது, அத்துடன் தனக்கு கீழே ஒரு உயர்ந்த இனத்தவர் பணிபுரிய வைப்பதுமாகிறது என்ற கணிப்பு பிரேமதாசாவுக்கு இருந்திருக்கலாம்.

இறுதியாக புலிகளின் புண்ணியத்தால் இந்த விஜேதுங்கவுக்கு மேலும் 'பெருமை திணிக்கப்பட்டு' ஜனாதிபதியானார். மீண்டும் KGB ஆட்சியை தன் வசமாக்கிக் கொண்டது. அதாவது கண்டிய கொவிகம பௌத்தர் வசம் சென்றது. பிரேமதாசா ஆட்சியிலிருந்த போது மௌனமாகவே இருந்தவர் திடீரென்று பிரேமதாசாவின் கொள்கைகளில் இருந்து தன்னை அன்னியப்படுத்திக் கொண்டார். கம் உதாவ சடங்குகள் நிறுத்தப்படும் என்றெல்லாம் அறிவித்தார். அந்த நேரத்தில் லலித் மரணத்திலும் பிரேமதாசாவின் மீது சந்தேகம் இருந்தது. பிரேமதாசாவின் வன்முறை அரசியல் வெறுப்பைச் சம்பாதித்திருந்த சூழ்நிலையில் அந்த கருத்துக்களில் இருந்து தான் முரண்பட்டவர் என்பதைக் காட்ட வேண்டிய தேவை விஜேதுங்கவுக்கு இருந்தது.

இதன் பின்பு தான் அவர் வடக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சனையே என்று வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். ஒரு ஜனாதிபதியின் போக்கில் திடீர் மாற்றம் என்? இதுவரையும் பிரேமதாசாவின் கீழ் ஏவலைச் செய்கின்ற வெறும் அரச அதிகாரி போன்று செயற்பட்டவர் இப்போது தான் அரசியல்வாதியானார். பிரேமதாசாவின் மீதிக்காலம் வரையும் பதவியில் இருக்க முடிந்தாலும் அடுத்த முறை பதவிக்கு வருவதற்கு அவருக்கு ஒரு கொள்கை தேவைப்பட்டது.



அதற்கான தந்திரோபாயங்களை வகுக்க வேண்டி வந்தது. கொள்கையாக பயங்கரவாதப் பிரச்சனை உருவெடுத்தது. அதை அடக்குவேன் என்ற கோஷமே தவிர தீர்ப்பேன் என்பதல்ல. இதன் மூலம் தன்னை ஒரு சிங்கள இனத்தின் தலைவனாக, ஒரு வீரபுரான் அப்புவாகக் காட்டிக் கொள்ள முயன்றார். சிறிமாவோ இனப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று கோசம் போடுகின்ற போது, சிங்கள இனவாதியான காமினி ஜயசூரிய ஜனாதிபதியை ஆதரிக்கும் நிலை இருக்கிறது என்றால் ஜனாதிபதியின் நிலைப்பாடு பற்றி புரிந்து கொள்ள முடியும். நாட்டின் பொருளாதார நிலை பற்றிய ஒரு கொள்கையை அறிவிக்காமல் பயங்கரவாதப் பிரச்சனை பற்றிக் கூறும்போதே இவர் உண்மையான statesman ஆ, அல்லது வெறும் அரசியல்வாதியா என்பது புரியும்.

கொள்கைப் பிரகடனத்தின் பின்னர் தந்திரோபாயங்கள்.. ஜே. ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க இரண்டாம் இடத்தில் இருப்பதால் ஜே.ஆரின் ஆதிக்கம் பற்றிய பயமோ என்னவோ, காமினியை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வரும் முயற்சியில் விஜேதுங்க ஈடுபட்டார். பிரேமதாச ஒதுக்கி வைத்த ரெனியும் கட்சிக்குள் சேர்க்கப்பட்டார். சுதந்திரக்கட்சிக்குள் இருந்த பிளவைச் சாதகமாகப் பயன்படுத்த அனுராவைக் கட்சிக்குள் சேர்த்து பாராளுமன்ற ஆசனமும் கொடுத்தார். காமினியை விட அனுராவுக்கு முன்னுரிமை கொடுத்தது கூட எதிர்க்கட்சிகளின் இயலாமை குறித்து விளம்பரப்படுத்தவே.

இதற்குள் தொண்டமானுடனான மோதல்... சிங்கள இனவாதிகள் மத்தியில் தொண்டமானுக்கு இருந்த செல்வாக்கு குறித்த கோபத்தை சாதகமாகப் பயன்படுத்த நடைபெற்ற ஒன்று. தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்த தொண்டமானின் நிபந்தனைகள் பற்றி பேசக் கூட சம்மதிக்காத ஜனாதிபதி செல்லச்சாமி தொண்டமானுடன் மோதிய போது மட்டும் அவரைச் சந்தித்து தொழிலாளர் காங்கிரசின் வேறுபாடுகளை தனக்கு சாதகமாக்கிக் கொண்டார்.

ஆரம்பத்தில் நிறைவேற்று ஜனாதிபதி பதவி முறையை நீக்க சம்மதித்த இவர் பின்னர் பின்வாங்கியது அந்த பதவியில் கிடைத்த ஈடுபாடு காரணமானதே. இன்றுவரைக்கும் இவரது பேச்சுக்கள் சிங்கள மக்களின் பாதுகாவலன் தான் என்பதைக் காட்டுகின்ற பாணியிலேயே அமைகின்றன. சிங்களவர்கள் நாட்டில் இரண்டாந் தரப் பிரஜைகளாக வாழ முடியாது என்கிறார். இதன் அர்த்தம் தமிழர்கள் முதலாம் தரமாக வாழ்கிறார்கள் என்பது போல...

தனிநாட்டைப் பிரித்துக் கொடுத்தால் நாம் கடலில் வீழ வேண்டியிருக்கும் என்கிறார். நான் இனத்துவேசம் பேசுவதாக கூறுகிறார்கள், எந்த கட்சியில் இனத்துவேசம் இல்லை, தமிழ் கட்சிகளில் தமிழர்கள் மட்டும் தானே இருக்கிறார்கள், ஐ.தே.கட்சியில் சகல இனத்தவர்களும் இருக்கிறார்கள் என்கிறார். பயங்கரவாதிகள் எல்லோருமே தமிழர்கள் என்கிறார். வடக்கை பிரித்தால் தோட்டத்தொழிலாளர்களுக்கும் தனிநாடு கொடுக்க வேண்டும் என்கிறார். இந்த நாட்டை சிங்களவர்கள் ஆள வேண்டும், சிறுபான்மையினர் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று பலவாறாக பேசிக் கொண்டிருப்பதை காண முடிகிறது. இவர் இப்போது சொல்கின்ற கருத்துக்கள் எல்லாம் எப்போதோ இனவாதிகள் சொல்லியவை தான். காமினி ஜயசூரியாவும் நளின் டி சில்வாவும் இதைத் தான் சொல்கிறார்கள்.

இந்த சிங்கள இனத்தின் பாதுகாவலன் பிரேமதாசா காலத்தில் எங்கே போனார்? இவர் சொல்கின்ற எந்தக் கருத்தையும் பிரேமதாசா பகிரங்கமாகப் பேசியதில்லை. புலிகளுடன் பேசியதற்காக இவர் பிரேமதாசாவுடன் முரண்பட்டு வெளியேறியதும் இல்லை. திடீரென்று வந்த இந்த 'அரசமரத்து ஞானோதயம்' இவர் அரசியலுக்கு வந்ததால் ஏற்பட்ட விளைவே.

இன்றைய நிலையில் இவரது ஒரே நோக்கம் ஜனாதிபதி தேர்தலில் வெல்வது தான். இதற்காகத் தான் அரசியலமைப்பில் கூட மாற்றம் செய்வதற்கு முயல்கிறார். ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவுடன் போட்டியிட்டு வெல்லக்கூடியவசீகரம் தனக்கு இல்லை என்பதை உணர்ந்து கொண்டதால் ஜனாதிபதியை பாராளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும் என்கிறார். 77ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சியில் அங்கம் வகித்து வந்தவர் திடீரென்று சிங்கள மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கக் கூடாது என்றும் கூறி இந்த முயற்சியில் ஈடுபடுகிறார்.

தமிழர்களின் வாக்குகளோ, தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளோ தனது வெற்றிக்கு அவசியமில்லை என்றும் தமிழர்கள் மீதான எதிர்ப்புணர்வால் அதிகமான சிங்களவர்கள் தன்னை ஆதரிக்கக் கூடும் என்றும் இவர் கருதுகிறார். இவரது தந்திரோபாயங்கள் இவரது ராஜதந்திரத்தைக் காட்டவில்லை. இவரது பலவீனத்தை, தன்னம்பிக்கை யின்மையையே காட்டுகின்றன. சமுத்திரத்தில் ஆழ்ந்திருப்பவன் எந்தத் துரும்பையும் பிடிப்பான் என்பது போல.. இவரது இனவாதக் கருத்துக்கள் இவரை ஒரு சிங்கள மக்களின் விடுதலை வீரனாகக் காட்டவில்லை. அதற்கான வசீகரம் இவரிடம் இல்லை. தேர்தலுக்கான ஒரு கொள்கை தேவைப்பட்டதால் வந்த விளைவு இது.

ஜே.ஆர் பயங்கரவாதத்தை அழிக்க பேய்களுடன் கூட்டு வைத்து தோற்றுப் போனார். பிரேமதாசா பேய்களை விட புலிகள் மேல் என்றோ என்னவோ அவர்களுடன் கூட்டு வைத்தும் தோற்றுப் போனார். இப்போது இந்த வீரபுரான் அப்பு இனவாத பேய்களுடன் கூட்டு வைக்கிறார்.

எப்படி ஒரு மனிதனின் தன்னம்பிக்கையீனத்திற்கு தமிழினம் பெருமளவு விலை செலுத்துகிறதோ அதைப் போல இன்னொரு தனிமனிதனின் தன்னம்பிக்கை யீனத்திற்கும் சிங்கள இனம் விலை செலுத்தப் போகிறது. ஜனாதிபதி தேர்தலில் இவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டு 'பெருமை மேலும் திணிக்கப்பட்டால் மக்களின் கதி?எங்களது இன்றைய தேவை கூட்டத்தை அடக்கி வைக்கின்ற president அல்ல, வழி நடத்திச் செல்கின்ற ஒரு leader தான் என்பது உணரப்படாத வரைக்கும் இவ்வாறான அரசியல் தந்திரோபாயங்கள் தொடரத் தான் செய்யும்.

# கர்ப்பத்தடைக்கு பப்பாசிப்பழம் தமிழ் ஆய்வாளர் கண்டுபிடிப்பு

இங்கிலாந்தின் சுஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் தமிழ் ஆய்வாளர் ஒருவர் பப்பாசிப் பழம் கர்ப்பத்தடைக்கு பயன்படுத்தப்படலாம் என்பதைக் கண்டறிந்துள்ளார். கர்ப்பத்தைக் கலைக்கும் அளவுக்கு இது சக்தி வாய்ந்தது என்பதை தாங்கள் கண்டறிந்ததாக பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பப்பாசிப் பழத்தில் காணப்படும் பப்பெய்ன் எனப்படும் நொதியம் ஒன்று புரொஜெஸ்தரோன் என்ற ஓமோனுடன் தொழிற்படுகிறது என்றும் புரொஜெஸ்தரோனே கர்ப்பப் பையை கர்ப்பத்திற்கு தயார் படுத்தி, வளரும் சிசுவுக்கு உதவுகிறது என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

தர்மலிங்கம் செந்தில் மோகன் என்ற இந்த ஆய்வாளர் 'பப்பெய்னும் புரொஜெஸ்தரோனும் தாக்கமடையும் போது கர்ப்பத்தை காக்க உதவுகின்ற புரொஜெஸ்தரோனின் அளவில் மாற்றம் ஏற்படும் என்றும் இதனால் கர்ப்பம் கலைகிறது அல்லது தடை செய்யப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

கர்ப்பிணிப் பெண் ஒருவர் நாளொன்றுக்கு ஒரு பழம் வீதம் வேண்டுமென்றே உண்டு வந்தால் ஒரு வாரத்தில் கர்ப்பம் கலைவதற்கான சாத்தியங்கள் உண்டென்றும் பழுக்காத காய்களை உண்பதன் மூலம் இன்னும் இது விளைவாகும் என்றும் இவர் தெரிவித்தார்.

மல்கம் ரொப்பிங் என்ற சிரேட்ட விரிவுரையாளர் மேற்கு நாடுகளில் கர்ப்பத்டைக்கு பப்பாசிப் பழம் பயன்படுத்தப் படலாம் என்று கூறியுள்ளார்.

இந்திய உபகண்டத்தில் இந்தப் பழம் கர்ப்பதடைக்கு காலாகாலமாக பயன்படுத்தப பட்டதாக செந்தில் மோகன் கூறினார். இலங்கையிலும் இந்தியாவிலும் இதைப் பயன் படுத்துவதாகவும் மலிவானதாக எங்கும் கிடைக்கிறது என்றும் தெரிவித்தார். அத்துடன் இதனால் வேண்டாத பக்க விளைவுகள் உண்டானதற்கான சான்றுகளும் இல்லை என்றும் கூறினார்.


**மலரும் இசை அரும்புகள்**

**தமிழிசைக்கலாமன்றம் வழங்கும் சிறுவர்களின் இசை நிகழ்ச்சி 19.2.94 மாலை 6 மணிக்கு ஏஜின்கோட் கல்லூரி மண்டபத்தில்**

**தொடர்பு: 496 1340**


# முதலாவது பிறந்த தின வாழ்த்து
## அபிராமி சண்முகரெட்னம்



வேலணை கிழக்கு, வவுனியாவைச் சேர்ந்த சண்முகரெட்னம் பவானி தம்பதிகளின் செல்வப் புதல்வி அபிராமி 18.2.94ல் தனது முதலாவது பிறந்த தினத்தை 19.2.94ல் 3150 எக்லின்ரன் அவனியூவில் உள்ள றோயல் குயீன் றெஸ்ரோறண்டில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிய மாமா, சின்னமாமா, மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், கண்ணன் சித்தப்பா, குகன் சித்தப்பா, திவானி அக்கா, அஸ்வினி அக்கா, சஜீவ் அண்ணா, சஜீவ் மச்சான், சஜன் மச்சான், அஜேஜன் மச்சான் மற்றும் இலங்கையில் வாழும் பூட்டிமாரும் கவிஸ்ஸில் வாழும் உறவினர்களும் மற்றும்உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் நல்லூர்க்கந்தன் அருள் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்

தகவல்: சண்
208 7407
724 4118

## திருமலையில் தாக்குதல்

புத்தாண்டின் பின்னர் முதன் முதலாக இராணுவத்தினர் கிழக்கில் தாக்குதல்களை நடத்தினர். திருமலையில் கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதல்களில் காடுகளில் சில முகாம்கள் தகர்க்கப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது. திருமலையின் வடபகுதியில் உள்ள புலிகளின் நடமாட்டத்தை அகற்ற அதிகளவு துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்றும் இராணுவம் கூறியுள்ளது. அப்பகுதிகளில் நடைபெறும் தேர்தல்களை புலிகள் குழப்ப முடியாத நிலையை உருவாக்குவதே இந்த தாக்குதல்களின் நோக்கமாகும்.

## இந்தியா, பாக் பேச்சுவார்த்தை

இந்தியாவும் பாகிஸ்தானும் நடத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சீனாவில் நடைபெற உள்ளன. இந்த பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க, சீன அணு நிபுணர்கள் கலந்துகொள்வார்கள். இந்தியாவினதும் பாகிஸதானினதும் முன்னாள் இராணுவத் தளபதிகள் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள உள்ளார்கள். இது உத்தியோகபூர்வமற்ற பேச்சுவார்த்தை என்றே வர்ணிக்கப்படுகிறது.

முன்பு அணு ஆயுதம் பற்றி பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி அமெரிக்காவின் வற்புறுத்தலுக்கு இந்தியா இணங்க மறுத்திருந்தது. சீனா இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் விலக்கப்பட்டால் சீனா இந்தியாவைத் தாக்கக் கூடும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது.

## காமினியின் ஏமாற்றம் தொடர்கிறது

காமினி திசநாயக்க ஐ.தே. கட்சியில் சேர்ந்து கொண்ட போதிலும் அவர் எதிர்பார்த்த பதவிகள் விரைவில் கிட்டுவதாக இல்லை. நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர் கட்சியில் சேர்ந்து கொண்ட போதிலும் இவர் பாராளுமன்றத்திற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. சமீபத்தில் ஐ.தே. கட்சியில் சேர்ந்து கொண்ட ஒஸி அபேகுணசேகர, ரொனி டி மெல் ஆகியோர் இன்னமும் பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொள்ளவில்லை. கட்சியில் ரொனி சேர்ந்ததும் அவருக்கு நிதி மந்திரிப் பதவி கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. காமினிக்கும் பாதுகாப்பு அமைச்சு கிடைக்கும் என்று கூறப்பட்டது.

தற்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்று கூறப்பட்ட போதிலும் அது நிறைவேறுமா என்பது சந்தேகமான நிலையிலேயே உள்ளது. ஜனாதிபதியின் கையிலேயே இரண்டு அமைச்சுகளும் தற்போது உள்ளன. அவரும் தனது பதவிகளை விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை. காமினி தற்போது தனது முக்கியத்துவத்தை இழந்து முன்பு ருக்மன் சேனநாயக்க இருந்த நிலைக்கு தள்ளப்படவும் கூடும்.

## விமானப்படைக்கு புதிய ஹெலிகள்

விமானப்படைக்கான புதிய ஹெலிகொப்டர்களை ரஷ்யாவிலிருந்து பெற்றுக் கொள்வது குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட விமானப்படை அதிகாரிகள் ரஷ்யா சென்றுள்ளனர். எம்.ஐ 8 ரக ஹெலிகொப்டர்கள் ஏற்கனவே இரண்டு விமானப்படையில் சேவையில் உள்ளன. பொருட்கள், ஆயுதங்களையும் துருப்புகளையும் கொண்டு செல்லக் கூடிய இந்த ஹெலிகொப்டர்களில் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. உள்நாட்டு யுத்தங்களில் பயன்படும் இந்த ஹெலிகொப்டர் இருபதுக்கு மேற்பட்ட நாடுகளில் பயன்பட்டு வருகிறது.

## அகதிகள் பற்றி தகவல்

டென்மார்க்கில் வந்திறங்கிய தமிழ் அகதிகள் பற்றி மேலும் தகவல்கள் பெறும்படி இலங்கை தனது சுவீடன் தூதுவரைப் பணித்துள்ளது. இந்த அகதிகளை மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பும்படி அவர் கோருவார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. அந்த அகதிகள் விரும்பினால் அவர்களை திருப்பி அனுப்பலாம் என்றும் ஆனாலும் இதற்கு இரு தரப்பு நாடுகளும் சம்மதிக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

## சுவிஸ் அகதிகள் அதிகரிப்பு

சுவிஸில் அகதிகளின் தொகை அதிகரித்து வருகிறது. சென்ற வருடம் மட்டும் முன்னைய வருடத்தை விட 39வீதம் அதிகமான அகதிகள் வந்திருந்தனர். சென்ற வருடத்தில் 24,740 பேர் தஞ்சம் கோரியிருக்கின்றார்கள். ஆனால் 91 இல் 42 ஆயிரம் தஞ்சம் கோரியிருந்தார்கள். சென்ற வருடம் 14.7 வீதத்தினரின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தஞ்சம் வழங்கப்பட்டது. பொஸ்னியா, துருக்கி போன்ற நாடுகளில் இருந்து பெரும்பாலோர் வந்த போதிலும் அல்பேனியா, இலங்கை, சோமாலியா ஆகிய நாடுகளிலும் இருந்து அகதிகள் வந்துள்ளனர்.

# இரண்டாவது புள்ளி

## சிவதாசனின்



## அசை

இந்த வருடம் கனடாவில் உலகத்தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது. அதற்கான ஆயத்தங்கள் ஈழத்தமிழர் பலரும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இதுபற்றிச் சிலருடன் பேசிக் கொண்டபோது பலதரப்பட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டன. சில ஆதரவானதாகவும் சில எதிரானவையாகவும் இருந்தன. மாநாட்டு அமைப்பாளர்களின் நோக்கம் என்னதென்றோ விழா எப்படியோ அடையப் போகிறதென்றோ எனக்குத் தெரியாது. ஆனால் இப்படியான மாநாடு ஒன்றின் தேவை, அவசியம் பற்றி என் சார்பில் கருத்து வேறுபாடு இல்லை.

ஒரு கோடு வரைவதனால் குறைந்தது இரண்டு புள்ளிகளாவது தேவைப்படும். அரசியல், சமூக விஞ்ஞான, பொருளாதார நடைமுறைகள் என்றாலென்ன, தனிமனித வாழ்வு மேம்பாடடைவதற்கான நடைமுறைகள் என்றாலென்ன, வளர்ச்சி என்று ஒன்று தேவையானால் அது திட்டமிடப்பட்டதாகவே அமைய வேண்டும் வளர்ச்சிக்கான திட்டமொன்றுக்கு ஆரம்பம், குறிக்கோள் என்று இரண்டு புள்ளிகள் இருந்தேயாகவேண்டும். குறிக்கோள் இல்லாத திட்டமொன்றுக்கு திசை பரிமாணம் இருக்கமுடியாது.

புலம் பெயர்ந்த தமிழர் சமூகத்தின் ஆரம்ப புள்ளி, ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில், எண்பத்தி மூன்றில் இடப்பட்டு விட்டது. ஆங்காங்கே சில தனிமனிதர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்திற்கான பாதைகளைத் திட்டமிட்டு புள்ளிகள் போட்டு சீரான வாழ்பவை வாழ்ந்து கொண்டிருப்பினும் சமூகம் என்ற அளவில் இந்த இரண்டாவது புள்ளிக்கான திட்டமிடல் இன்னும் நடைபெறவில்லை என்றே கருதலாம். அப்படியாயின் இன்னும் இருபது வருடகாலத்தில் எதிர்காலத் தமிழர் சமூகம் எப்படி இருக்கும் என்று யாராலும் ஆருடம் சொல்லிவிடமுடியாது. இந்தச் சமூகப் பயணத்திற்கான வரை கோட்டைத் திட்டமிடுதலின் முதல் படியாக இந்த மாநாடு அமைய வேண்டுமென்பதே என் விருப்பம்.

கலாச்சாரம், பண்பாடு என்பதெல்லாம் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்வ ,முறைகள் ஏனைய சடப் பொருட்களைப்போலவே, சமூகமும் மாற்றத்திற்குட்படும் போது அதன் வழிசார்ந்த சலாச்சாரம் பண்பாடு ஆதியனவும் மாற்றத்திற்கு ட்பட்டாகும். புலம் பெயர்ந்த சமூகங்களின் பருமன் சுதேச சமூகங்களுடன் ஒப்பிடும் போது சிறியதாக விருப்பதால் இந்த மாற்றங்கள் நாம் விரும்பும் விகிதத்தில் நடைபெறாமல் ஒரு வகையில் அதிர்ச்சியுறும் வேகத்தில் நடைபெறுகின்றன. அதனால் இடமாற்றங்கள் சீர்படுத்தப்பட்டு வரையறுக்கப்பட வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகிறது. சுதந்திரமான சமூகத்தில் இது இயலாத காரியமெனினும் உதாசீனப்படுத்தி விடவும் முடியாதாகிறது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் நிகழ்கால சந்ததி இருதோணிக் கால் நிலையிலுள்ளதனால் மாற்றங்களை எளிதில் சீரணிக்க முடியாது அதிர்ச்சிக்குள்ளாகிறது. விடுபட்டுப் போகும் மண் தொடர்புகள் வாழ்வு முறைகள் ஒப்பீட்டுக் கலாச்சாரங்கள் மனதைக் குடைவது இயற்கை. ஆனால் புதிய சந்ததிக்கு இப்படியான எச்சங்கள் எதுவுமே இல்லாததால் தங்கள் சுயத்தைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளும் நிலைமை உருவாகிறது. எது தமிழரின் 'சுயம்' என்று பழைய சந்ததி நிர்ணயித்ததோ அது இழக்கப்பட்டு விடும் அபாயம் நிச்சயமாகின்ற நிலைமை உருவாகிறது. புதிய பரம்பரையினர் சுயம் சுதேச சமூகத்தின் பாதிப்புக்குள்ளாகி இணைந்து வாழ்தலுக்குப் பதிலாக (integration) குழைந்து வாழ முயற்சித்து (assimilation) இரண்டும் கெட்ட திரிசங்கு சுவர்க்க நிலையில் இருக்கப் போகிறார்கள். கடந்தகால நூற்றாண்டு காலமாக சுகத்தை இழந்து வாழ்ந்த அமெரிக்க கறுப்பர்களை இன்னமும் வெள்ளையர்கள் ஏற்றுக்கொள்ள வில்லையாகில் எமது சமூகத்தின் நிலமை இலகுவாகவே புரியும்.

சுயம் இழக்கப்படக் கூடாதென்றால் சுயம் எது என்று வரைவு செய்துகொடுப்பதும் நமது சமூகத்திற்குரிய கடமையில் ஒன்று, இயங்கு நிலைக் கலாச்சாரங்களுக்கு சுயம் என்று ஒன்று எப்படி இருக்கமுடியும்? இங்கேதான் நமது வரைபடத்தின் முதற் புள்ளி அவசியமாகிறது. புலம் பெயர்ந்த சமூகத்தின் பாரம்பரியத்தை நினைவுறுத்தும் காரணியாக இந்த முதற் புள்ளி அமைய வேண்டும். வரைபடத்தின் இரண்டாவது புள்ளிக்கான திட்டமிடல் இங்கிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். இதற்கான அந்தஸ்து சமுதாயங்களுக்கு மட்டுமே உண்டு.

எதிர்காலச் சந்ததி சுயத்தை இழக்காமல் இருக்கவேண்டுமானால் அது தனது பாரம்பரியத்தை மதிப்பதோடு மட்டுமல்லாது மீது பற்றுடையதாகவும் இருக்க வேண்டும். இது தானாக வரவேண்டிய தொன்றல்லாது திணிக்கப்படக் கூடியதல்ல. பழம்பெருமைகளைப் பேசுவதன் மூலமும் எழுதுவதின் மூலமும் சுயத்தை நிலை நிறுத்திவிட முடியாது. நாம் மற்றவர்களை விட மேலானவர்கள் என்ற

எண்ணத்தை விடுத்து நாம்எவரை விடவும் தாழ்ந்தவர்கள் அல்ல என்று சொல்ல வைப்பதுதான் இதற்கு ஒரே வழி. மேல் நாட்டு வணிக மரபுப்படி பண்டம் விற்பனையாக வேண்டுமானால் நுகர்வோரைப் பண்டத்தின் மீது மோகம் கொள்ளச் செய்தல் வேண்டும். நமது பாரம்பரியம் பேணப்பட வேண்டுமானால் நாம் அதை மோகிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். பிறிதோர் சமூகம் நமது பாரம்பரியத்தைப் புகழ்ந்து மதித்து, தானும் பின்பற்ற முனையுமானால் நமது சமூகமும் பெருமையோடு அதைப் பின்பற்றும். இதற்கான கலாச்சார சந்தைப்படுத்தல் கூட ஒருவகையில் எமது பின்பற்றும். இதற்கான கலாச்சார சந்தைப்படுத்தல் கூட ஒரு வகையில் எமது சமூக ஸ்தாபனங்களினால் முன்னெடுக்கப்பட வேண்டும். எங்கள் தமிழ்ப் பெண்களின் அழகான தலைமுடி, ஆபரணம் சேலை அணிதல் போன்றவை பிறசமூகத்தினரால் புகழப்படுதல் போன்று வேறுபல துறைகளிலும் நமது பாரம்பரியம் முன்னோடியாகத் திகழ செய்ய வேண்டும்.

இதற்கான ஆரம்பப்புள்ளிகள் பல நமது கலாச்சாரத்தில் நிறைய இருக்கின்றன இந்தப் புள்ளிகளெல்லாம் பிற சமூகப் பாதிப்புகளினால் அடித்துச் செல்லப்படுதற்கு முன் நினைவுச் சின்னங்களாக நிலை நிறுத்தப்பட வேண்டும். நமது கலாச்சாரங்களைப் பிரதிபலிப்பதில் கோவில்கள் எப்படிப் பங்காற்றுகின்றனவோ அதேபோல ஸ்தூபிகளும் கலாச்சார மண்டபங்களும் நிறுவப்பட வேண்டும். எதிர்காலச் சந்ததிகளுக்கு இவைகள்தான் நினைவுச்சின்னங்களாக அமையும். இந்த வகையில்தான் எதிர்வரும் இந்த விழா இரண்டாவது புள்ளியை நிர்ணயிப்பதாக அமைய வேண்டும் என்பது என் அவா.

முதல் தடவையாக இந்த விழா கனடாவில் நடைபெறுவதால் தாய்நாடுகளில் நடைபெற்றது போல பாரிய அளவில் ஊர்திகளுடனும் ஊர்வலங்களுடனும் நடைபெற வேண்டுமென்பதில்லை. குறிப்பாக ஒன்ராறியோ மாநிலத்தில் பொருளாதார மந்த நிலை இனவெறியையும், புதிய குடிகளின் மீதான வெறுப்பையும் அதிகரித்து வைத்திருப்பதால் ஆடம்பரமான ஊர்வலங்கள் செலவுதானங்கள் துவேஷ பத்திரிகை சாதனங்களுக்கு அவலாகப் போய்விடும் அத்துடன் இந்த மாநாட்டுக்கு அரச மான்யமும் பெறப்பட்டால் அதுவும் இந்த பத்திரிகை சாதனங்களின் கையில் அகப்பட்டால் தமிழர் மீதான காழ்ப்புணர்வு மேலும் தூண்டப்படலாம். இதனால் கலாச்சாரம் காட்சிப் பொருளாவதை விட்டு சமூகம் காட்சிப் பொருளாக கூண்டில் நிறுத்தப்படலாம் இந்த மாநாட்டின் பின் பணம் மீதப்பட்டால் தமிழர் பாரம்பரிய நினைவு மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்படுதல் வரவேற்கத் தக்கது.

மொத்தத்தில் இந்த மாநாடு ஒரு அவசியமான நிகழ்வு நமது எதிர்காலத்தை நாமே திட்டமிட வேண்டியது ஒரு நிர்பந்தம். எமது சமூகத்தின் நீண்ட பயணத்திற்கான பாதை கோட்டை இந்த மாநாடு நிர்ணயிக்குமானால் அதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் அவசியம்.

என்ன சொல்கிறீர்கள்?

# கிழக்கு தேர்தலில் இராணுவம்

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை அரசு நடத்துகின்ற போதும் தமிழ் கட்சிகள் பல அவற்றை பகிஷ்கரித்துள்ளன. கிழக்கில் வேட்பாளர்களுக்கான கூட்டம் ஒன்றில் பேசிய இராணுவத் தளபதி ரொகான் குணவர்த்தன தேர்தலில் இராணுவம்தலையிடாது என்றும் மக்கள் வாக்களிப்பதை இராணுவம்ஊக்குவிக்கும்என்றும் தெரிவித்தார். வாக்குச்சாவடிகள் பொலிசாரால் பாதுகாக்கப்படும் என்றும் இராணுவம் தொலைவில் நின்று கண்காணிக்கும் என்றும் தெரிவித்த அவர் எந்த கட்சிக்கும் வாக்களிக்குமாறு மக்களை இராணுவம் நிர்ப்பந்திக்காது என்றும் கூறினார். அத்துடன் அந்நியப்படைகள் இங்கிருந்து நடத்தியதைப் போன்ற தேர்தலை நாம் நடத்த மாட்டோம் என்றும் கூறினார்.

ஆயினும் சுயேச்சை வேட்பாளர் குழு ஒன்றின் தலைவ சோதனைச் சாவடிகளில் தமது வேட்பாளர்கள் நையப்புடைக்கப பட்டதாகவும் ஏன் ஐ.தே.கவில் கேட்கவில்லை என்றுகேட்பதாகவும் தெரிவித்தார். இன்னொருவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுப்பதை ஆளும் கட்சியினர் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்று முறையிட்டார். இன்னொருவர் தமது குழுவில் மூவரைக் காணவில்லை என்றும் ஆறு பேர் கொண்ட குழு இவர்களைப் பயமுறுத்தியது என்றும் தெரிவித்தார்.

# தொகுதிவாரித் தேர்தலே சரியானது!

முன்பு அமுலில் இருந்த தொகுதிவாரியான தேர்தலை மாற்றி விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொண்டு வந்தவர் ஜே.ஆர். இவர் தற்போது பழைய முறையே சிறந்தது என்று கூறியுள்ளார். விகிசாரப் பிரதிநித்துவம் காரணமாக மக்களுக்கு தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் யார் என்று தெரியாத நிலையில் உள்ளனர் என்றும் சகல கட்சிகளும் சேர்ந்து இதை ஏற்றுக் கொண்டால் பழைய முறையையே அமுல்படுத்தலாம் என்றும் கூறியுள்ளார்.

# அன்ரனி பிறதர்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

பெப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை

**1484 Queen West (at Jameson)**

**Tel:588 3447**

| | |
|---|---|
| **இறைச்சி வகைகள்**<br>ஆட்டிறைச்சி றாத் $2.49<br>மாட்டிறைச்சி றாத் $2.49<br>(எலும்புகள் இல்லாமல்)<br>உயிர்க்கோழி $2.50<br>கோழிக்கால் றாத் $.79 | **பருப்பு வகைகள்**<br>மைசூர்ப்பருப்பு, கடலைப்பருப்பு,<br>துவரம்பருப்பு, உழுந்து, கடலை,<br>ரவை<br>றாத் 69 சதங்கள் மட்டுமே |
| **மீன் வகைகள் - றாத்**<br>பாரை $1.99<br>திரளி $1.99<br>கணவாய் $2.99<br>சீலா $2.49<br>King Fish $3.99 | **சவர்க்கார வகைகள்**<br>ராணி, லக்ஸ், கோம்பா, லைவ்<br>போய்<br>$2 டொலருக்கு நான்கு |
| **மரக்கறி வகைகள்**<br>கத்தரிக்காய்,பாவற்காய்,<br>பயிற்றங்காய் $1.29 றாத்<br>வெங்காயம் $2.49 10 றாத் | கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம்<br>.99 200 கிராம்<br>ஜாம்வகைகள் $1.49<br>ஹோமோ பால் 2 வீதம் $2.99<br>தயிர் 750 மிலீ $1.59<br>முட்டை XL $1.69<br>டின்பால் பிளாக் & வைட் $1.99 |

உங்கள் வதிவிடங்களில் பூச்சித் தொல்லையை அறவே ஒழிக்க எங்களை நாடுங்கள்

சகல சுவாமிப் படங்களும் ஐம்பது வீத மலிவு விலையில் கிடைக்கும்

# ANTONY BROTHERS FASHION HOUSE

***1484 Queen St West***

**Tel:588 3447**

**Feb 15-Mar 15**

*Audio 60 min ¢99 ........ ~~$1.99~~*
*Video 120 min $2.79......... ~~$3.99~~*
*Ladies Clothes $ 9.99........ ~~$14.99~~*
*Single Heart Clock $11.99 .......... ~~14.99~~*
*Double Heart Clock $17.00 .......... ~~24.99~~*
*Classical Art Clock $29.99 ........ ~~39.99~~*

# யாழ்ப்பாணம் சென்ற ஆரியரத்தினா சமாதான முயற்சியில்...

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் வரவேற்பு

சமீபத்தில் சர்வோதயத் தலைவர் ஆரியரத்தின யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தது. தனது நண்பரான கே.நேசையா சமீபத்தில் மரணமானதை ஒட்டி ஞாபகார்த்த வழிபாடுகளில் கலந்து கொள்ளவே சென்றார். இவருடன் இவரது மனைவியும் சென்றிருந்தார். அத்துடன் அங்குள்ள சர்வோதய நடவடிக்கைகளையும் இவர் பார்வையிட்டிருந்தார். இவரும் ஆயர் கென்னத் பெனாண்டோவும் சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்ற போது சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாக செய்திகள் வந்தன. ஆயினும் இருவரும்வேறு காரணங்களுக்காகவே சென்றிருந்தனர்.

பிரேமதாசா காலத்தில் ஆரியரத்தினாவை தனது ஜனாதிபதி வேட்புமனுவை ஆதரிக்கும்படி பிரேமதாசா கேட்ட போது அதற்கு அவர் மறுத்திருந்தார். அத்துடன் ஆரியரத்தினா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடும் என்ற அச்சமும் பிரேமதாசாவுக்கு இருந்தது. இந்த கோபங்களால் தான் பதவிக்கு வந்ததும் முதல் வேலையாக சர்வோதயம் மீது சோதனைகள் இட்டதுடன் நெருக்கடிகளும் கொடுத்திருந்தார். அரச சார்பு தொடர்பு சாதனங்களும் சர்வோதய மீது மிகவும் மோசமான தாக்குதல்களை தொடுத்திருந்தன. பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் ஆரியரத்தின உற்சாகமாக கடமைகளில் ஈடுபடுகிறார்.

பிரேமதாசாவின் காலத்தில் ஆரியரத்தினவுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டது. தங்களுக்கான உதவிகளை அனுப்புவதில்லை என்று மக்கள் கூறி இந்த ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்ட போதும் இதற்கு புலிகளின் ஆதரவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த செய்தி அரச சார்பு பத்திரிகையான சண்டே ஒப்சேர்வரில் முன்பக்கச் செய்தியாக வந்திருந்தது.

தனது விஜயம் சமாதான நோக்கம் கொண்டதல்ல என்பதை வலியுறுத்திய ஆரியரத்தின நேசையாவின் கிரியைகளில் கலந்து கொள்ளச் சென்றாலும் யாழ்ப்பாணத்து நிலைமையை அறிய ஒரு காரணியாக அதைப் பாவித்ததாக கூறினார். விமானத்தில் பலாலி சென்ற இவர் அங்கிருந்து காங்கேசன்துறை சென்று பின்னர் பருத்தித்துறைக்கு கப்பலில் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றார். பலாலி விமான நிலையத்தில் தான் ஆயர் கென்னத் பெனாண்டோவைச் சந்தித்து இருவரும் ஒன்றாகவே பருத்தித்துறை சென்றார்கள்.

பருத்தித்துறையில் பத்திரிகையாளர்களும் சர்வோதய பணியாளர்களும் இவர்களை வரவேற்றனர். புலிகளின் சுங்கப் பகுதியில் இவர்களது பைகள் சோதனையிடப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் இவர்களை மக்கள் சூழ்ந்து கொண்டதுடன் 'தாங்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல, சமாதானமாக வாழ்வோம், எல்லாப் பிரச்சனைகளும் யுத்தம் இல்லாமலே தீர்க்கப்படலாம்' என்றும் சொன்னார்கள். சந்தியோகுமையோர் ஆலயம் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்ட போது யேசுவின் சுருபம் பாதிப்புறாமல் இருப்பதைப் பற்றி கூறிய மக்கள் எல்லா மதத் தலைவர்களும் தலையிட்டு இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

நல்லூரில் இவர்களின் வருகையை ஒட்டி தங்கம்மா அப்பாக்குட்டி ஒழுங்கு செய்த விசேட பூசை நடைபெற்றது. தங்கம்மா அப்பாக்குட்டி முன்பு சர்வோதய விருது பெற்றவர்.

வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்ட அவர் அங்கு சிகிச்சை பெறும் சிங்கள இராணுவத்தினரையும் பார்வையிட்டார். அவர்களுக்கு காவலாக நின்ற சிறுவன் அவர்களிடம் நெருக்கமாக பழகுவதுடன் அவர்களிமிருந்து சிங்களமும் கற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர் புலிகளின் தலைமையகத்திற்கு சென்று அங்கு புலிகளுடன் நான்கு மணி நேரம் பேசினார். ஆயினும் தான் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று அவர்களுக்கு கூறியதாக ஆரியரத்தின தெரிவித்தார். அவருடன் கரிகாலன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். குண்டு வீச்சுக்களை நிறுத்த வேண்டும், பொருளாதார தடை நீக்கப்பட வேண்டும், குடாநாட்டுக்கு வெளியிலான போக்குவரத்து அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை புலிகள் முன்வைத்தனர். இந்த கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு ஆரியரத்தினவிடம் கொடுக்கப்பட்டன. கொழும்பு சென்ற ஆரியரத்தின ஜனாதிபதியைச் சந்தித்து இந்த கோரிக்கைகள் பற்றி தெரிவித்தார். கரிகாலன் இந்த கோரிக்கைகளை ஒலிப்பதிவு நாடாவில பதிவுசெய்து அனுப்பியிருந்தார். அதில் உள்ளவை தமிழில் இருப்பதால் என்ன கோரிக்கைகள் என்று தமக்குத் தெரியாது என்று சர்வோதய அதிகாரி ஒருவர் கூறினார்.

புலிகள் உண்மையாகவே சமாதான நோக்கில் உள்ளார்கள் என்று ஆரியரத்தினா நம்புவதாக அந்த அதிகாரி கூறினார்.

புலிகளும் தங்கள் வானொலியில் அரசாங்கம் தடைகளை நீக்கி யுத்த நிறுத்தம் செய்தால் தாம் பிடித்து வைத்துள்ள இராணுவத்தினரை விடுவிப்பதாக புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

## நானும் எருதும்



அதை அவன் விலை கொடுத்து வாங்கினன்.
இவரை நான் விலை கொடுத்து வாங்கினேன்.

அதுக்கு மூக்கணாங் கயிறு
போடப்பட்ட போது
எனக்கு மூக்குத்தி
குத்தப்பட்டது.....

அதன் கால்களுக்கு லாடன்
அடிக்கப்பட்ட போது
என் பாதங்களுக்கு
மருதாணி போடப்பட்டது

அதற்கு குறி வைக்கப்பட்ட போது
எனக்கு பட்டாடை அணிவிக்கப்பட்டது


அதன் கால்களுக்கு சங்கிலி மாட்டப்பட்டபோது
என் கால்களுக்கு கொலுசு மாட்டப்பட்டது

அதன் கழுத்தில் நுகம் மாட்டப்பட்ட போது
என் கழுத்தில் தாலி கட்டப்பட்டது...
மொத்தத்தில் ..........
வாழ்க்கை எனும் வண்டியை இழுத்துக்
கொண்டிருக்கும் எருதுகள் நாங்கள்

**ஜி. மொனிக்கா**

## கொடிது.. கொடிது.....

வந்த காலம் மறைந்தது என் வாழ்வில்
இலையுதிர்காலம் எழுந்தது
என்றோ தொலைத்து விட்ட
அந்த நாட்களை இன்றும் தேடி
என் நிகழ்காலம் கழிகிறது
அப்போதெல்லாம் என்
அழகு பாவையரைப் பற்றி இழுக்கும்
அவர்கள் பார்வையை அலட்சியம் செய்து
எட்டி நடப்பேன்
காதல் கடிதம் தந்த கன்னிக்கு
கடிதத்திலேயே கப்பல் செய்து
காற்றில் எறிந்தேன்
இளமையின் இளமை
அப்படி என்னை ஆட்டுவித்தது
இன்று இளமையில் முதுமை
காலம் கரைகிறது
கொடிது கொடிது
இளமை கொடிது
அதனினும் கொடிது
இளமையில் முதுமை



**கலாமலர் நடராசா**

## பெண்ணென்று கண்டேன்

இந்தப் பெட்டகத்துக்குள் பூட்டி வைத்த முத்துக்களை
ஒரு முறை சிந்திவிட்டேன்
ஆசை தீர அள்ளிக் கொள்கிறேன்

இல்லை இந்தக் கண்களை வைத்துக் கொண்டு
மை தீருமட்டும் கவிதையெழுதிவிடவா

புன்னகை வழிந்தோடும் அந்தக் குழிவிழும்
கன்னங்களில் ஒரு தேனியாக
நான் வந்து உட்காரவா

இல்லை இதமாக இதழோரம் மெதுவாக
இதழ் சேர்த்துப் பசியாறவா
எனக்கு பிரம்மன் மீது ஆத்திரம்
நீ ஒருத்தியை மட்டும்
அவன் இப்படிப் படைத்ததற்காய்

உடலுக்குத் தெரியாமல் உயிருக்குள் புகுந்துவிடும்
வித்தையை நீ எங்கு கற்றுக் கொண்டாய்?
கொஞ்சம் சொல்லிக் கொடேன்

உன் மடி மீது தலை சாய்த்து என் விரல்களால்
உன் பஞ்சுக் கரங்களுடன் கதைபேச ஆசை

இருட்டறையின் உன் வதனத்து நிலவொளியில்
உட்கார்ந்துன் கதை கேட்க ஆசை

என் கரு மணியூடு உனை முழுவர்ணப் படம்
பிடித்து வைத்திருக்கிறேன், எனக்காக மட்டும்

மூச்சுக் காற்றுக்கே சுகந்தம் தருகிற மலர்நீ
உன் இதழ்களின் அழகையே இதயமும்
கொண்டிருக்க ஆண்டவனை இரஞ்சுகிறேன்.

**பவான்**

## ஜாக் பிறவேரின் கவிதைகள்
### தமிழில்; க. கலாமோகன்

வஞ்சிக்கப்பட்ட காதலர்கள்
என்னிடம் ஒளி இருந்தது
உன்னிடம் விளக்கு இருந்தது
திரியை எரித்தது யாரோ?

நல்ல பாடல் அது. காதால் கேட்க நல்லா இருக்கிறது. ஆனால் கருத்தைக் கேட்க.. கருத்தா? அது எதுக்கு?

"காக்கா கூட்டத்தைப் பாருங்க— அதுகள் கத்துக் கொடுத்ததைப் பாருங்க"

இதில் பொதிந்துள்ள அர்த்தத்தை அவதானித்தீர்களா?

"காக்கா கூட்டமா ...டேய் இவன் முஸ்லீம்களுக்கு சப்போட் பண்ணுறுன்டா... அடடா...."

"அப்பா ...இல்லையப்பா.. நான் சொல்ல வந்தது வேறை அப்பா?"

இந்தப் பாடலை எழுதியவரோ அல்லது பாடியவரோ படத்திலே வாயசைத்து நடித்தவரோ அல்லது அதை இரசித்துப் பார்த்த நாங்களோ கூட அதன் அர்த்தத்தை உளமார உணரவும் இல்லை: அதன்படி நடக்கவும் இல்லை. எங்கு பார்ப்பினும் பிரிவுகள்.. ஒருபுறம் நாடு அபேஸ் ஆகிக்கொண்டிருக்க அதை உணராது மறுபுறம் ஒரு துண்டு "பீடி"க்காக அடிபட்டுக் கொள்வோம்., அதில் "புறநானூறு" தந்த வீரத்தைப் பதித்துக் கொள்வோம்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்.. மன்னிப்போம்.. மறப்போம்" என வீரவசனம் பேசுபவர்கள் மேடையில் இருந்து இறங்கியதும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு சேறடிக்கும் அடிக்கும் காட்சிகளை தமிழ் சமூகம் காலத்துக்கு காலம் கண்டு கொண்டிருக்கிறது. அந்தக கண்கொள்ளாக் காட்சிகளை கனடாவும் காணும் பாக்கியம் பெற்றுவிட்டது. ஆனால் நாம் "மனிதம்" அழிந்து விடாமல் பாதுகாக்கிறோம் என்பது உண்மை. அதை தொல்பொருட் காட்சிச்சாலையில் பத்திரமாக பார்வைக்காக வைத்திருக்கிறோம்.

குடும்பப் பிரச்சனையோ— சமூகப் பிரச்சனையோ— சமயப் பிரச்சனையோ— சங்கப் பிரச்சனையோ சாத்திரப் பிரச்சனையோ அல்லது இலக்கியப் பிரச்சனையோ எதுவானாலும் சுமூகமான தீர்வுக்கு இப்படி ஒரு வழியைச் சொல்லிப பாருங்கள்.

"காய்தல் உவத்தல் இன்றி எல்லாரையும் கூப்பிட்டு எல்லார் கருத்துக்களையும் ஆராய்ந்து அலசி சமூகத்துக்கும் எல்லாருக்கும் பிரயோசனமாக தீர்வை எடுக்கலாமே....."

# "ஒண்ணு இருக்க கத்துக்கணும் - இந்த உண்மையைச் சொன்னு ஒத்துக்கணும்"

**சிவப்பிரகாசம்**

இதற்கு எம் சமூகத்தில் இருந்து எவ்வாறான பதில் வரும் என எதிர்பார்க்கிறீர்கள்?

"உவங்களைக் கூப்பிடறதோ? உவங்களுக்கு என்ன தகுதி இருக்கு. உவனக் வாறதெண்டால் நான் வரமாட்டன். என்னிலை பிழை நினைக்காதேங்கோ."

இவ்வாறான பதிலை கேட்ட ஞாபகம் இருக்கும். சொன்ன ஞாபகம் வேறு சிலருக்கு இருக்கும். பொது நன்மைக்காக சுயவிருப்பு வெறுப்புகளை தற்காலிகமாகக் கூட மறப்பதற்கு விரும்பாத இந்த இயல்பு நமக்கு ஏன்? இப்படியே போனால் எமது இனம் எங்கோ போய் நிற்கும் என சிந்திப்போமா? எமது சொந்த நன்மைக்காக இன்றைய இளம் சந்ததியினரை வன்முறையிலும் அராஜகத்திலும் நம்பிக்கை கொள்ள வைக்கிறோமே, இதன் விளைவு எதிர்காலத்தில் எமது இனத்துக்கு எவ்வளவு கெட்ட பெயரை இந்த நாட்டில் ஏற்படுத்தும் என எண்ணிப்பார்க்கிறோமா?

எதிரான கருத்துகள், எதிரான கருத்து உடையவர்கள், தம் கருத்துக்கு உடன்படாதவர்கள், எதிர் முகாமில் இருப்பவர்கள்— இவர்கள் எல்லாம் "எதிரிகள்" என்ற கோதாவில் பார்வையை செலுத்துவது இப்போ சகஜமாகி விட்டது. அவங்க என்ன சொல்லிருங்க என விளங்க முன்பு "அவங்க அப்படித்தான் சொல்லியிருப்பாங்க" என முடிவெடுப்பது ஒரு ஸ்டைல் ஆக வந்து விட்டது. உதாரணத்துக்கு ஒன்று. சிலர் தாயகம் வாசிப்பதில்லையாம். காரணம் அது தமிழரின் போராட்டத்துக்கு எதிரானதாம். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் எமது நிரந்தர விடுதலைக்கு தாயகம் போன்ற பத்திரிகையின் அவசியமும் புரிகிறது. படைச்ச பிரமதேவன் வந்து "தெரியாமல் சில இயல்புகளை உள்ளே வைத்து விட்டேன். அதை மீள எடுக்க விரும்புகிறேன்" என கெஞ்சினாலும் திருப்பிக் கொடுக்க யாராவது முன்வந்தால் நம்தமிழர் சரித்திரத்தில் அது பொன்னான நாள்.

"ஒண்ணு இருக்க கத்துக்கணும்— இந்த உண்மையைச் சொன்னு ஒத்துக்கணும்


**கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள**

**மாஜி 796 2672**

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**Net, Colorful Flower Bouquet, Flower Basket**

# சிறைவாசம் அனுபவிப்பது சரியான குற்றவாளியா?

## விழிப்பு - பெண்கள் அமைப்பு

அருந்ததி சிறிஸ்கந்தராஜாவின் கிறிமினல் வழக்கு தீர்ப்பு 6 வருட சிறைவாசம் என பெப்பிரவரி 4ம் திகதி 361 யுனிவர்சிட்டி அவனியுவிலுள்ள பொதுப்பிரிவு நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது. எதிர்தரப்பு (அருந்ததியின் தரப்பிலான) வக்கீலான கத்ரீன் மக்லவுட் எவ்வகையான மனம் சோர்வுற்ற நிலையில், வேறு வழியின்றியே தன்னையும் அழித்து குழந்தைகளையும் அழிக்க அருந்ததி முடிவெடுத்தார் என்று கோர்ட்டாருக்கு ஞாபகமூட்டினர். அத்துடன், இவர் ஏறத்தாழ 2 வருடங்கள் சிறைவாசம் இருந்த மெட்ரோ மேற்கு தடுப்புக் காவல் நிலைய அதிகாரிகளின் வாக்குமூலம் அடிப்படையில் அருந்ததி ஆரம்பம் முதல் இன்றுவரை தன் குழந்தைகளை எண்ணி மனம் கசிந்து அழுவதையும் தனக்குக் கிடைக்கக்கூடிய மிகக் கொடிய தண்டனை கிடைப்பதில் தவறில்லை என கூறியுள்ளதையும் சுட்டிக் காட்டினர். மிகப்பயங்கரமான குற்றவாளிகளை வைத்திருக்கும் தனிக்காவல் அறையில் தன்னை வைக்குமபடி அருநததி மீண்டும் மீண்டும்கேட்டும், அவரை 57 பேர் பகிர்ந்து கொள்ளும் பாதுகாப்புடைய காவல் அறையில் (protective custody) அவருடைய நன்மை கருதியே வைத்திருந்தார்கள் என்றும் காவல் அதிகாரி நான்சி யங் சாட்சி கொடுத்தார். இதில் கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில் எவருடைய கணிப்பின் அடிப்படையில் எது சிறந்த காவல் முறை எனத் தீர்மானிக்கப்பட்ட முறையே. பல்வேறுபட்ட சாதி, மத, மொழி, பாலியல் ஈடுபாடு வேறுபாடுடைய பெண்களுடன் அறையை பகிர்ந்து கொள்வதை விட நிம்மதியாக நான்கு சுவர்களுடன் மட்டும் தன் சிறைவாசத்தை கழிக்க அருந்ததி விரும்பியதை காவல் அதிகாரிகள் கருத்தில் கொள்ளவில்லை. அவருக்கு எது சிறந்தது என்பது அவரைவிட அவர்களுக்கே தெரிந்திருந்தது ஆச்சரியமாக இல்லை?

அருந்ததியை சந்தித்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர் கூறியது, "வக்கீல் இருந்தால்தான் என் பிள்ளைகளை கடைசியாக ஒருமுறை மரணச்சடங்கில் பார்க்க விடுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே வக்கீல் அமர்த்துவதற்கு உடன்பட்டேன்" ஆனால் கோர்ட்டில், அவரது வக்கீல், அருந்ததியின் நன்மை கருதியே அவரை மரணச்சடங்கில் கலந்து கொள்ள தாம் அனுமதிக்கவில்லை என எடுத்துக்காட்டிய போது எனக்குள் பல கேள்விகள் எழுந்தன. ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக தீர்மானங்கள் எடுக்க எமக்கு என்ன அதிகாரம் உண்டு? இந்த அதிகாரம் எப்போது உரிமை மீறலாக அல்லது உரிமை துர்ப்பிரயோகமாக பரிணமிக்கிறது?

★ மகள் அல்லது சகோதரி வேண்டாம், வேண்டாம், எனக் கதற அவள் நன்மை கருதி திருமணம் நடத்திவைக்கும் பெற்றோர், சகோதரர்கள்,

★ மனைவி தற்போது வேண்டாம் அல்லது இந்தமுறை இருக்கட்டும் என கருத்தரித்தல் பற்றி அபிப்பிராயப்படும்போது அவள் விருப்பத்திற்கு மாறாக கருத்தரிக்கவோ அல்லது கருவை அழிக்கவோ தீர்மானிக்கும் கணவன்மார்கள்,

★ கணவனால் துன்புறுத்தல் என சாடைமாடையாகக் கூறும் சினேகிதிக்கு சகோதரிக்கு உதவி செய்வது குடும்பவிடயத்தில் தலையிடுவதாக முடியும் என அவள் நன்மை கருதி வாளாவிருக்கும் நண்பர்கள், சகோதரர்கள்,

என்னைப் பொறுத்தவரை, மேற்கூறிய உதாரணங்களின் படி சொந்தங்கள் தந்த உரிமைகளை, நாம் எடுக்கும் முடிவுகள் மூலம் துர்ப்பிரயோகம் செய்கிறோம்.

அரசு தரப்பு வக்கீல் தனது வாதத்தின் முடிவுரையாக அருந்ததியின் நிலைமை மோசமானதாயிருந்தாலும் அவர் உதவி பெற எதுவித முயற்சிகளும் எடுக்கவில்லையென குற்றம் சாட்டினர். அவர் கருத்துப்படி அருந்ததி வீட்டில் கண்டெடுக்கப்பட்ட சமூக சேவையாளர் (ஆங்கிலம் மட்டும் பேசும்) அறிமுக அட்டையும் கணவனின் தாக்குதல் ஒன்றின்பின் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது கொடுக்கப்பட்ட மனோதத்துவ வைத்தியர் (தமிழ் பேசுபவர், ஆண்) அட்டையும் அவளுக்கு உதவி பெறக்கூடிய மூலங்கள் இருந்தும் அவர் உதவியை பெற முயற்சிக்கவில்லையென்பதையே காட்டுகிறது என்று சாடினர். அருந்ததியின் கருத்துப்படி, இரு குழந்தைகளுடனும் தான் வெளியில் போய் உதவி பெறுவது எவ்வளவு கடினமானது என்பதை சமூக சேவையாளர் யோசிக்கவில்லையா? அவரது கையிலிருந்த தகவல்படி நான் தனிமையாக இரண்டுகுழந்தைகளுடன் அதுவும் உடல் இயக்கமற்ற ஒரு குழந்தையுடன் கஷ்டப்படுகிறேன் என அவர் யோசித்து ஒருமுறையேனும் தொலைபேசியில் என்னை விசாரிக்கவில்லை, அவரால்தான் முடியாவிட்டால் இவ்வாறு உதவிகளை செய்ய சேவைகள் உண்டு (வீடுகளுக்குச் செல்லும் பொதுமருத்துவ நர்ஸ்) என்பதை அவர் அறிந்திருக்கவில்லையா, அவர் ஏன் முயற்சிகளெதுவும் எடுக்கவில்லை என்பதே! இது எதை சுட்டிக்காட்டுகிறது என்றால் வழங்கப்படும் சமூக, மருத்துவ பொலீஸ்

சேவைகளுக்கிடையில் ஒருங்கிணைத்த, பொறுப்பான தொழிற்பாடு இல்லையென்பதையே.

பொதுவில் அருந்ததியை போல் துன்புறும் பெண்கள் வைத்தியர் பொலீஸ் இடம் ஒரு முறை உதவி பெற்றிருந்தால் அச்சேவைகள் பெண்கள் நலனை கவனிக்கும் சேவைகளுடன் இணைந்து தொடர்ந்து கண்காணிக்கும், உதவிகள் சென்றடையும் வழிகளை கையாளும் யுக்திகளை பயன்படுத்தியிருக்கலாம், பயன்படுத்த வேண்டும், ஏனெனில் உதவிக்கு எங்கு போவது என்று தெரியாத நிலையில் பெண் அறிந்துள்ள ஒரே ஒரு விடயம் 911ஐ அழைப்பதே இச்சந்தர்ப் பத்தில் பொலீஸ் பெண்கள் சேவைநிலையங்களுடன் இணைந்து பாதுகாப்பு மட்டுமல்ல, தொடரும் சேவைகளை வழங்கினால் துன்புறும் பெண்களுக்கு ஆக்கபூர்வமான உதவிகள் சென்றடைய வழிகள் உருவாகும்.

எதிர்தரப்பு வக்கீல் தனது பதிலில் வைத்தியசாலையில் கணவனும் சேர்ந்து ஆலோசனை பெறவேண்டும் என குறிப்பிட்டு இருந்ததாகவும் அருந்ததியின் கணவன் இதுசம்பந்தமாக எதுவித முயற்சியும் பொறுப்பும் எடுக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டினர். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் பொதுவில் துணைவரின் துன்புறுத்தலை பற்றி அறியும் உறவினர்கள், நண்பர்கள், மதசார்பான தலைவர்கள் எல்லோரும் மனைவிக்கு புத்திமதி ஆலோசனை கூறுவதில் முனைப்பாக இருக்கிறார்கள், குற்றவாளியை விட குற்றம் இழைக்கப் பட்டவரையே மாற்றங்களை செய்யும்படி தூண்டுகிறார்கள். இம்மாற்றங்கள் பொதுவில் துன்புறுத்தலுக்கு துன்புறுத்தப படுபவரே காரணமாக இருக்கிறார் என்ற எண்ணப்பாட்டின் அடிப்படையில் முன்வைக்கப் படுகின்றன. அத்துடன் மருத்துவ துறைகூட ஏறக்குறைய இதே எண்ணப்பாட்டின் அடிப்படையில் இயங்குவதை காணலாம் பொதுவில், தொடர்ந்து துணைவரால் துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்கள் பாதிப்பின் விளைவாகத் தோன்றும் வயிற்று மார்பு, முதுகு வலி, கைகள், கால்கள் தற்காலிக இயக்கமிழப்பு தலையிடி, சோர்வு, தூக்கமின்மை ஆகிய அறிகுறிகளுக்கும் வைத்திய உடலியல் அறிகுறிகளாக கணிக்கப்பட்டு தூக்க மாத்திரையோ வலிநீக்கல் மாத்திரையோ மட்டும் பெறுகிறார்கள் அக்கறையுள்ள குடும்பத்தினர் நண்பர்கள் ஏன் சில சமூக சேவையாளர்களும் கூட "இன்னும் கொஞ்சம் முயற்சி எடு, அலங்காரத்தில் கவனம் எடும், கணவன் கோபம் கொள்ளாதபடி விட்டுக்கொடு" என்றுஉயிர் வாழும் (வதைபடும்) அறிவுரைகள் சொல்கிறார்கள் இவையெல்லாம் முன்குறிப்பிட்டபடி பிழை மனைவி பேரில்தான் என்ற எண்ணப் பாட்டை வெளிக்காட்டுகின்றன. அரசுதரப்பு வக்கீல் இதே போக்கில்தான் அருந்ததி கொஞ்சம் முயற்சி எடுத்திருந்தால் இந்த குழந்தைகளின் சாவு தவிர்க்கப் பட்டிருக்கலாம் என்றுவாதாடினர். திருமணமான ஒரு மாதத்திலேயே அவர் பிறந்த வீட்டிற்கு வர அழுது கெஞ்சியதும் முதல் குழந்தை பிறந்து 40 நாட்களில் பட்ட சுமையை தாளாமல் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லுங்கள் என்று பெற்றோரை கெஞ்சியதும், கனடாவில் தொடரும் இம்சைகளைத் தாளாமல் சகோதரியை வந்து தன்னை மொன்றியால் அழைத்துச் செல்லும்படி தொலைபேசியில் கெஞ்சியதும் முடிந்தால் இலங்கைக்கு விமானச்சீட்டு வாங்கித் தரும்படி கெஞ்சியதும் தனக்குத் தெரிந்த எல்லா வழிகளிலும், உதவுவார்கள் என்று நம்பினவர்களிடம் உதவி கேட்டதை காட்டவில்லையா? இதைவிட மொழி தெரியாத சமூக சேவையாளரிடமும் மனோதத்துவ வைத்தியரிடமுமா அவர் உதவி கேட்டிருக்கலாம்?

தொடர்ச்சியாக அருந்ததி கணவன் மூலமும் கணவன் வீட்டார் மூலமும் அனுபவித்த துன்புறுத்தல்களின் சான்றுகளை எதிர்தரப்பு வக்கீல் தெளிவாக முன்வைத்த போதும், அரசு தரப்பு வக்கீல் தனது முடிவுரைகளில் இவ் அனுபவங்கள் கணவன் மனைவிக்கிடையிலான வெறும் பேதத்தை Mental discord காட்டுகிறது எனக்குறிப்பிட்டது. சமூகரீதியில் மட்டுமல்ல சட்டதுறையிலும் நிலவும் பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய விளக்கமின்மையை வெளிக்காட்டுகிறது. இது விளக்கமின்மை மட்டுமல்ல, உண்மைக்கு முகங்கொடுக்க மறுக்கும் பிடிவாதமுமே 1983 ல் கனேடிய சட்டசபையில், பெண்களுக்கெதிராக ஆண்கள் மேற்கொள்ளும் வன்முறைக் கெதிராக சட்டங்கள் உருவாக்கப் படவேண்டும் என்ற 'புரட்சிகரமான' கருத்து முதல் முதலில் தெரிவிக்கப்பட்டபோது, கிடைத்த பதில் சட்டசபையெங்கும் எதிரொலித்த சிரிப்பொலிதான். பத்து வருடங்களின் பின்பு கூட இந்த போராட்டத்தில் நாம் பெரிய வெற்றிகளெதும் ஈட்டவில்லை.

பல்லாண்டுகளாக அனுபவிக்கும் துன்புறுத்தல்களுக்கு முடிவு காண வேறு வழி தெரியாது, தற்கொலை முயற்சியோ அல்லது துன்புறுத்தலுக்கு காரணமான நபரைத் தாக்க முயற்சியோ எடுக்கும் போது, பெண் மூளைப்பிசகினால், பின்புத்தியால், கிஸ்தீரியா எனப்படும் மூளைக்கோளாறினால் பொருத்த மற்ற, மிதமிஞ்சிய நடவடிக்கையில் இறங்குகிறாள் என்பது சட்ட, சமூக மருத்துவியலாளரின் ஒன்றுபட்ட கணிப்பு, இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், இத்துறைகளில் பாண்டித்தியமும், ஆராய்ச்சி அனுபவமும் பெற்றவர்களாக பெண்ணைப்பற்றி எழுதுபவர்கள் பெரும்பாலும் ஆண்களே.

தன்னம்பிக்கையின்மை தடுமாற்றம், விளக்கமுடியாத பயம், குழப்பம் ஆகிய சில துன்புறுத்தலின் பக்கவிளைவுகள்,

**25ம் பக்கம்பார்க்க..**

# 128 தற்கொலைகள் இடம்பெற்ற கிராமம்

**ஆக்கம்: நந்தன வீரரத்ன உதவி: வஜிர கஸ்தூரி**
**நன்றி: ராவய 1994 பெப்ரவரி 06**
**தமிழாக்கம் செ. லோகநாதன்**

இலங்கையின் சமூகப் பிரச்சனைகள் மத்தியில் தற்கொலைகள் உச்ச ஸ்தாபனத்தை அடைந்துள்ளதாக தெரிகிறது. நாடு துரிதமாக அபிவிருத்தியை நோக்கிச் செல்கிறது என்பது எவ்வாறு யினும் அது வேகமாக வறுமையை நோக்கித் தள்ளப்படுகிறது என்பதையே இத்தற்கொலைகள் காட்டுகின்றன. தற்கொலைகளைப் பொறுத்த வரையில் இலங்கையே உலகத்தில் முதலாவது இடத்தை வகிப்பதாக பேராதனை பல்லைக் கழக மருத்துவ பீடத்தால் செய்யப்பட்ட ஆய்வு வெளிப் படுத்துகிறது. குருநாகலை மாவட்டத்திலுள்ள கொக்கரல்ல என்னும் கிராமத்தில் கடந்த 1993ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையும் 128 பேர் தற்கொலை செய்துள்ளனர். அப்பிரதேசத்தில் இடம் பெற்ற தற்கொலைகள் தொடர்பாக சேகரித்த தகவல்களைக் கொண்டே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

மத்தியகிழக்கிலிருந்து வந்த உடனேயே அவள் தனது மகளால் தனக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இருந்த விடயத்தைப் பற்றி விபரம் அறிய முற்பட்டாள். 13 வயதான தனது ஒரே மகள் தாயாகும் நிலையில் உள்ளாள் என்பது அவளுக்கு தாங்க முடியாத வேதனையை அளித்தது. அவள் மகளை அருகில் அழைத்து அமைதியாக கேட்கிறாள் 'யார் உன்னுடைய வயிற்றில் உள்ள குழந்தையின் தகப்பன் ....? உண்மையைச் சொல்லு, உனது நன்மைக்காகத்தான் நான் கேட்பது, நடந்த விஷயங்கள் நடந்தவைதான், உன்னை அந்த மனுஷனுக்கு கட்டிக் கொடுக்கத் தான் கேட்கிறேன்'

தாயின் தொந்தரவு, எச்சரிக்கை எதுவுமே மகளின் மனதை அசைக்கவில்லை. மகள் எவ்வித பதிலும் இன்றி அழுத வண்ணம் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இறுதியில் தாய் மகளையும் கூட்டிக் கொண்டு பொலீசுக்குச் சென்றாள்.

இத்துரதிஷ்டமான குடும் பத்தில் நால்வர், நடுத்தர வயதுடைய பெற்றோர், 16 வயது மகன் 13 வயது மகள் மட்டும்தான். பணம் சம்பாதிப்பதற்காக மத்திய கிழக்குக்கு செல்ல வேண்டும் என்றிருந்த பயணத்தை தாய் பிற்போட்டதும் இம்மகளுக் காகத்தான். பருவம் அடைய வேண்டிய வயதில் இருக்கும் தனது மகளை விட்டு மத்திய கிழக்கு செல்ல தாயால் முடியவில்லை. இறுதியாக மகள் பருவம் அடைந்த பின்னர் தாய் மத்திய கிழக்குக்குச் சென்றாள். நன்றாக வளர்ந்திருந்த பிள்ளைக்கு தான் இல்லாவிட்டாலும் வேலைகளைக் கவனிக்கலாம் என்ற பின்னர்தான் பயணத்துக்காக அவளது மனம் இடம் கொடுத்தது.

மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு ஒரு வருடகாலம்தான் அவளால் மத்திய கிழக்கில் இருக்கமுடிந்தது. மகளால் அனுப்பப்பட்ட கடிதத்தில் அவளைப் பீடித்துள்ள 'நோயின்' அடையா ளங்கள் குறிப்பிட்டப்படிருந்தன. தாய் உடனடியாக மத்திய கிழக்கு தொழிலை கைவிட்டு வீட்டுக்கு வந்தாள். 13 வயது மகள் எவ்வாறு தாய்மையை அடைந்தாள் என்பதை அறிய தனியாகவே முயற்சித்தாள். அம் முயற்சி தோல்வியில் முடிந்ததாலேயே அவள் மகளுடன் பொலீசுக்கும் சென்றாள்.

தாயின் கதையைக் கேட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் பிள்ளையைத் தனியாக கூட்டிச் சென்று கதைத்தனர். ஆனால் அவளோ எதுவுமே கூறவில்லை. இறுதியில் அவர்கள் தமது 'பொலீஸ் சம்பிரதாயத்தை' ஆரம்பித்தனர். சப்பாத்துக்காலால் நிலத்துக்கு உதைந்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தினர். அச்சுறுத்தல்கள் அதிகரித்தன. பீதியடைந்த பிள்ளை இறுதியாக வாய் திறந்தாள். "சேர்.. நான் குழந்தை பெற இருக்கிறேன் என்பதை அம்மா கூறிய பின்னர்தான் தெரிந்து கொண்டேன். ஆனால் இந்தக் குழந்தையின் அப்பா எனது அப்பாவா அல்லது அண்ணனா என்பதை நான் சரியாக அறிய மாட்டேன்...."

பொலீஸ் உத்தியோ கத்தர்கள் ஆச்சரியத்துடன் பார்க்கும் போது தாயும் மகளும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு தேம்பி அழுதனர். அழுவதற்கு கண்ணீர் இல்லாமல் போன பின்னர் அவர்கள் வீட்டுக்குச் சென்றனர். மறுநாள் அவ் வறிய கிராமத்தில் சூரியன் உதயமாகும் போது நான்கு மாத கர்ப்பிணியான 13 வயதுச் சிறுமியும் அவளின் தந்தையும கிருமிநாசினியைப் பருகி தீர்வைத் தேடிக் கொண்டனர்.

நாம் தகவல் சேகரிக்கச் சென்ற குருநாகலை மாவட்டத்தின் தற்கொலை தொடர்பான பட்டியலில் இது ஒரு கதை மட்டுமேயாகும். பூரணத்துவமான புள்ளி விபரங்களைப் பெறமுடியாத குருநாகலை மாவட்டத்தின் தற்கொலைப் பட்டியலில் கொக்கரல்ல பொலீஸ் பிரிவில் இடம் பெற்ற தற்கொலைகளே மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. அக்கிராமத்தில் 1993ம் ஆண்டில் மட்டும் 128 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இது உயிர் இழந்தோர் தொகைமட்டும் தான். தற்கொலை முயற்சி பற்றிய புள்ளி விபரங்களைப் பெறுவது கடினமாக இருந்தது. சில முயற்சிகள் தோல்வியில் முடிந்ததோடு விடயம்

வீட்டோடு இரகசியமாகவும் உள்ளது. சில முயற்சிகள் வைத்தியசாலை வரைச்சென்று அங்கிருந்து நீதிமன்றம் வரை போயுள்ளது. மேலே கூறப்பட்டது மிக அண்மையில் இடம்பெற்ற இரு தற்கொலைகள் பற்றிய கதையேயாகும்.

குடிகாரக் கணவனையும் மூன்றுவயதுமகனையும்விட்டுதாய் பணம் சம்பாதிக்க மத்திய கிழக்கிற்குச்சென்றாள். இவள் இரு வருடங்களுக்குப் பின்னர் ஓரளவு நவீனமான பெண்ணாகவே இலங்கைக்குத் திரும்பினாள். குடிக்காக பணத்தை விரயம் செய்யும் துப்பரவு அற்ற அக்கணவன் இவ் வெளிநாட்டு பயணத்தின் பின்னர் அவளுக்கு வேண்டப்படவில்லை. ஆனால் அவளுக்கு தனது மகன் அவசியப்பட்டான். தான் பெற்ற மகனைப் பெறுவதற்காக அவள் ஆரம்பத்தில் கருணையான முறைகளைக் கடைப்பிடித்தாள் அம் முறைகள் பயனளிக்காததால் பயங்கரமாக மாறிய அவள் ஓரளவு குரூரமடைந்தாள். தான் மத்திய கிழக்கில் சம்பாதித்த பணத்தை அங்கும் இங்கும் வீசினாள். அப்போதுபொலீசாரும்அவளுக்கு உதவிக்கு வந்தனர். தாய் வெளிநாட்டில் இருக்கும் போது தான் ஊட்டி வளர்த்த பிள்ளையை வேண்டி தாய் பொலீசாருடன் வந்து கரைச்சல் கொடுத்ததால் தகப்பன் பயம் அடைந்தான். அவ்வாறே பிள்ளைப் பாசமும் தகர்ந்துபோன அன்பும் அவனுக்கு தாங்கிக் கொள்ள முடியாத மனித உணர்வாக இருந்தது. இறுதியில் அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். தான் தனது உரிமையாளனுடன் பரலோகம் செல்வதே அத் தீர்மானம் ஆகும். அவன் ஒரு நாள் இரவு தனது ஐந்து வயது மகனுக்கு விஷயம் பருக்கியதோடு தானும் விஷயம் அருந்தி உயிர் துறந்தான்.

உலகத்தில் எதுவுமே அறியாத கள்ளம் கபடமற்ற அந்தக் குழந்தை பெற்றோரின் பிணக்குக் காரணமாக உயிரை இழந்தது. கொக்கரல்ல பொலீஸ் பிரிவின் தற்கொலை தொடர்பான நீண்ட பட்டியலில் இரு மரணம் தொடர்பான கதையே இது.

கொக்கரல்ல பொலீஸ் பிரிவில் 88 வயது முதியவர் ஒருவர் வயோதிபத்தின் துணையில்லாத்தன்மையே தாங்கிக் கொள்ள முடியாமல் அபூர்வமான முறையில் தற்கொலை செய்துள்ளார். உணவோ வேறு வசதிகளோ இல்லாத அவர் ஒருநாள் இரவு கிராமத்துக்கு அப்பாலுள்ள காட்டுக்குள் இருந்த மலை மீது ஏறினார். அமைதியான மரணம் தன்னை நெருங்குமட்டும் உணவு ஏதுமின்றி தனியே மலையில் இருந்தார். இறுதியில் உணவு பானம் இன்றி உயிர் இழந்தார்.

வாரக்கணக்கில் மாதக்கணக்கில் இடம் பெற்ற பழைய தற்கொலை சம்பவங்களுடன் தொடர்பான மனிதர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் போது இத் தற்கொலைகளில் கூடுதல் விகிதாசாரம்குல ஒடுக்கு முறைக்கு உள்ளானவர்களையே கொண்டது என்பதைக் காண முடிந்தது. இலங்கையிலுள்ள கிராமங்களில் வாழ்பவர்களில் மிகுந்த ஒடுக்கு முறைக்கு முகம்கொடுப்பவர்களில் மிக அதிகமானவர்கள்குல ரீதியாக ஒடுக்கப்படுவர்களாகும் நிலப் பற்றாக்குறை, வேலை இல்லாத் திண்டாட்டம் கல்வி இன்மை ஆகிய அனைத்து தோசங்களும் இவர்களையே பீடித்துள்ளன. கடந்தகால அரசியல் கொடூரங்களின் போதும் இவர்களது பிள்ளைகளே கூடுதலாக உயிர் இழந்தனர். தற்போது செய்வதற்கு ஏதும் இல்லாத நிலையில் தற்கொலை செய்வதும் இவர்களது பிள்ளைகளேயாகும்.

"எங்கள் பிள்ளை அகால மரணம் அடைந்தாள். என்னதான் செய்வது? அவளுடைய ஆயுள் அவ்வளவுதான் அடுத்த பிறப்பிலாவது இவ்வாறு அகால மரணம் அடையாமல் இருப்பதற்காக அவள் பெயரில் புண்ணியம் செய்கிறோம்..."

வயலுக்கு சாப்பாடு கொண்டு வர தாமதித்த தனது 18 வயது மகளை ஏசிய போது மகள் தற்கொலை செய்து கொண்டாள். இவ் வேதனையில் இருக்கும் தாய்தான் எமக்கு இவ்வாறு கூறினாள். வயது வந்தவர்களில் அனேக மாணவர்களுக்கும் இளைஞர் களுக்கும் கூட தமது உறவினர்கள் ஏன் தற்கொலை செய்கின்றனர். என்பது விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர்கள் கண்ணீர் நிரம்பிய தமது இரு கண்களாலும் இருள் சூழ்ந்த எதிர்காலத்தையே காண்கின்றனர்.

தனது இளம் கர்ப்பிணி மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டிற்குச் சென்றது கணவனுக்கு தாங்கமுடியாத வேதனையை அளித்தது. மாலை நேரத்தில் இலாபகரமான மதுபானத்தை அருந்தி தனது மனைவிக்கு இழைக்கும் இம்சைகளை அவன் மறந்தான். காதலுக்காக அனைத்தையும் துறந்துவந்த அவள் மட்டுமே அவன் நினைவுக்கு வந்தது. அவன் ஏனைய நாட்களையும் விட அதிக அளவில் மதுபானத்தை அருந்தியதோடு கிறிசுக்கத்தி ஒன்றையும் இடுப்பில் செருகிக் கொண்டு தாய் வீட்டுக்குச் சென்றான். வீட்டுக்குள்ளேயே சென்று மனைவியை எச்சரித்தான் உடனடியாக தன்னுடன் வீட்டுக்கு வருமாறு கட்டளையிட்டான் அவள் வீட்டுக்குள் ஒளித்துக் கொண்ட போது அவளுடைய பெற்றோருக்கு கத்தியால் குத்துவதற்கு முயற்சித்தான். அவள் தனது பெற்றோரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவனுடன் செல்ல சம்மதித்தாள். ஆனால் அவள் வந்ததோ வீட்டுக்கு அருகில் இருந்த ஆழமான கிணறுக்குத்தான் 18 வயதான அவள் கொடுமையான தனது கணவன், தனது காதல் வயிற்றில் இருந்த 8 மாதக் குழந்தை அனைத்தையும் பழி தீர்ப்பதற்காக கிணற்றுக்குள் குதித்தாள். அவளுடைய முடிவைத் தாங்கிக் கொள்ள முடியாத வெறியில் இருந்த கணவனும் அதே கிணற்றுள் குதித்தான். மூன்று

மரணங்கள், ஒரே நேரத்தில் ஒரே கிணற்றுள்.

இலங்கையின் பாரதூரமான நெருக்கடிகள் கிராமங்களிலேயே காணப்படுகின்றன. நகரங்களில் ஊதிக் காண்பிக்கப்படும் அபிவிருத்தி என்னும் சிந்திய பால் குடிப்பதற்கான பாலாக மாறவில்லை. இன்று நகரங்களை மையமாகக் கொண்டு இயங்கும் இடது சாரிகளுக்கு இக் கிராமங்களில் உள்ள பாட்டாளிகள் தெரிவதில்லை. ஆனால் நிலமோ வேறு எவ்வித வாழ்க்கை வழியுமோ அற்ற இவர்கள் மார்க்ஸிச அர்த்தத்தில் பாட்டாளிகளே ஆவர். உடனடிப் புரட்சிக்கு பலிக்கு ஆள் திரட்டவே ஜேவிபியினரும் இவர்களை நோக்கிச் சென்றனர். இன்று அரசாங்கமும் இராணுவத்திற்கு ஆள் திரட்டுவதற்கான தகமையை 5ம் வகுப்பாக குறைந்து பலி கொடுக்க கொண்டு செல்லும் கடாய்களாக திரட்டுவதும் எஞ்சியுள்ள இவ் இளைஞர்களையேயாகும்.

தொழில் இல்லாத காரணத்தால் அவன் இராணுவத்தில் சேர்ந்தான். ஆனால் இவன் என்றைக்குமே யுத்தம் செய்த மனிதன் அல்ல. பயிற்சி பெற்று யுத்தத்திற்கு சென்று மூன்று மாதத்தில் அவனுக்கு இனத்தையும் நாட்டையும் பாதுகாப்பதோ தொழிலோ அவசியப்படவில்லை. அவன் விடுமுறைக்காக வீட்டுக்கு வந்தபோது மீண்டும் இராணுவத்திற்கு போகாமல் வீட்டிலேயே தங்கினான். அவனைப் பிடிப்பதற்கு பொலீசார் தொடர்ச்சியாக அவனது வீட்டுக்கு வந்தனர். இராணுவத்திற்குப் போய் மனிதர்களைக் கொன்று தனது உயிரைக் காப்பாற்றுவதை விட தற்கொலை செய்வது மேல் என அவன் எண்ணியிருக்கலாம். அவன் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டான். அவன் உயிர் இழக்கும் போது வயது இருபது இருக்கும்.

பாடசாலையில் சந்தித்த அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தனர். முதலில் அவர்களது காதல் இரகசியமாக இருந்தது. இருமலையும் காதலையும் மறைக்க முடியாது என நண்பர்கள் கூறினார்கள். இறுதியில் அவர்கள் வெளிப்படையாக காதலித்தனர். மகளின் காதல் விவகாரம் காதலியின் பெற்றோர் காதுக்கு எட்டியது. காதலுக்கு கண் இல்லை. ஆதலால் அதற்கு குல வேறுபாடு ஒன்றும் தெரியாது எனக் கூறிய பெற்றோர் இவ் ஆரம்பக் காதலை மறக்குமாறு வற்புறுத்தினர். அவளுக்கோ தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்தவன் எனக் கூறப்படும் காதலனை மறக்க முடியவில்லை. பெரும்சாதி பெற்றோருக்கோ தமது குலப்பெருமையை மறக்க முடியவில்லை. இறுதியில் அவள் காதலுக்காக உயிர் துறந்தாள். பெற்றோர் வேதனைப்பட்டாலும் கூட தமது குலப் பெருமையை காப்பாற்றிய மகளுக்கு நல்ல ஆத்துமம் கிடைக்க வேண்டும் என இப்போது புண்ணியம் செய்கின்றனர்.

இளைஞர் சேவை மன்றம் என ஒன்று அரசாங்கத்தால் நடாத்தப்பட்டு வருகிறது. இளைஞர் பிரச்சனைகளைத் தீர்க்கும் நடுவம் ஒன்று இவ் நிறுவனத்திற்கு உண்டு. அங்கு சம்பளத்திற்கு வேலை செய்யும் அதிகாரிகளும் இளைஞர் ஆலோசகர்களும் உள்ளனர். இவர்கள் யாருக்கு ஆலோசனை வழங்குகிறார்கள் என்பதை கடவுள்மட்டும் தான் அறிவார்.
இன்னுமொரு இடத்தில் வயது குறைந்த மாணவியால் எழுதப்பட்ட காதல் கடிதத்தை பாடசாலை அதிபர் காலை பாடசாலை அசெம்பிளியில் வாசித்துக் காட்டியது அம்மாணவியின் தற்கொலைக்கு காரணமாக அமைந்தது. தற்கொலை செய்வதற்கான தவறு தற்கொலை செய்தவரின் உரிமையாக உள்ள போது எவருமே குற்றவாளிகள் அல்ல! இந் நிலையில் இவ் உயிர் இழப்புகளின் பின்னாலுள்ள துயரமான கதைகளை வாசித்து சோக இரசனை அடைவதைமட்டுமே எம்மால் செய்ய முடிகிறது.

இன்று சகல கிராமங்களிலும் சட்டவிரோத இலாப மதுபானத்தை இலகுவாகப் பெறமுடியும். பெருக்கெடுத்து வரும் வெளிநாட்டுக் கடன்கள் கிராமங்களில் உள்ள மரபுரீதியான குடும்பங்களுக்குள்ளே சச்சரவுகளை சச்சரவுகளை ஏற்படுத்துகின்றன. குடும்பங்களின் விழுமியங்களை அழிக்கின்றன. அவற்றை வெல்வதற்கான வழிகள் வயது வந்தவர்களிடமோ இளம் சந்ததியினரிடமோ இல்லை. இன்று அவர்கள் தேடுவது இலாபமான முறையில் தற்கொலை செய்வதற்கான வழிகளையேயாகும். விவசாயத்துக்குப் பாவிக்கும் எண்ணைகளின் விலைகள் அதிகரித்துள்ளதால் அவர்கள் இலாபமான முறையில் தற்கொலை செய்வதற்கு கனேறு எனப்படும் செடியின் விதைகளை சீனியுடன் சேர்த்து அரைத்துச் சாப்பிடுகின்றனர். செவ் அலரியை டிஸ்ப்பிரின் குளிசையுடன் சேர்த்து அரைத்து குடிக்கின்றனர்.
குருநாகலையின் நீண்ட தற்கொலைப்பட்டியல் மத்தியிலே கடன் பழு காரணமாக தற்கொலை செய்த சம்பவங்கள் பல உண்டு. கோடீஸ்வரர்கள் அரசியல்வாதிகளின் துணையுடன் அரசாங்க வங்கிகளிடமிருந்து கடன் பெற்று வங்கிகளை கொள்ளையடிக்கும்போது வங்கியில் இருந்து பெற்ற இரண்டு மூன்று ஆயிரம் ரூபாய் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத கிராம மக்களின் பின்னால் வங்கி அதிகாரிகள் துரத்திச் செல்கின்றனர். கொக்கரல்லையில் ஒரு கிராமவாசி தான் பெற்ற மூன்றாயிரம் ரூபாய் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் தற்கொலை செய்துள்ளனர். கோடிக்கணக்கான கடன்களை வங்கியிலிருந்து பெற்று அக்கடன்களை திருப்பிச் செலுத்தாத பணக் குபேர அரசியல்வாதிகள் எவ்வித பிரச்சனையுமின்றி வாழும்போது வறிய கிராமவாசி மூவாயிரம் ரூபாய் வங்கிக் கடனுக்காக தற்கொலை

செய்துள்ளான்.
தற்கொலை செய்ய முயற்சித்து குருணகலை பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை எம்மால் அறிய முடியவில்லை. ஆனால் உயிர் இழந்தவர்கள் ஒரு வருடத்திற்கு எத்தனைபேர் என்பதை அறிந்து கொண்டோம். 1993 ம் வருடம் குருணகலை பெரிய ஆஸ்பத்திரியில் மட்டும் தற்கொலை செய்தவர்களின் மரண விசாரணைகள் 467 நடந்துள்ளன. இது முழு குருணகலை மாவட்டத்தினதும் தொகை அல்ல. குருணகலை பெரிய ஆசுபத்திரியின் தொகை மட்டும்தான். இவ்வாறு பார்க்கும்போது முழு குருணகலை மாவட்டத்திலும் 1993ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டோர் தொகை எவ்வளவாக இருக்கலாம் என உங்களால் ஊகிக்க முடிகிறதா?

அரசியல்வாதிகளின் தற்பெருமை பேசும் அபிவிருத்தி நாடகத்தைக் காண நாம் உங்களை குருணகலை மாவட்டத்தின் இன்னுமொரு கிராமத்துக்கு அழைத்துச் செல்கிறோம். இக்கிராமத்தில் இடம் பெற்ற தற்கொலைகள் மூலமாக இலங்கை எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதை உங்களால் விளங்கிக்கொள்ள முடியும்.

உடவெல 11 என்றழைக்கப்படும் இக்கிராமம் குருணகலை–தம்புள்ளை பிரதான பாதைக்கு அண்மையில் அமைந்துள்ளது. (உடவெல 1, உடவெல11 என குல வேறுபாட்டுக்கு அமைய இக் கிராமம் இரண்டாக பிரிக்கப் பட்டுள்ளது) 1993 ம் ஆண்டு உடவெல கிராமத்தில் 9 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன இவற்றில் 6 தற்கொலைகள் உடவெல 11 பகுதியிலாகும். விஷ்வ குலத்தை (பொற்கொல்லர்) சார்ந்தோரே இக்கிராமத்தில் வசிக்கின்றனர். கடன் பழுவே இங்கு இடம் பெற்ற ஆறு தற்கொலைகளுக்கு காரணமாகும். ஏனைய மூன்றும் குடும்ப பிணக்கு காதல் தோல்வி என்பவற்றால் இடம் பெற்றுள்ளன. இவர்கள் அனைவரும் 5ம்வகுப்புக்குகுறைவாகவே கல்வி கற்றுள்ளனர். இக் கிராமத்தின் நிலப் பரப்பு மூன்றரை ஏக்கராகும். 60 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 350 மனிதர்கள் இவ் மூன்றரை எக்கர் நிலத்திலேயே வாழ்கின்றனர். அரசாங்க வேலை செய்கின்ற எவருமே இக் கிராமத்தில் இல்லை. பட்டறைத் தொழிலே அவர்களது பரம்பரைத் தொழிலாகும். ஆனால் இன்று இலங்கையில் செய்யப்படுகின்ற அபிவிருத்தியின் புண்ணியத்தால் அவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலையும் இழந்துள்ளனர். இன்று அவர்கள் கூலி விவசாயிகளாக மாறியுள்ளனர். மிகவும் வறுமையான உடவெல 11 கிராமத்தில் வாழ்பவர்களுக்கு தற்கொலை செய்வதைத் தவிர வேறு மாற்று ஏதும் இருப்பதைக் காணமுடியாது. இப் போலி அபிவிருத்தியால் சோறு கொஞ்சம் கூட பெறமுடியாத இலங்கையின் கிராமவாசிகள் அனேகருக்கு தற்கொலையே உரிமை யாகியுள்ளது.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்னர் ஆகச் சிறுவயதில் தற்கொலை செய்த சிறுவனின் கதையை கேட்போம். குருணகலை நகரின் திடீர் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி டிக்கிரிபண்டா தென்னக்கோன் அவர்களே எமக்கு இக்கதையைக் கூறினார்.

"12 வயது சிறுவன் நஞ்சு குடித்து வைத்தியசாலையில் இருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டவுடன் மரண விசாரணைக்காக வைத்திய சாலைக்குச் சென்ற நான் அச் சிறுவனை பார்க்கச் சென்றேன் பையன் ஓரளவு சுகத்தோடு கட்டிலில் கிடந்தான். ஏன் நஞ்சு குடித்தாய் என் நான் சிறுவனை நெருங்கி கேட்டேன். நான் சும்மா குடித்தேன் என பையன் எனக்கு கூறினான்."

"நான் சந்தேகப்பட்டு வேறு யாராவது நஞ்சு கொடுத்தார்களா, ஆலோசனை வழங்கினார்களா என அறிய திரும்பவும் பையனிடம் இவ்வாறு கேட்டேன். உண்மையைச் சொல் மகனே உனக்கு யாராவது நஞ்சு கொடுத்தார்களா, குடிக்கச் சொன்னார்களா? எனக்கேட்டேன்.

"இல்லை சேர் குடிக்க வேணும் என்று நான் நினைத்தேன். குடிச்சிட்டேன். யாரும் எனக்கு நஞ்சு குடிக்கச் சொல்லவில்லை. உண்மையிலேயே நான் சாகப் போகிறேனா சேர்?"

"இல்லை மகனே நீ சாக மாட்டாய்" "நான் அவ்வாறு கூறி வீட்டுக்கு வந்தேன். பிறகு அறிந்தேன் அந்தப் பிள்ளை இறந்து விட்டதாக!"

நாம் இவ்வாறான தற்கொலைகளுக்கான காரணத்தை தேடிச் செல்வது எங்கே?


**யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் றொறொன்ரோ**

**யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 2ம் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் சென்ரானியல் கல்லூரி புரோகிரஸ் வளாகத்தில் E 129 இலக்க அறையில் 1994-02-20 திகதி ஞாயிறு பி.ப 1.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.**

**யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அனைவரையும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.**

**யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அமைப்புக்குழு 497-9828**

# இலக்கிய வியாதியா? இதோ மருந்து!

அருண்

தாயகத்தின் நீண்டகால வாசகன் நான். அவ்வப்போது எனது அபிப்பிராயங்களையும் ஆக்கங்களையும் தாயகத்தில் மட்டுமே எழுதியிருக்கிறேன்..... சென்ற இதழில் வெளியாய் இருந்த நிலா குகதாசன் என்பவரின் ஒரே விஷயத்தின் இரண்டு வடிவங்'களான கடிதமும் கட்டுரை யும் மனதை நோகடித்தன. தாயகத்தில் இப்படி நடந்தது எனக்குப் பெரும் அதிர்ச்சியாயும் இருந்தது.

மேற்படி இரு ஆக்கங்களிலும் இடம்பெற்ற இங்கிதமற்ற சொற்பிரயோகங்கள் முன்பு ஒருமுறை எங்கோ 'மனிதமற்ற நாடகப் பொறுக்கி' என எவராரோ கூறப்பட்டிருந்ததிலும் தரக்குறைவாக அமைந்திருந்தது மனதை நோகடித்தது.

என்னைப் பொறுத்தவரை இவ் ஆக்கங்களோ அவற்றில் பாவிக்கப்பட்டிருந்த இலக்கிய விபச்சாரி, இலக்கிய வியாதி, புத்தியற்ற.. போன்ற குறித்த ஒருவர் மீதான வசை கூறும் சொற்களோ வாசகர்களுக்கு அவசியமானதெனப் படவில்லை. மேற்படி ஆக்கங்களை எழுதிய நிலா குகதாசன் இலக்கிய வட்டத்தில் பலரும் கேள்விப்பட்ட பெயரின் சொந்தக்காரர். இவர் இளையநிலா என்ற வீடியோ சஞ்சிகையின் தயாரிப்பாளரும் கூட. இத்தகைய இலக்கிய ஆர்வலர் இன்னொரு இலக்கியப் படைப்பாளி மீது அதுவும் புகார் சொல்லும் போது இங்கிதமாக பத்திரிகைத் தர்மத்துக்கு உட்பட்டு இருக்கவேண்டும். ஆனால் இது தொடர்பாக இத்தகைய ஒருவர் மேல் இன்னொருவரால் (அதாவது என்னால்) புகார் கூறவேண்டி ஏற்பட்டது அந்த மகரந்தன் எனும் இவரது விரல் சுட்டிய படைப்பாளியிலும் உயர்வாய் இவரை மதிப்பிட முடியாமையையே காட்டுகிறது. எனக்கு நிலா குகதாசனோ மகரந்தனோ அறிமுகம் இல்லாதவர்கள்தான். எனினும் தாயகத்தில் இத்தகைய சொற்பிரயோகங்கள் இடம் பெற்றது எனக்கு மிக மன வருத்தம். இதன் தூண்டுதலால் இதுபற்றி சிலருடன் கதைத்தேன். அப்போது இதுபோன்ற கட்டுரை கடிதம் மஞ்சரியிலும் வந்ததை அறிந்தேன். சிரமங்கள் பலபட்டு அந்த இதழையும் இரவல் எடுத்து வாசித்தேன். பொதுவாக நான் எழுதுவோர் பெயரை மனப்பாடம் பண்ணுவதில்லை. ஆராய்வதுமில்லை. என்ன எழுதி இருக்கிறார் என்பதை அறிவதே என் ஆவல். அதை ஏற்பதா விடுவதா என்பதை முடிவுசெய்யும் விஷயம் வேறு, ஆனால் எழுத்தாளரை இனங் காணும் நோக்கம் எனக்கில்லை. இதனால் நிலா குகதாசனும் புனைபெயர் என்றே எண்ணியிருந்தேன். இவரின் மேற்படி சுபமங்களாவுக்கான கடிதத்தை வாசித்ததில் இருந்து புனைபெயர் அல்லாமல் இருக்கலாமோ என ஐயம் நேர்ந்தது. இதே போலத்தான் மகரந்தன் என்பதும், ஆனால் இரு கடித கர்த்தாக்களும் மகரந்தன் புனைபெயர்தான் எனவும் அவர் தமிழர் வகைதுறைவள நிலையத்தைச் சேர்ந்தவர் எனவும் கண்டுபிடித்து எழுதியிருந்தது ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவும் தெரிந்த இவர்கள் ஆளை யாரென்று கண்டுபிடிக்காதது போல எழுதியிருந்தது எனக்கு என்னவோ மாதிரி இருந்தது. என்ன இது... மகரந்தன் பல பேரை இருட்டடிப்பு செய்தார் என்றால் இவர்கள் மகரந்தனையே இருட்டடிக்கிறார்களே, நிலாக்குகதாசன் எழுத்துப்படி மகரந்தன் என்றும் மகரதன் என்றும். மகரதன் என்றும் குறித்ததில் தலையைக் கொடுத்துப் பிய்த்ததில் ஏற்கனவே ரதன் என்னும் பெயரில் எழுதும் ஆர்வலர் மேல் தொண்ணூறு வீதம் சந்தேகம் வலுத்தது.

அது ரதன்தான் எனில் நிலா குகதாசன் ஏன் ஒளிந்திருந்து எறியவேண்டும்? மகரந்தன் யாரென்று அந்த வானொலி நிகழ்ச்சியாளருக்கும் அதன் மூலம் நிலா குகதாசனுக்கும் தெரிந்திருக்கிறது என்பது நிலா குகதாசனின் கட்டுரையில் இருந்து தெரிகிறது. அதன்பின்பு யார் அந்த மகரந்தன் எனக்கேட்பது விந்தையாய் இல்லை? ஆளைத்தெரிந்தபின் தெரியாத ஆளை தெரியாதது போல் தாக்குவது இன்னும் விந்தையாய் இல்லை.? ஆக. . ஆளைத் தெரிந்த பின் இந்த ஆக்கங்கள் அனுப்பபட்டதில் அர்த்தமும் இல்லை. இப்படி ஊகித்தறிய துப்புக்களைத் தந்துவிட்டு மகரந்தன் தன்னைப் பகிரங்கப்படுத்தும்படி வேண்டுகோள் விடுவது முன்னுக்குப் பின் முரணாகும். இது இலக்கிய வாதியின் நெறியா? நிலா குகதாசன் எழுதுமுன்பே இக்கருத்துப்பட ப. ஸ்ரீஸ்கந்தன் என்பவரால் மஞ்சரியில் சுபமங்களாவுக்கென எழுதிய கடிதமும் பிரதி செய்யப்பட்டிருந்தது.

இது வெளியீடான பின்பு அதே கருத்துப்பட அதுவும் சுபமங்களாவுக்கென்றே நிலா குகதாசனால் ஏன் எழுதப்பட்டது? அது ஏன் தாயகத்திலும் பிரசுரமானது? அதுக்காகத்தானோ ஆக்கங்கள் இன்னொருவரால் கொப்பி பண்ணப்படுகிறது இலக்கிய வியாபாரம் என ஒரு இலவச இணைப்பில் நிலா குகதாசன் எழுதினாரோ? இப்படி ஒரே விடயம் மீளக் கூறப்பட்டதும் அல்லாமல் கீதவாணி வானொலி நிகழ்ச்சியிலும் வாசிக்கப்பட்டது. இப்படி நிலா குகதாசனின் அடங்காத ஆத்திரம் ஏன்? ஆனால் எந்தவொரு விடயம் பற்றியும் தரவுகளையோ தகவல்களையோ பதிவுகளையோ கொடுக்கும் போது அதில் காழ்ப்புணர்ச்சி தவிர்க்கப்பட வேண்டும். இது நான் சொன்னதல்ல. நிலா குகதாசன் தன் கடிதத்தில் சொன்னதே. மகரந்தன் கட்டுரையை வாசித்ததில் காழ்ப்புணர்ச்சியாய் எதுவும் எழுதியதாய் தெரியவில்லை. மண்டையில் களிமண் என்று நிலா குகதாசன் காழ்ப்புணர்ந்ததிலும் கூடுதலாகவா மகரந்தனால்..

ஒரு கடிதம் ஒரு பத்திரிகை விலாசத்துக்கு எழுதிவிட்டு அது அப் பத்திரிகையில் வருமுன்பே பிறிதொரு பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்ததில் என்ன இலக்கிய தர்மம் இருக்கிறது? இதற்கு தாயகமும் ஏன் துணைபோனது என்பதுதான் என் ஆருத மனக்குமுறல். என்னைப் பொறுத்தவரை மகரந்தன் பொய் சொல்லவில்லை. தந்த தரவுகளில் உண்மை உண்டு. ஆனால் தரவுகள் திட்டமிட்டே மறைக்கப்பட்டதும் பொய்யில்லை. உண்மைதான் அதுவும் குற்றந்தான். இதனைக் குறைகூறும் நிலா குகதாசனும் ப.ஸ்ரீஸ்கந்தனும் பொய் சொல்லி விட்டார்கள். நிலா குகதாசன் சொல்கிறார் மகரந்தனின் ஆக்கங்கள் எதுவும் இதுவரை கனடாவில் வெளிவரவில்லையாம். ஆனால

33ம் பக்கம் பார்க்க..

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின் மாபெரும் மலிவுவிற்பனை

**மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில்**

| | |
|---|---|
| பாரை | 1.49 |
| அறுக்குளா | 4,99 |
| விளைமீன் | 4.49 |
| சீலா | 2.49 |
| முரல் | 1.99 |
| நீல மீன் | 1.99 |
| கருந்திரளி | 2.49 |
| சுறு | 1.99 |
| கணவாய் | 1.99 |
| திரளி | 2.49 |

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றாத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Frozen | |
| Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix, Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |

| | |
|---|---|
| உள்ளி 1 றாத் | .99 |
| திரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றாத் | 6.49 |
| திரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| திரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |

| | |
|---|---|
| திரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 400கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| ஐந்து கிலோ உழுத்தம்பருப்பு | 6.99 |
| ஐந்து கிலோ மைசூர் பருப்பு | 7.99 |

| | |
|---|---|
| ஹோமோ பால் 2 ∞ | 2.95 |
| குடாஸ் 10 கிலோ | |
| கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 ரூ | 2.99 |

## SIVAS TRADING Co

**3852 Finch Ave E(Kennedy/Finch)**

**321 2739**

# இன்னுமொரு யுத்தம் :

## அஸர்பையான் VS ஆர்மீனியா

உடைந்த சோவியத் யூனியனின் இரு நாடுகளான ஆர்மீனியாவும். அஸர்பையானும் கடந்த ஆறு வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த யுத்தம் கடந்த ஆறு வாரங்களாக உக்கிரமடைந்திருக்கிறது. கனரக ஆயுதங்கள் சகிதம் இருதரப்பு இராணுவமும் மூர்க்கமாக நடத்தும் இந்த யுத்தத்தில் கடந்த ஐந்து வாரங்களில் எண்ணுயிரம் பேர் கொல்லப்பட்டு அல்லது படுகாயமடைந்துள்ளார்கள் என்று சொல்லப்படுகிறது. யுத்தமுனைச் செய்திகள் அனைத்துமே வெளியுலகுக்கு இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. இருதரப்பினரும் பயன்படுத்தும் ஆயுதங்களில் மூன்றில் இரண்டு பங்கை விநியோகித்து வரும் ரஷ்யா யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முயலாது யுத்தத்தை தனக்கு சாதகமாக பாவிக்கவே முயல்கிறது. ரஷ்யாவின் இந்தச்செயலுக்கு மேற்குலகும் ஆதரவளித்து வருகிறது

கடந்த வருடம் ஆர்மீனியப் படைகள் நகுரோனே ஹபா பகுதிகளை ஆக்கிரமித்தன. இந்தப் பகுதிகளை மீளக் கைப்பற்றுவதற்கான தாக்குதல்களை ஆஸர்பையானிப் படையினர் கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில் ஆரம்பித்தன. 5 இலட்சத்து 20 ஆயிரம் பேர் இந்த யுத்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அஸரிஸ் எனப்படும் இந்த இன மக்களது வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. கிராமங்கள் திட்டமிட்டு நிர்மூலமாக்கப்பட்டன. ஆனால் முதல் தடவையாக அஸர்பையானிப் படையினரின் தாக்குதலுக்கான எதிர்தாக்குதல் ஆர்மீனியத் தரப்பிலிருந்து மேற்கொள்ளப படவில்லை. இதனால் அஸர்பையானிப் படைகளால் ஈரான் எல்லையுடனான வீதியின் ஒரு பகுதியையும் ஜெல்பஜார் நகரின் வடபகுதியிலுள்ள பனிமூடிய மலைப் பிரதேசத்தின் சில பகுதிகளையும் மீளக் கைப்பற்ற முடிந்தது.

இதன் பின்னர் இரு தரப்புக்குமிடையே உக்கிரமான யுத்தம் தொடங்கியது. இரு தரப்புமே பெருமளவு படையினர் பெருமளவு கனரக ஆயுதங்களுடன் யுத்தத்தில் ஈடுபட்டனர். யுத்தத்தின் ஆரம்ப இழப்புக்கள் அஸர்பையானி தரப்பில் அதிகமாக இருந்த போதும் 7.5 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட அஸர்பையான், 3.5 மில்லியன் மக்கள் தொகையையும் மேலும் நகாரோனே கரபாவில வாழும் 1 இலட்சம் ஆர்மீனியர்களும் யுத்தத்தில் நீண்ட காலம் நின்று பிடிக்க முடியாது என எண்ணுகிறது. நீண்டகால யுத்தத்திற்கான ஆயுதங்களோ, அல்லது படையினரோ ஆர்மீனியாவிடம் இல்லை என்பது அஸர்பையானின் கருத்து.

இதனையே அஸர்பையானின் தலைநகரான பாகுவிலுள்ள உயர் அதிகாரிகளும் வலியுறுத்துகிருர்கள். "இந்த யுத்தத்தில்எமது தரப்பில்பெரும் இழப்புக்கள் நடந்துள்ளன ஆனால் ஆர்மீனியரின் இழப்பு எம்மை விட பல மடங்கு அதிகம்" என்பது பாகு அதிகாரிகளின் கூற்று. ஆனால் இது உண்மையில்லை என்பது சுதந்திரமான செய்தியாளர்களின் கூற்று. கடந்த 5 மாத யுத்தத்தில் அஸர்பையானிகளின் தரப்பில் 1000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருப்பார்கள் எனக் கூறும். அவதானிகள் ஜனவரி மாத முதல்வாரத்தில் 820 மட்டும் கொலப்பட்டிருப்பார்கள் எனக்கூறும் அவதானிகள் ஜனவரிமாத முதல் வாரத்தில் மட்டும் 800 பேர் காயமடைந்துள்ளார்கள் என்றும் கூறுகிருர்கள். ஆனால் முன்னைய காலங்களில் குறைவாக இருந்த ஆர்மீனிய தரப்பு இழப்பு இப்போது அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது என்பதும் இவர்களது கருத்து. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் 700 ஆர்மீனியர்கள் கொல்லப் பட்டிருக்கலாம் என்பது இந்த அவதானிகளின் கூற்று.

இந்தப் பிரச்சனையை தீர்த்துவைக்கும் பலம் கொண்ட ரஷ்யாவோ நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தவே முனைகிறது. ரஷ்யாவுக்கு ஆர்மீனியாவிலும் ஜோர்ஜியாவிலும் இராணுவத் தளங்கள் உண்டு. ஆனால் இப்பகுதியிலுள்ள ஒரேயொரு இஸ்லாமிய நாடாகிய அஸர்பையானில் ரஷ்யாவுக்கு இராணுவத்தளம் இல்லை. இதனால் அஸர்பையானிலும் ஒரு இராணுவத்தளத்தை நிறுவி தனது இராணுவ வலைப் பின்னலை பூர்த்தி செய்ய ரஷ்யா முனைகிறது. 1993ம் ஆண்டு மே மாதம் வரை அஸர்பையானில் பதவியிலிருந்த துருக்கிய ஆதரவு தேசியவாதக் கட்சியாகிய அபிமான முன்னணி அஸர்பையானிலிருந்து அனைத்து ரஷ்ய துருப்புக்களையும் வெளியேற்றியது. புதிய ஜனுதிபதியும் முன்னுள் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான கைடார் அலியேவ் அஸர்பையானை ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் CIS எனப்படும் சுதந்திர நாடுகளின் பொதுநலவமைப்புக்குள் கொண்டு செல்ல முயல்கிருர். இருப்பினும் முன்னர் போல ஒரு முழு அளவிலான ரஷ்ய ராணுவப் பிரவேசம் என்பது நடப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் குறைவே. அது மட்டுமல்ல கடந்த நவம்பர் மாதம் பொருட்களின் விலையில் கணிசமான அதிகரிப்பும் அறிவிக்கப்பட்டது. இருந்தும் கைடார் அலியாவின் பதவிக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. மக்கள் கடைசி நம்பிக்கையுடன் இன்னும் காத்திருக்கிருர்கள் கைடார் அலியா நாட்டில் சட்டம் ஒழுங்குமுறையை மீளக் கொண்டு வந்ததுடன் முன்னுள்

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை அமைச்சர்களாக்கினுர். அதுமட்டுமல்ல மாகாணங்களிலுள்ள எதிர்ப்பாளர்கள் சிலரை சிறையில அடைத்ததுடன் மீண்டும் செய்தித் தணிக்கை முறையைக் கொண்டு வந்தார். அத்துடன் மட்டுப்படுத்தப பட்ட எதிர்ப்பைக் கொண்ட பாராளுமன்றத்தை தனக்குச் சாதகமான முறையில் அமைத்துக் கொண்டார்.

கைடார் அலியா அஸர்பையான் இராணுவத்தின் சில பிரிவுகளைக் கலைத்ததுடன் முன்னுள் சோவியத் இராணுவத்தில் இருந்த அஸெரி அதிகாரிகளுக்கு பதவி வழங்கினுர். முன்பு இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்த்த அவர் எதிர்காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோட முயல்பவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்றும் எச்சரித்தார். இதன் மூலம் ஒரு வலுவான இராணுவத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் கைடார் அலியாவ் வெற்றி பெற்றுள்ளார். ஆனுல் இவர் யுத்தத்தில் வெற்றி தனது இராணுவத்தில் மட்டும் கிடைக்கும் என நம்பவில்லை. வெளியிலிருந்து அடைக்கக் கூடிய அனைத்து உதவிகளையும் அடைய முயல்கிருர் முன்பு தொடக்கமே துருக்கி இராணுவ ஆலோசகர்கள் அஸர்பையானில் இருக்கிருர்கள். இப்போது ரஷ்ய இராணுவ நிபுணர்களும் பிரசன்னமாயிருக்கின்றனர்.

கஸ்பியன் கடலின் எண்ணெய் வள கொந்தராத்துக்களுக்காக காத்து நிற்கும் அமெரிக்கா மற்றும பிரித்தானிய நிறுவனங்களும் யுத்தத்தை தொடர்வதற்கான மறைமுக நிதியுதவி செய்து வருகின்றன. இதுமட்டுமல்ல யுத்தத்தில் பங்கு கொள்ள கூலிப்படைகளையும் கைடார் அலியாவ் அழைத்து வருகிருர். இந்த கூலிப்படையினரில் பெரும் பான்மையோர் CIS நாடுகளிலிருந்தும் ஆப்கானிஸ்தானிலிருந்தும் கொண்டுவரப்படுகிருர்கள். இவருக்கு முன்னர் பதவியிலிருந்த அரசாங்கம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை விட ஆர்மீனிய துருப்புக்கள் வெளியேறினுல் இந்தப் பிரதேசங்களை கண்காணிக்க ரஷ்ய துருப்புக்களை அனுமதிக்க சம்மதிப்பதாக கைடார் அறிவித்தார். ஆனுல் நகுரோனோ- கரபாவில் வாழும் ஆர்மீனியர்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் இல்லாமல் படைவிலகல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது ஆர்மீனிய தரப்பு நிலை. அஸர்பையானுக்கு தனது படைகளை ரஷ்யா அனுப்ப முதல் அங்குள்ள தனது பழைய தளங்கள் தனக்குத் தரப்படவேண்டும் என்பதிலும் ஈரான், துருக்கி ஆகிய நாடுகளுடனுன எல்லைகளில் ரஷ்ய கண்காணிப்பு படை நிலை கொள்ளும் அதிகாரம் வேண்டும் என்பதிலும், சமாதானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் தனது படைகளுக்குத் தரப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக் இருக்கிறது.

கடந்த காலங்களில் ஆர்மீனியாவுக்கும் அஸர்பையானுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின் போது இந்தப் பிரச்சனையே முட்டுக்கட்டையாக இருந்தது. இதனுலேயே ரஷ்யாவை மாற்றீடு செய்து இருதரப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் CSCE எனப்படும் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுக்கான அமைப்பால் வழிநடத்தப்பட்டன. ஆனுல் இந்தப் பேச்சுவார்த்தைகள் எந்தவழியிலும் வெற்றி பெறவில்லை. இந்தப் பிரச்சனைக்கான முடிவுகள் சர்வதேச அழுத்தத்தால் கிடைப்பதை விட யுத்தத்தால் கிடைப்பதையே தாம் விரும்புவதாகக் கூறி ஆர்மீனியா 1992ம் ஆண்டு பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டது. இப்போது அஸர்பையானும் இத்தகைய முடிவுக்கே வந்துள்ளது.

அஸர்பையானில் யுத்தப் பிரதேசங்களுக்கு ஒரு சில துருக்கிச் செய்தியாளர்களைத் தவிர வேறு எந்த வெளிநாட்டுச் செய்தியாளர்களும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனுல் தலைநகர வீதிகளில் கடந்த காலங்களில் இருந்த பதட்ட நிலைகள் மாறிவிட்டன. இது யுத்தத்தில அஸர்பையானுக்கு சாதகமான நிலை ஏற்பட்டு வருவதன் சமிக்ஞையாகும். கடந்த காலங்களில் கரபாவில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளே கைடார் அலியாவிற்கு முதல் பதவியிலிருந்தவர்களைக் கவிழ்த்தது. ஆனுல் கைடார் அலியாவ் பதவியேற்றபின் பெருமளவு பிரதேசங்கள் ஆர்மீனியாவில் ஆக்கிரமிக்கப்பட்டது. அது இப்போது பாகிஸ்தானுக்கு வேண்டப் படாதவர்களாகிவிட்ட ஆப்கானிஸ்தானின் முஜாகிதீன்களை கூலிப்படையினராக கொண்டுவரும் செயலை ஆரம்பித்தது. டொலர்களைக் கூலியாகப் பெற்று ஆர்மீனிய கிறிஸ்தவர்களுக்கெதிராக யுத்தம் செய்வதே இவர்களது வேலை. கடந்த செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் இத்தகைய கூலிப்படையினர் 1500பேர் அஸர்பையானுக்கு வந்துள்ளனர். இந்தக் கூலிப் படையினர் ஈரானினூடாக புகுந்து ஆர்மீனியப்படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுபோலவே யுத்த வெற்றிகளுக்கு தமது ஆலோசனைகளும் காரணம் என ரஷ்ய இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக கோடிஸ் பகுதியை அஸர்பையான் துருப்புக்கள் மீளக் கைப்பற்ற தமது யுத்தமுனை ஆலோசனைகளே காரணம் எனக் கூறுகின்றனர்.

ஆனுல் ஆப்கான் கூலிப்படையினரின் பிரசன்னம் ரஷ்ய இராணுவ தரப்பிற்கு அதிருப்தியை கொடுத்துள்ளது. அஸர்பையானைப் பொறுத்த வரை அவர்களது நண்பர்கள் அவர்களது இனச் சகோதர நாடாகிய துருக்கியே. ஆனுல் துருக்கி இதுவரை இந்தப் பிரச்சனையில் தலையிடவில்லை. துருக்கியின் நேட்டோ NATO உறுப்புரிமை, குர்திஷ்டுகளுடன் பிரச்சனைகள், அஸர்பையான் மற்றும் மத்திய ஆசியா குறித்த துருக்கியின் அதிருப்தி ஆகியன இதற்கான காரணங்கள். அதேசமயம் துருக்கியின் காலடிகளில் அஸர்பையான் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக ஈரான அசர்பையானுக்கும் உதவுகிறது. ஆனுல் ஈரான் ஆர்மீனியாவுக்கும் உதவுகிறது. அதுபோலவே யுத்தம் தொடர்வதையே ரஷ்யா விரும்புவதாக ஆர்மீனியாவும், அஸர்பையானும் சந்தேகிக்கின்றன. ரஷ்யாவின் சமாதான இராணுவரீதியாக நிலைநிறுத்திக் கொள்வதே ரஷ்யாவின் நோக்கம் என்பது இருதரப்புக் கணிப்பும்.

இந்நிலைமையில் மத்தியஸ்தம் எதுவும் இன்றி தொடரும் இந்த யுத்தம் இப்போது பலவேறு வெளிச்சக்திகளால் ஊக்குவிக்கப் படுகிறது. விளைவு இன்னுமொரு மோசமான யுத்த வரலாறு உலக வரலாற்றில் விரைவில் எழுதப்படும்

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னுன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

பேசும்போது, வன்செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் அவற்றை கைவிட்டு ஜனநாயக ஓட்டத்துடன் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தார். சுமார் ஒரு மணி நேரம் பிடிக்கப்பட்ட வீடியோ உரை வெட்டிச் சுருக்கப்பட்டு சில நிமிடங்கள் மட்டுமே பொதுமக்களுக்காக காண்பிக்கப்பட்டது.

விஜேவீரவிடமிருந்து வீடியோ உரையைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர் கொல்லப்பட்டார். ஜேவிபி யின் பாதுகாப்பு இடமொன்றை காண்பிக்கச் சென்ற சமயம் திடீரென H.B ஹேரத் ஆயுதம் ஒன்றைப் பறித்து சுடுவதற்கு முயன்றபோது ஏற்பட்ட அமளியினால் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் விஜேவீர இறந்ததாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் அறிவித்தனர். ஆயினும் அவ் அறிவித்தல் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. புதுமையானது என்னவென்றால் ஜேவிபியின் ஏனைய தலைவர்கள் அனைவருமே பாதுகாப்புப் படையினரின் கூற்றுப்படி இவ்வாறே இறந்துள்ளனர். விஜேவீரவின் மரணம் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு பொலீஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி கட்டளை இட்டுள்ள போதிலும் விசாரணை அறிக்கை வெளிவரவேயில்லை.

நவம்பர் மாதம் 13ம்திகதி ஜேவிபியின் இரண்டாவது தலைவரான கமனுயக பண்டாரகம என்னும் இடத்தில் விசேச இராணுவக் குழுவினரால் கைது செய்யப்பட்டார். காலி மாவட்டச் செயலாளர் திலகரத்னவை கைது செய்து விசாரித்தபோது அவர் வெளிப்படுத்திய தகவல்களையும் பின்னர் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பெற்று கோவைப் படுத்திய தகவல்களைக் கொண்டுமே கமனுயகவை கைது செய்தனர். இராணுவம் இன்னும் 20 நிமிட நேரம் தாமதித்திருந்தால் அன்றைய தினம் கமனுயகவை கைது செய்ய முடியாமல் இருந்திருக்கலாம். விஜேவீர கைது செய்யப்பட்ட பின்னர் இறந்து விட்டார் என வானொலியில் அறிவிப்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னரேயே கமனுயக கைது செய்யப்பட்டார்.

டயஸ் முதலாளி என்னும் பெயருள் வாழ்ந்த கமனுயக, விஜேவீரவைப் போல வீடியோ கமராவுக்கு முகங் கொடுக்கவோ பேசுவதற்கோ விருப்பத்தைக் காண்பிக்கவில்லை. அவர் சிறிது அளவுதான் கதைத்துள்ளார். ஜேவிபிக்கும் தேசபக்த மக்கள் இயக்கத்துக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லையென்றே அவரும் கூறினார். இராணுவத்தினரின் அறிவித்தலின்படி விஜேவீரவைப் போன்றே கமனுயகவும் ஜேவிபியின் பாதுகாப்பு ஸ்தானம் ஒன்றைக் காண்பிக்கச் செல்லும்போது ஏற்பட்ட சூட்டுச் சம்பவத்தின் போது இறந்தார். இராணுவத்தினருக்கும் பொலீசாருக்கும் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களின்படி எவ்வித விசாரணைக்கும் இடமின்றி அவர்கள் இறந்த உடனேயே பொரளையிலுள்ள கனத்தை மயானத்துக்கு கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டனர். இவ் இருவரையும் கனத்தைக்கு கொண்டு வந்தே சுட்டுக்கொன்று அடக்கம் செய்ததாக சிலர் கூறுகின்றனர்.

விஜேவீர, கமனுயக உட்பட ஜேவிபியின் முன்னணித் தலைவர்கள் பலரும் கொல்லப்பட்ட பின்னர் கீர்த்தி விஜேபாகு என்னும் பெயரில் இயங்கி நாட்டையே கிலி கொள்ளச் செய்த சமன் பியசிறி பெர்னுன்டோவும், லலித் விஜேரத்னவும் ஜேவிபிக்கு தலைமை தாங்கிச் செயல்பட்டனர். ஜேவிபியின் அரசியல் குழுவில் எஞ்சியிருந்தது இவர்கள் இருவரும் சோமவன்ச அமரசிங்கவும் மட்டுமேயாகும்.

இந் நிலமைகளின் கீழ்

## விஜேவீர, கமனுயக ஆகிய இருவரதும் துயரமான முடிவுகள்

கலஹாவில் கைது செய்யப்பட்ட மு,ஞ ஹேரத் மூலமாக விஜேவீர இருக்குமிடத்தை பாதுகாப்புப் படையினர் அறிந்து கொண்டனர். இத்தகவலின்படி விசேட இராணுவக் குழுவொன்று நவம்பர் மாதம் 11ம் திகதி, அரசியற்குழு, மத்திய கமிட்டி கூட்டங்கள் நடைபெறுவதும் விஜேவீரவுக்கு உரியதுமான, பண்டாரவளையில் நெலுவை என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டை சுற்றி வளைத்தனர். ஆயினும் அங்கு எவரும் இருக்கவில்லை. அதன் பின்னர் அடுத்த தினம் பி.ப.2 மணிக்கு விஜேவீர வசித்த உலப்பனை என்னுமிடத்திலுள்ள வீட்டைச் சுற்றி வளைத்தனர். பாதுகாப்புப் பிரிவினருக்கு அவசியப்பட்ட மிகமுக்கிய நபரும் ஓய்வுபெற்ற தோட்ட உடமையாளராக அத்தனுயக என்னும் பெயரில் வாழ்ந்தவருமான ரோகண விஜேவீரவை கைது செய்தனர். ஜேவிபிக்கு எதிரான தாக்குதல்களில் பாதுகாப்புப் படையினர் அடைந்த பெரும் வெற்றி இதுவேயாகும்.

கைது செய்யப்பட்ட விஜேவீர ஹவ்லொக் டவுனில் அமைந்துள்ள இணைந்த நடவடிக்கைப் பிரிவின் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். பாதுகாப்புப் படை பிரதானிகளும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் விஜேவீரவைப் பார்வையிட அங்கு சென்றனர்.

விஜேவீர நீண்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தான் வேண்டப்படுகின்ற நபர் அல்ல என ஜனாதிபதி அறிவித்துள்ள போதும் தன்னை எதற்காக கைது செய்தீர்கள் என விஜேவீர கேள்வி கேட்டார். எவ்வாறாயினும் ஜனநாயக நடவடிக்கைகளில் இணைவதற்கு தான் விரும்புவதாக கூறிய விஜேவீர முழு விசாரணைகளின் போதும் ஜேவிபிக்கும் தேசபக்த மக்கள் இயக்கத்துக்கும் உள்ள தொடர்பை நிராகரிக்கவே முயற்சித்தார். 1971 ஐப் போன்றே அவர் தொடர்ச்சியாக கருத்தியலைப் பற்றியே பேசினார்.

இறுதியாக வீடியோ மூலமாக அறிவித்தல் விடுக்க சம்மதம் தெரிவித்தார். வாடிய முகத்துடன் வீடியோ கமெராவுக்கு முகங்கொடுத்த அவர் தளர்ந்து போன சுபாவத்துடன்

அரசியல் குழுவுக்கு புதிதாக பலர் சேர்த்துக் கொல்லப்பட்டனர். உபாலி ஜயவீர ரஞ்சிதம் குணரத்னம், காமினி விஜேகுணசேகர, ஆனந்த இடமேகம ஆகியோர் மத்திய கமிட்டியிலிருந்து அரசியல் குழுவுக்கு உயர்த்தப்பட்டனர்.

விஜேவீர- கமனுயக படுகொலை செய்யப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த ஜேவிபி தலைமை, 1989 ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி குருவிட்ட என்னுமிடத்தில் முதற் தடவையாகக் கூடியது. இவ் உரையாடலுக்கு சமன் பியசிறி பெர்னுன்டோ லலித் விஜேரத்ன உபாலி ஜயவீர, ரஞ்சிதம் குணரத்னம், காமினி விஜேகுணசேகர சாந்த பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர். சோமவன்ச அமரசிங்க கலந்து கொள்ளவில்லை. இவ் உரையாடலின்போது வேலை செய்யும் முறைகளையோ நடவடிக்கைகளையோ திருத்துவது, மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக உரையாடவில்லை, பழைய முறையிலேயே வேலை செய்வதாக தீர்மானிக்கப்பட்டது. நாடு நான்கு வலயங்களாக பிரிக்கப பட்டது. கண்டி, மாத்தளை, குருணுகலை, புத்தளம், அனுராதபுரம், திருகோண மலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வலயம் லலித் விஜேரத்னவுக்கும், பதுளை நுவரேலிய மொனராகலை அம்பாறை ஆகிய மாவட்டங்களைஉள்ளடக்கிய வலயம் உபாலி ஜயவீரவுக்கும் கொழும்பு கேகாலை இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வலயம் ரஞ்சிதம் குணரத்தினத்திற்கும், காலி, மாத்தறை அம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வலயம் காமினி விஜேகுணசேகரவுக்கும் என பொறுப்புகள் பாரமளிக்கப்பட்டன.

இதன் பின்னர் டிசம்பர் இடைப்பகுதியில் குருவிட்ட என்னுமிடத்தில் நடைபெற்ற உரையாடலில் அரசியல் குழு கூட்டத்தை 1990 ம் ஆண்டு ஜனவரி 05ம்திகதி பன்னிப்பிட்டியவில்உள்ள ஒரு வீட்டில் கூட்டுவதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும் அது பயனளிக்கவில்லை. இரண்டாவது உரையாடலின் பின்னர் சாந்த பண்டார குருவிட்டவிலும், கண்டியிலிருந்து வந்த பொலீஸ் குழுவினரால் கொழும்பில் லலித் விஜேரத்னவும் கைது செய்யப்பட்டனர். ஜேவிபியின் ஏனைய தலைவர்களுக்கு நேர்ந்த தலைவிதியிலிருந்து விடுபடுவதாக இவர்களாலும் முடியவில்லை.

சமன் பியசிறி பெர்னுன டோவும் கைது செய்யப்பட்டதோடு பாதுகாப்பு பிரிவினரின் அறிவித்தலின்படி டிசம்பர் 27ம்திகதி இரகசிய இடமொன்றை காண்பிக்கச் சென்றபோது ஏற்பட்ட சூட்டுச் சம்பவத்தில் விஜேவீர கமனுயக ஆகியோரைப் போன்றே சமன் பியசிறி பெர்னுன்டோவும் உயிர் இழந்தார். இரகசிய இடங்களைக் காண்பிக்கச் செல்வது ஜேவிபி யினருக்கு சகல சந்தர்ப்பங்களிலும் மரணத்தையே விளைவித்தது! சமன் பியசிறி பெர்னுன்டோ உயிர் இழந்த சூட்டுச் சம்பவத்தின்போது ராகம சோமே என்பவரும் கொழும்பு மாவட்ட ஆயுதப் பிரிவு தலைவரான பத்தி என்பவரும் உயிரிழந்தனர். அதன் பின்னர் 1990 ம் ஆண்டு ஆரம்பமாவதுடன் கூடவே உபாலி ஜயவீரவும் காமினி விஜேகுண சேனுவும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். ஏனையோரது தலைவிதியே இவர்களதும் தலைவிதியாக இருந்தது. இவ்வாருக 1990 ஜனவரி மாதம்முடிவுறும்போது புதிதாக நியமிக்கப்பட்ட அரசியல்குழு உறுப்பினர்களில் சோமவன்ச அமரசிங்க தவிர ஏனைய அனைவரும் பாதுகாப்புப் படையினரிடம் சிக்கி உயிர் இழந்தனர். மத்திய குழுவிலும் ஒருசிலரைத் தவிர ஏனைய அனைவரும் உயிர் இழக்கச் செய்யப்பட்டனர்.

இவ்வாருக ஏறத்தாழ ஜேவிபியின் முழுத் தலைமையும் அழிக்கப்பட்ட பின்னர் அங்கும் இங்குமாக படுகொலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை வெற்றியளிக்கவில்லை. ரஞ்சன் விஜேரத்னவை கொலை செய்ய மேற்கொண்ட முயற்சியே இவற்றுள் பிரதானமானது. காருக்குள் வெடிகுண்டை வைத்து ரஞ்சன் விஜேரத்னவின் வாகனத்துடன் மோத விட்டு அவரைக் கொலை செய்யவும், அவ்வாறே ஒபரோய் ஹோட்டலில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது ரஞ்சன் விஜேரத்னவுக்கும் இணைந்த நடவடிக்கைப் பிரிவின் உயர் அதிகாரிகளுக்கும் நஞ்சூட்டி கொலை செய்யமேற்கொண்ட முயற்சியும் ஏற்கனவே தகவல்கள் கிடைத்ததால் தோல்வியில் முடிந்தன. இது தொடர்பான நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதன் பின்னர் ஜேவிபியின் நடவடிக்கைகள் முற்ருக தடைபட்டன.

ஜேவிபி முற்ருக தகர்க்கப்பட்ட பின்னர் தலைமைப் பொறுப்பேற்ற சோமவன்ச அமரசிங்கவுக்கு நாட்டுக்குள் இருந்து கொண்டே ஜேவிபியைக் கட்டி எழுப்புவதற்கான தலைமையை வழங்க முடியவில்லை. அவர் இந்தியா ஊடாக ஐரோப்பாவிற்கு தப்பிச் சென்ருர். 1990 மார்ச் மாதத்தை அடையும் போது ஜேவிபி முற்ருக தகர்க்கப்பட்டது. ஜேவிபியின் தலைமை அழிக்கப்படும்போது தேசபக்த மக்கள் இயக்கத்தின் நடவடிக்கைகளும் முடிவுக்கு வந்தன. ஜேவிபியும் தேசபக்த மக்கள் இயக்கமும் ஒன்று என்பது அல்லாவிட்டால் தேசபக்த மக்கள் இயக்கம் (இது இன்னும் அனேக பெயர்களில் அறிமுகப் படுத்தப்பட்டது) ஜேவிபியினுல் வழிநடத்தப்பட்டது என்பதே இதிலிருந்து தெரிகிறது. 1987 -89 காலகட்டத்தில் மிகப்பெரும் பலத்தைப் பாவித்து எக்காலத்திலும் இடம் பெற்றிராதவாறு பெரும் பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் சக்கராயுதத்தைப் போன்று மூன்று நான்கு மடங்குக்கும் அதிகமான பதில் பயங்கரத்துடன் தம்மை நோக்கி திரும்பி வந்து தம்மையும் அழிக்கும் என ஜேவிபியினர் எண்ணியிருக்க மாட்டார்கள். ஆனுலும் அது தவிர்க்க முடியாத தாயிற்று இவ் அழிவை ஏற்படுத்திய தோல்வியானது ஜேவிபி யின் நடவடிக்கையிலேயே உள்ளடங்கி இருந்தது. வரலாற்றில் இரண்டாவது தடவையாக அதிகாரத்தைக் கைப்பற்ற ஜேவிபியால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி கவலைக்கிடமான முறையில் முடிவுற்றது இவ்வவாறேயாகும். இத் தோல்வி மீண்டும்- மூன்ருவது முயற்சிக்கு பிரவேசமாக அமையப் போகின்றதா?

(ஜேவிபி- தோற்றம் வளர்ச்சி அரசியல் என்னும் நூலின் முதலாவது அத்தியாயமான ஜேவிபியின் வரலாற்றுக் கதை இவ் வாரத்துடன் முடிவுறுகிறது அடுத்த வாரத்திலிருந்து இந் நூலின் இரண்டாவது அத்தியாயமான 'ஜேவிபி அரசியலின் பொருளாதார அரசியல் பின்னணி' ஆரம்பமாகிறது)

# வளர்முக நாடுகளும் குடிமனைப் பிரச்சனைகளும்

வ.ந. கிரிதரன்

இலங்கை, இந்தியா போன்ற வளர்முகநாடுகள் எதிர் கொள்ளும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று இந்த 'வீட்டுப்' பிரச்சனை. இத்தகைய வளர்முக நாடுகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். இதனால் வீடுகளைக் கட்டினால் மட்டும் போதாது? குறைந்த செலவிலும் கட்ட வேண்டும். இதன் காரணமாகக் குறைந்த செலவு வீடுகளின் (Low cost housing) தேவை வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை மிகவும் அவசியமாகின்றது. பல்வேறு வளர்முக, அபிவிருத்தியடைந்த நாடுகளிலெல்லாம் இத்தகைய குறைந்த செலவுக் குடிமனைகளைக் கட்டுவது எப்படி என்பது பற்றியெல்லாம் ஆய்வுகள், பரிசோதனை முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. வெற்றியடைந்துமிருக்கின்றன. மேலும் ஆய்வுகள் தொடர்ந்து கொண்டுமிருக்கின்றன. இத்தகைய வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வீடமைப்புத் திட்டங்கள் மிகுந்த அவதானத்துடன் உருவாக்கப்பட வேண்டும். நாட்டில் கிடைக்கக் கூடிய வளங்களை அதிகளவு பாவிக்கக் கூடியதாக, அதே சமயம் உருவாகக் கூடிய சேதங்களின் அளவைக் குறைக்கக் கூடியதாக, மேலும் கூடியளவு பயனைத் தரக்கூடியதாக இத் திட்டங்கள் அமைந்திருக்க வேண்டும். கட்டடம் கட்டுவதற்குரிய கால அளவைக் குறைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். வீட்டைக் கட்டுவதுடன் மட்டும் பிரச்சனை தீர்ந்து போய்விடவில்லை. அவற்றில் வாழப்போகும் மக்களிற்கேற்றபடி வீடுகள் அமைந்திருக்க வேண்டும். இத்தகைய வீடமைப்புத் திட்டங்களை அமைக்கும் போது அவற்றில் வாழப்போகும் மக்களின் சமூக வாழ்க்கை முறை (social life) அவர்களின் தேவைகள் (needs) மற்றும் வீடுகள் அமையவிருக்கின்ற பிரதேசங்களின் காலநிலை (climate) அப்பகுதிகளில் கிடைக்கக் கூடிய மூலவளங்கள் (Resources) என்பன பற்றியெல்லாம் கவனத்தில் கொண்டே அத்தகைய திட்டங்களை அமைக்க வேண்டும்.

### கட்டடங்களைத் தொழில் மயப்படுத்தல்...

இவ்விதமான குறைந்த செலவு வீடுகளை எவ்விதம் அமைக்கலாம்? வீடு கட்டுவதற்கான செலவை எவ்விதம் குறைக்கலாம்? வீடமைப்புச் செலவைப் பொறுத்த வரையில் மூலப்பொருட் செலவும் தொழிலாளர்க்கான செலவும் முக்கியமானவை. கட்டடங்களைத் தொழில் மயப்படுத்துவதன் மூலம் (industrialisation of buildings) கட்டடப் பொருட்களிற்கு அல்லது பாகங்களிற்கு (மொத்தத்தில் கட்டடங்களிற்கு) குறிப்பிட்ட அளவு முறைகளை நிர்ணயித்துத் தரப்படுத்துவதன் மூலம் (standardisation) பெருந்தொகையாகவும் விரைவாகவும் கட்டடப் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடியதாகவிருக்கும் கட்டங்களைக் கட்டுவதும் துரிதமாகவும் இலகுவானதாகவுமிருக்கும். இவ்விதம் கட்டங்களைத் தொழில் மயப்படுத்துவதற்கு முன்னோடியாக இன்னுமொன்றை நடைமுறைப் படுத்த வேண்டும். குறிப்பிட்ட அளவின் அடிப்படை அளவாக நிர்ணயம் செய்து கொண்டு அளவினை அடிப்படை அளவாக நிர்ணயம் செய்து கொண்டு (module) இந்த அளவினை அடிப்படையாக வைத்து கட்டடப் பொருட்களை, பாகங்களை உற்பத்தி செய்தல் வேண்டும். வீடுகளை வடிவமைக்கும் போதுகூட, இத்தகைய அளவு முறையில் உருவாக்கப்பட்ட பாகங்களைப் பாவிக்கக் கூடியதாகத் தான் வடிவமைக்க வேண்டும். இத்தகைய முறையினை ஆங்கிலத்தில் modular coordination என்பார்கள். இத்தகைய முறையில் வீடுகளை அமைக்கும் போது பெறக்கூடிய முக்கியமான நன்மைகளிலொன்று வீட்டிற்கு வீடு அளவு முறைகள் மாறுவதால் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்பதே. பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்படும் கட்டடப் பொருட்களை எல்லா வகையான வீடுகளிற்கும் பாவிக்கக் கூடியதாகயிருக்கும். இத்தகைய முறையில் வீட்டின் சுவர்கள் (Walls) தரை (Floor) கூரை (Roof) மற்றும் யன்னல்கள், கதவுகளெல்லாம் மிக விரைவாகவும், தரமாகவும், குறைந்த செலவிலும் அமைக்கப்பட முடியும். இப்பாகங்கள் கட்டடங்கள் கட்டுவதற்கு முன்பே உருவாக்கப் பட்டு பாதுகாத்து வைக்கப்படலாம்.

இந்தியா, இங்கிலாந்து போலண்ட், நோர்வே போன்ற நாடுகளில் அடிப்படை அளவாக (module) 10 cm ஐ வரையறுத்துள்ளார்கள், சுவர்களை (walls) எடுத்துக் கொண்டால் (190x90x90 mm) என்ற அளவில் உருவாக்கப் பட்ட செங்கற்களை அல்லது (390x190 x190mm) என்ற அளவில் அமைக்கப்பட்ட சுவர்ப் பாகங்களைக் கொண்டு சுவர்களை அமைக்கலாம். இதுபோல் கதவுகள் யன்னல்களிற்குப் பின்வரும் அளவு முறைகள் பரிந்துரை செய்யப் பட்டுள்ளன.

கதவுகள் உயரம் 2,000mm
அகலம் 700mm
800mm, 900mm

யன்னல்கள்:
உயரம் 400mm, 800mm
1200 mm, 1600mm
அகலம் 400mm, 800mm
1200 mm, 1600mm

இது போல் கூரை (Roof) தரை (floor) போன்ற பாகங்களையெல்லாம் இலகுவாகவும், விரைவாகவும், குறைந்த செலவிலும், பயன்பாடு மிக்கதாகவும் உருவாக்கிக் கொள்ளலாம்.

(வளரும்)

## ஜெயந்தீஸனது குட்டிக்கதைகள்

# தூள்



கோகிலாவும் மாலதியும் இணைபிரியாத் தோழிகள். இருவருமே திருமணம் புரிந்துவிட்டனர். புருஷன்மார் வேலைக்குப் போன பின்னர் ஷொப்பிங் செய்வதுதான் இவர்களது வேலை. போன வெள்ளிக்கிழமை, கோகிலாவை மாலதி ஒரு முக்கியமான விஷயத்துக்காகச் சந்தித்தாள். "என்னடி, யாழ்ப்பாணத்திலை பயிரிட்டு, வளர்த்து, பிடுங்கி, காயவைச்சு, வறுத்து, உரலிலை போட்டு இடிச்சு, பக்கெட் பண்ணிய தூள் மோகினி ஸ்டோரிலை வந்திருக்காம்.. இது மெய்யே?" எனக் கோகிலாவிடம் மாலதி கேட்க, அதற்கு மாலதி "என்ரை காதிலையும் உது விழுந்தது. வா, உப்பவே போய் செக் பண்ணுவம்" என்ற சில கணங்களில் இருவரும் மோகினி ஸ்டோரில் நின்றனர்.

மோகினி ஸ்டோரில்வேலை செய்யும் சிவலைப் பெடியன் மீது பெட்டையளுக்கு நல்ல விருப்பம். அவருக்கும் அப்படித்தான். சிரிச்சுக் சிரிச்சு நல்லதுகெட்டதையெல்லாம் தலையிலை கட்டி விடுவார். முதலாளி ஏமலாந்திக் கொண்டிருக்கும் வேளையிலே, பொட்டைகளின் பாய்க்குகளுக்குள் சாம்பாயின் கோலாவைத் தூக்கிப் போட்டுவிட்டு நல்ல பிள்ளையாக இருப்பார். மோகினி ஸ்டோரில் சாம்பயின் கோலா நல்லா "அழியுது" என்று வட்டுகள் பேசிக் கொள்வதுண்டு.

எப்படியோ கோகிலாவும், மாலதியும் தூள் பக்கெட்டை எடுத்துக் கொண்டு சிவலைப் பெடியன் முன் வந்ததும் அவர் லைட்டாகச் சிரித்தார். "யாழ்ப்பாணத்திலை இருந்து வந்தது எண்டு பக்கெட்டிலை எழுதிக் கிடக்கு. இதுமெய்யே?" என மாலதி கேட்க, சிவலைப் பெடியன் "எயார்போட்டிலை போய் நான் இதைக் கிளியராக்கிக் கொண்டு வந்தனான்" என்றார். "போன கிழமை ரேவதி ஸ்டோரிலை தூள் வாங்கினான். குழம்பு வைக்கக் குநகுமம் மணத்திது" என்று மாலதி சொன்னதும் "அக்கா, அடிச்சுச் சொல்லிறன். இது சுப்பர் தூள். ஏதும் இசக்குப் பிசகெண்டா இங்கை திருப்பிக் கொண்டு வாருங்கோ" என்ற சிவலைப் பெடியன், முதலாளி ஏமாலாந்து வதை ஊர்ஜிதப்படுத்திவிட்டு, நான்கு சாம்பாயின் கோலாக்களைத் தூக்கி கோகிலாவின் பாய்க்கினுள் FREE ஆகப் போட்டு விட்டார். பெடியன் சொன்னால் குற்றமில்லை என்ற போக்கில் அவர்கள் தூள் பக்கெட்டை வாங்கிக் கொண்டு சுரங்க ரயிலில் ஏறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது மாலதிக்கு உண்மையிலே தூளில் சந்தேகம் வந்து விட்டது. யாரையாவது பிடித்து இது நல்ல தூள் தானா என ஊர்ஜிதம் செய்ய வேண்டும், யாரைப் பிடிப்பது என அவள் கோகிலாவிடம் கேட்டபோது, அவள் மலங்க மலங்க விழித்தாள்.

இந்த நேரம் பார்த்து நானும் சுரங்க ரயிலில் ஏறினேன். என்ன செய்வது, மாலதிக்கும் கோகிலாவுக்கு முன்னேயே எனக்கு இடம் கிடைத்தது. கோகிலா பக்கெனத் துள்ளி எழுந்தாள். "பாரடி, ஜெயந்தீஸனெல்லே எங்களுக்கு முன்னாலை இருக்கிறார். அவரிட்டை ஆலோசனை கேட்பம்" என்றபடி, என் மடியில் தூள் பக்கெட்டை வைத்து "இந்தத் தூள் நல்ல நாளா கெட்டதூளா என்பதை ரெண்டு நிமிடங்களில் சொல்லாதுவிட்டால் உமது தலை குட்டி குட்டியாக உடைத்து விடும்" என்றாள்.

வழமையில் மிரட்டல் களுக்குப் பயந்து விடும் சுபாவம் கொண்ட நான் அன்று பயப்படவில்லை. தூள் பக்கெட்டைத் தூக்கி மணந்தேன். .. ஹூம் .. பிடிபடவேயில்லை. ஆனால், தூள் செக்கிங்கிற்கு உரிய ஓர் பொருத்தமான இடம் பிடிபட்டது.

"எனது சகோதரிகளே! இதே டிறெக்ஸனில் போங்கள். எட்டாவது நிலையத்தில இறங்குங்கள். அங்கே ஓர் இயக்க காரியாலயம் உண்டு. அவர்களிடம் பக்கெட்டைக் காட்டினால், பார்த்த பார்வையிலேயே நல்ல தூளா கெட்ட தூளா என்பதைச் சொல்லுவர்" என்றேன்.

"உந்த ஐடியா எங்களுக்கு வராது போய் விட்டதே!" என்று நாணத்துடன் முந்தானையால் தமது முகங்களை அவர்கள் மறைத்துக்கொண்டனர்.

---

### சிறைவாசம்...

விளைவுகள் என்ற உண்மையை விட, பெண் துன்புறுத்தப்பட்ட தூண்டுதலாக அமையும் காரணியாக இருக்கின்றது என்ற தப்பபிப்பிராயத்தை சில சேவை யாளர்களும் வெளிப்படுத்துவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. இந்த கணிப்பில் மீண்டும் பெண்ணே துன்புறுத்தலுக்கு காரணமாகிறாள் என்ற தவறான எண்ணப்பாடு தீவிரப்படுவதை காணலாம்.

சில அக்கறையுடைய பெண்கள் அருந்ததியைச் சந்தித்து அவருடைய தீர்ப்பு நாளன்று கோர்டில், ஆண்களின் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஏற்படும் நிலைமைகளை எடுத்துக்காட்ட பொதுக்கூட்டம் ஒன்றை கோர்ட்டுக்கு வெளியில் நடத்த

ம.ப.பார்க்க..

# "பயத்திலிருந்து விடுபடுவோம்"
# இராஜினி றிச்சாட் நினைவு விழா

செ. லோகநாதன்

யுக்திய' வாரப்பத்திரிகையின் ஆதரவில் இராஜினி- றிச்சட் நினைவு விழா 1994ம் ஆண்டு பெப்பரவரி 21ம் திகதி கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுக்திய வாரப்பத்திரிகையின் ஆசிரியரும் நினைவு விழா அமைப்புக் குழுவின் செயலாளரு மான தோழர் சுனந்த தேசப்பிரிய விடுத்த அறிக்கையில் 'இராஜினி- றிச்சட் மட்டுமன்றி, இலங்கையில் சமூக நீதி ஜனநாயகம், இனங்களுக்கிடையே சமாதானம் ஆகியவற்றுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த, உயிரை விலையாக கொடுத்த அனைத்து மக்களதும் அடையாளமாக அவர் அவர்களை நினைவு கூருமுகமாகவே" இவ்விழா நடைபெறுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சுனந்த தேசப்பிரியா தனது அறிக்கையில் 'எமது சமுதாயத்தில் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதியாக நிலை நாட்டுவதாயின் மக்கள் தமது உரிமைகளுக்காக எழுச்சி பெறவேண்டும் ஆனால் இன்று எமது சமுதாயத்தில் நிலவும் பீதி இதற்கு பெரும் தடையாகவுள்ளது. இதனாலேயே நாம் இவ் நினைவு விழாவுக்கு பீதியிலிருந்து விடுபடுவோம் என தலைப்பு இட்டுள்ளோம்' எனக் கூறியுள்ளார்.

விழாவின் ஒரு நிகழ்ச்சியாக இருந்த 'றிச்சட் டி சொய்சாவின் சடலம் காணப்பட்ட மொரட்டுவை கொறலவெல்லை கடற்கரை யிலிருந்து சமாதான பந்தத்துடன் பிரதான வீதியில் நடைபெறவிருந்த ஓட்டத்திற்கு பொலீஸ் மா அதிபர் தடை விதித்துள்ளார். பொலீஸ் மா அதிபரால் விதிக்கப்பட்ட இத்தடையை எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக உட்பட அரசியல் கட்சி தலைவர்கள், தொழிற் சங்க தலைவர்கள், பத்திரிகையாளர்கள் வெகு ஜன ஸ்தாபனங்கள் கண்டித்துள்ளன.

பொலீஸ் மா அதிபர் விதித்த தடையைக் கண்டித்து மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்க விடுத்த அறிக்கையில் 'சடலங்களின் எலும்புக்கூடுகளே பீதி அடையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் ஜனநாயகம் கானல் நீராக மாறி விட்ட நிலமையில் இராஜினி- றிச்சட் நினைவு ஓட்டத்திற்கு பொலீஸ் மா அதிபர் தடை விதித்தது ஆச்சரிய மான ஒன்றல்ல" எனக்கூறியுள்ளார்.

நினைவு விழாவின் ஒழுங்குகள் பற்றி மேலும் தகவல் அறிவதற்காக தோழர் சுனந்த தேசப்பிரியவை தொடர்பு கொண்டபோது இந்நினைவு விழா தொடர்பான பிரச்சாரத்திற்காகவும் நிதி திரட்டுவதற்காகவும் கொழும் பின் பல பகுதிகளிலும் தெருக்கூத்து நடாத்துவதாக கூறினார். நேற்றைய தினம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நடைபெற்ற தெருக் கூத்து நிகழ்ச்சிக்கு பொலீசாரின் அச்சுறுத்தலகள் மத்தியிலும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் குழுமி இருந்ததாக குறிப்பிட்டார். அவரது தகவலின்படி இன்று நுகேகொடை பஸ் நிலையத்தில் தெருக்கூத்து நடைபெறவுள்ளது. இவ் நினைவு விழாவுக்கும் இதனை ஒட்டி வெளியிடவுள்ள நூல்க ளுக்கும் பெருமளவில் நிதி அவசியப் படுவதால் வெளிநாடு களிலுள்ள நண்பர்களின் உதவியை அவர் வேண்டுகிறார்.

'ஹிரு' வாரப்பத்திரிகையின் இணை ஆசிரியர்களில் ஒருவரான தோழர் சுனில் மாதவ பிரேமதிலக கூறியவாறு

'பொலீஸ் மா அதிபரின் தடைய கண்டிப்போம்

எமது பயணத்தை நாம் தொடர்வோம்"

நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகட்கு

மயில் (416) 968-2603

1994 பெப்ரவரி 15

---

## சிறைவாசம்...

விரும்புவதாயும், அருந்ததியின் அபிப்பிராயம் என்ன என்றும் கேட்டார்கள். அருந்ததியின் பதில் "என்னுடைய வாழ்க்கை முடிந்துவிட்டது, ஆனால் என்னைப் போல் பல பெண்கள் உதவிக்கு எங்கு போவது என்று தெரியாமல் நான்பட்ட வேதனைகளை தினமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எப்படி உதவுவது என்று நீங்கள் கவனியுங்கள், அதற்காக ஏதாவது செய்யுங்கள்"

இவ்வாறு தெளிவாக சமூக பிரக்ஞையுடன் சிந்திக்கும் பெண்ணுக்குத்தான் தனக்குத் தெரிந்த வழிகளில் உதவி கேட்கும் அதனைப் பெறாத நிலையில் வாழ்விலிருந்து தான் விடைபெறவும் தன் 2 குழந்தை களையும் ஆதரவின்றி விட்டுச் செல்லாமல் தன்னுடன் அழைத்துச் செல்ல செயல்பட்ட குற்றத்திற்காக 6 வருட சிறைதண்டனை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது உண்மையில் வழக்கு விசாரணை வரை இவர் ஏற்கனவே 2 வருட கடுங்காவலில் இருந்ததால் இவரது சிறைவாசம் 8 ஆகும்.

இந்த அவலம் நடக்க காரணமாயிருந்த கணவன், துன்புறுத்தலுக்கு உடந்தையாக இருந்தவர்கள், உதவி கேட்ட, தேவைப்பட்ட நேரத்தில் அதை வழங்காத உறவினர்கள். தொடர்ந்து நிலமையை கண்காணிக்கவும் உதவி பெறக் கூடிய மூலங்களை தொடர்பு படுத்தி விடவும் தவறிய மருத்துவ பொலீஸ் துறையினர், இவ்வாறு அல்லலி படும் பெண்களுக்கு சேவைகள் சென்றடையாமைக்கு காரணமான சமூக சேவை நிறுவனங்கள் எல்லோரும் குற்றவாளிகளே. இந்த அவலம் எமது சமூகத்தில் மீண்டுமொரு முறைஏற்படாமல் இருக்க தனிநபர் குடும்பம், சமூகம் சேவை நிறுவனங்கள் என நாம் ஏதாவது பொறுப்பான நடபடிக்கை எடுக்கத் தயாரா?

# ஒரு சனிக்கிழமை பின்னேரம்

(அகதி;புகலிட சிறுகதைகள் சிறப்பிதழ்)



**சுகன்**

சனிக்கிழமை நேரத்திற்கு வந்து அப்பிள்தோல் சீவிக்கொண்டிருந்த நான் BAR ல் வேலை செய்யப் போய்க்கொண்டிருக்கும் சில்வியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கும் மொலூத் கிழவனை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தேன்.

சில்வியின் அழகில் கிழவன் எப்போதும் வாயூறித்தான் போய்விடுகிருன்.

"இவளின் வடிவுக்கு ஒரு நாள்...." என்றபடி கிழவன் எனது தலையைத் தடவினுன்.

கொக்கத்தடிக்கு குறைவான உயரம் இளமையில் திடகாத்திரமான அழகு கந்தர்வனுக இருந்திருக்க வேண்டும்.

அவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தந்தையுடன் வாழ இங்கு கொடுத்து வைக்கவில்லை என்று நான் வருந்துவதுண்டு. தூரத்துத் தண்ணீர் தாகத்துக்கு உதவாது என்பது மொலூத் கிழவனின் தத்துவம் போலும். அல்ஜீரியாவின் கபில் இனத்துக் கிழவன் இங்கு பிலிப்பைன்ஸ் மனிஷி ஒன்றை வைத்திருக்கிருன். விபச்சாரம் செய்யும் அல்ஜீரியப் பெண்ணும் கிழவனைத்தேடி ரெஸ்ருரண்டுக்கு வருவதுண்டு. அவளுடைய ரெலிபோன் நம்பரை எனக்கு ஏற்கனவே தந்திருந்தான். இப்போது சந்தோஷமாக இருக்கும் கிழவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் நாயாகி விடுவான். அவனது எதிரிகள் சனிக்கிழமை பின்னேரம் ரெஸ்ருரண்டுக்கு சாப்பிட வருபர்கள்தான்.

"ஒரு நாளைக்கு விளக்குமாறு எடுத்துத்தான் எல்லாருக்கும் வெளுப்பேன்" என்று சொன்னுல் அது சனிக்கிழமை பின்னேரம்தான்.

ஜப்பானிய சுற்றுலாக்குழு ஒன்று இன்று ரெஸ்ருரண்டில் பதிவு செய்திருந்தது. கிழவன் இன்று நிலத்தில் விழுந்து விடுவான்.

'சலோ' 'கொனுர்' 'பெதே' என்று 'செவ்' வைப் பேசிக் கொண்டே இருந்தான். செவ்வும் பத்திரோனும் 'கம்பி'காரர்கள் என்று கையால் செய்து காட்டினுன். அவன் செய்து காட்டிய விதத்தில் பத்திரோனும் செவ்வும்கூட அப்படிச்செய்வார்கள் என்பது சந்தேகமே. செவ் பற்றிக்ஸ் இளம் பெடியன் கிழவன் பேசுவதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே வேலைக்கு வந்தான்.

நேரே என்னிடம் வந்து "உன்ர சிநேகிதன் ஆரையும் இண்டைக்கு பிடிக்க முடியுமா கழுவுறதுக்கு"

"ரெலிபோன் அடித்துப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு சாந்தகுருமாருக்கு அடித்தேன்.

"இப்ப கழுவவாறியா ரெஸ் ருரண்டுக்கு" என்று கேட்க

"விசா கேட்பானே?" என்ருன் சாந்தன்

"ரதி மச்சியின்ர விசாவை வாங்கிக் கொண்டு வா" என்றேன்.

"பகிடியை விட்டிட்டு சொல்லுங்கோ அண்ணை. விசாவில்லாமை உங்கை செய்யலாமோ" என்ருன்.

"உன்ர விசா இங்கை செல்லாது." என்றேன்.

சாந்தன் எல்லோருக்கும் பாஸ் எழுதிக் கொடுத்துவிட்டு தனக்கும் ஒன்று எழுதிக்கொண்டு போன மாதம் வந்தவன்.

சாந்தன் வர கிழவன் சிரித்தான். சாந்தன் முதலாவது கோப்பையை போட்டுடைக்கும் போது எல்லோரும் சிரித்தார்கள். சாந்தன் பயந்துபோய் என்னைப் பார்த்தான். கிழவன் "மிகவும் நல்லது" என்ருன். நரகத்தில் இடர்ப்பட்டோம் வேலை முடிந்தது.

"கடைசி ரெயின்தான் இண்டைக்குப் பிடிக்கலாம். எல்லாத்தையும் தொட்டியுக்கை அடுக்கிப்போட்டு மிசினை நிப்பாட்டிப்போட்டு வா, நான் நிலத்தைக் கழுவிறன்" என்றேன்.

"... த்த வேலை, பேப்பர் வேலை சம்பளம்குறைவெண்டாலும்வேலை சுகம்" என்ருன் சாந்தன்.

"ரெண்டுமூண்டு நாளைக்கு கொஞ்சம் கஸ்ரமாத்தானிருக்கும். கடும் சுடு தண்ணியில கழுவாதை, வேலை கூடினு கோப்பையைத் துடைக்காதை, அப்பிடியே தூக்கி அடுக்கு. சூட்டுக்கு தன்பாட்டிலை காஞ்சுபோடும், ஜவல் கனக்கப் பாவியாதை, கை எரிச்சுப்போடும்.

கண்ணுக்கும் கூடாது. தாச்சியின்ர பின்பக்கம் ஒண்டும் கழுவாதை, சும்மா துடைச்சுப்போட்டு தூக்கியெறி" என்றேன்.

அண்ணாரும் வேலை முடிந்து கடைசி றெயினுக்கு வந்திருந்தார். சாந்தனைப் பார்த்துச் சிரித்த அண்ணர்

"எப்படி வேலை சுகமோ" என்று கேட்டார்.

"ஓ.... செய்யலாம்" என்றான் சிரித்தபடியே.

நான் இரண்டுபேரையும் விட்டிட்டு தனியே இருந்த சீற்றில் இருந்து நாரியை நிமிர்த்தினேன்.

அன்ன ஆகாரமில்லாமல் காட்டில் கடுந்தவம் செய்து கொண்டிருந்த துருவன் முன் 'உனக்கு என்ன வரம் வேண்டும்' கேட்டார் கடவுள்.

'உட்காருவதற்கு எனக்கு நிரந்தரமாக ஒரு இடம் வேண்டும். அங்கிருந்து என்னை யாரும் விரட்டக் கூடாது' என்றான் துருவன். அவன் துருவ நட்சத்திரமானவன்.

நவீன அகதித் துருவர்களால் சில நிமிடத்திற்குள் இருக்கைகள் நிறைந்துவிட்டது. ரெயின் போய்க் கொண்டிருக்கிறது. ஆறுதலாக இருக்கிறேன் என நினைத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டிருந்தேன். இறங்குகிற ஸ்ரேசன் வருகிற நேரமாகிறது என்று மனதிற்குள் நினைக்க அண்ணர் வந்து தட்டினார்.

வழமைபோல பிள்ளைகள் நல்ல நித்திரை. ரதி மச்சி முழித்திருக்க வேண்டும். சற்று முன்னர்தான் கந்தசஷ்டி கவசம் படித்து முடித்திருக்கிறாபோல இருக்கிறது.

"பிள்ளைகள் தின்னும்
புழைக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும்குறளைப்
பேய்களும்
பெண்களைத் தொடரும்
பிரமராக்கதரும்
அடியனைக்கண்டால் அலறிக
கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப
சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும்
அண்ணரும்
கனபூசை கொள்ளும்
காளியோடனைவரும்
விட்டாங்காரம் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும்
இடிவிழுந்தோடிட"

ரதி... என்றுவழமைபோல் கதவைத் தட்டினார் அண்ணர். நான் உடுப்பை மாற்றி விட்டு குழம்பைச் சூடாக்கினேன். எல்லோரும் சாப்பிட்டுவிட்டு படுத்தோம் ரெலிபோனை இழுத்துவிட்டுவிட்டு. அண்ணர் மச்சியுடன் ஒரு வார்த்தை கதைப்பதற்கு எங்கே ஓய்வு நேரம் கிடைக்கிறது, அதிகாலை வந்து படுத்து காலை எழும்பி ஓடுவதுதான்.

"என்ன நித்திரை வரயில்லையோ... ம்"

ஒரு வார்த்தை கதைத்தால் அனேகமாக இதாய்தான் இருக்கும். அண்ணரின் அறைக்குள் கட்டில் சத்தம் கேட்டது. அல்லது கேட்டது போலிருந்தது. தலகணி கடித்தது. முகத்தில் ஏதோ ஊர்வதுபோல் இருந்தது. லையிற்றைப் போட்டு தோச்ச சேர்ட்டால் தலகணியைச் சுற்றிப் போர்த்தினேன். கன்னத்தை அழுத்திப் படுத்தேன். இதமாக இருந்தது.

## பாப்பாண்டவர் விஜயம் ஊர்ஜிதம்

பாப்பாண்டவர் ஜோன் போல் அடுத்த தை மாதம் இலங்கை வருவார் என்பதை இலங்கை அரசு உறுதிப்படுத்தியுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க பத்திரிகையாளர்களுக்கு செய்தி தெரிவிக்கையில் இரண்டு இலங்கை அரச அதிகாரிகள் சென்ற வாரம் பாப்பாண்டவரைச் சந்தித்ததாகவும் ஜனாதிபதியிடமிருந்து அவருக்கு விசேட அழைப்பு வழங்கப் பட்டதாகவும் தெரிவித்தார்.

பாப்பாண்டவர் வரும் போது இலங்கையில் மறைபரப்பு பணிகளில் ஈடுபட்ட ஜோசப் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் அளிப்பார். இந்தப் பட்டம் புனிதர் பட்டத்திற்கு முந்தியதாகும். கொழும்பு, அல்லது கண்டியில் இந்த வைபவம் நடைபெறும். இலங்கையின் சனதொகையில் எட்டு வீதமானவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவர்.

## காவலூரில் ஈபி,டி.பி பொலிசார் மோதல்

ஊர்காவற்றுறையில் பொலிசாருக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் ஏற்பட இருந்த மோதல் ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கிறது. லொறி ஒன்றில் சென்று கொண்டிருந்த ஈ.பி.டி. பியினர் உதவிப் பொலிஸ் அதிபர் சென்ற வாகனம் ஒன்றுடன் மோதக் கூடிய நிலையில் சென்ற போது பொலிசார் அவர்களை வாகனத்தை நிறுத்தும்படி சமிக்ஞை கொடுத்தனர். ஆனால் வாகனம் நிறுத்தப்படாததால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதில் ஒருவர் கொல்லப் பட்டதுடன் இன்னொருவர் காயமடைந்தார். ஈ.பி.டி. பியினருடன் மோதல் ஏற்பட இருந்த நிலையில் அப்பகுதியில் இருந்த இயக்கத் தலைவரும் இராணுவ பொறுப்பதிகாரியும் தலையிட்டு பிரச்சனையை தீர்த்து வைத்தனர் என்றும்கூறப்படுகிறது.

## விலைகள் அதிகரிக்கின்றன

வடபகுதியில் பொருட்களின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. அரிசி கிலோ நாற்பது ருபா வரை விற்பனையாகிறது. தேங்காய் சுமார் 35 ருபா வரையும் காய்கறிகள் எண்பது ருபா வரையும் சீனி ஐம்பது ருபாகவும் மண்ணெண்ணெய் லீட்டர் 110 ருபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இன்னமும் ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் கப்பல் மூலமாக அனுப்பப்படவில்லை.



# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**

**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**

**இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...**

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின் ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும் விற்பனைக்கும்
பெறலாம்

CD, Audio

**மலிவு விலையில்**

# A.R.K MARKET

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 16

### சின்னத்தம்பி வேலாயுதம்

தி.மு.க ஆட்சியமைத்த 1967 ன் பின் தமிழக அரசியற் போக்கில் எவ்வாறு பிரிவினை மறக்கப் பட்டதோ அதே சமயம் மத்திய- மாநில உறவுகளிலும் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டது. தி.மு.க இரண்டாகப் பிளவு பட்டதனுல் ஆட்சியைப் பிடிப்பது யாரென்ற உள் முரண்பாடுகளை மத்திய அரசு மிகவும் சாவதானமாகக் கையாளத் தொடங்கியது. இங்கே முக்கிய மாகக்குறிப்பிடவேவண்டிய 1970 களின் பின்பகுதியில் தேர்தற்கூட்டு தமிழகத் திராவிடக்கட்சிகளுக்கு ஒரு தவிர்க்க முடியாத நியதியாயிற்று. காங்கிரஸ்-திமுக, காங்கிரஸ்- அதிமுக ஜனதாக் கூட்டணி- திமுக இப்படியாகத் தொடர்ச்சியான தேர்தற் கூட்டு அவசியமாயிற்று.

மாநிலக் கட்சிகளான தி.மு.க அதிமுகவை சிண்டு முடிந்து விடுவதன் மூலம் தேர்தற் கூட்டைக் காங்கிரஸ் நன்கு பயன்படுத்தியது. தமிழர்களின் இந்த பலஹீனமான நிலையை இந்திய மத்திய அரசு தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தியது. இந்த நிலைகளிலிருந்து மாறி மீண்டும் பிரிவினை கேட்கும் சூழல்கள் தற்போதைக்கு தமிழகத்தில் இல்லை. ஒரு அரசியல் ஆய்வாளர் (அமெரிக்கா) 2000 கி.பி ஆண்டுக்குப் பின் திராவிட நாடுகள் பிரிவினைக் கோரிக்கையில் ஈடுபடும் என்கிருர். இந்திய ஒருமைப்பாட்டைச் சிதறடிக்கும் எண்ணம் மேற்குலகத்துக்குண்டு. பிரதான காரணம் தமது உற்பத்தியை விற்கும் சந்தையாக இந்தியாவை வைத்திருப்பதே.

இன்றைய நிலையில் ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி ஏற்பட்டு வருவதும், சீன- இந்தியக் கூட்டும் 2000ம் ஆண்டளவில் யப்பானுடைய வளர்ச்சியுடன் சேரும் போது ஆசியா வலிமை மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பலாம் அப்போது இந்தியா சீனு ஆகிய இருநாடுகளின் ஒருமைப்பாட்டை உடைக்க மேற்குலகம் முயற்சிகலாம் இந்த நிலையில் இந்தியா தனது உள்விவகாரங்களைக் கையாளுவதைப் பொறுத்தே ஒருமைப்பாடு மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்படும்.

தமிழகமும் ஏனைய திராவிட மாநிலங்களும் இன்றைய நிலையில் இந்திய ஒருமைப்பாட்டை நேசிக்கின்றன. சோவியத் யூனியனின் உடைவும் ஒரு பாடமாகவிருக்கின்றது. ஒரு திராவிடர் பிரதமராகவிருந்து இந்தியாவை நேரு குடும்பம் ஆட்சி செய்ததற்கு இணையாக ஆட்சி செய்யும் இன்றைய நிலை இனவாத அரசியலுக்கு வேட்டு வைத்துள்ளது. இவ்விதமாக திராவிட இனங்களும், மத்திய அரசும் ஐக்கியமாக இருப்பதனுல் ஈழத் தமிழர் விவகாரம் இந்திய மத்திய அரசுக்கு தலையிடி கொடுக்கும் ஒரு விடயமல்ல.

தமிழகமும் மத்திய அரசும் நல்லுறவுடன் இருப்பதற்கான அடிப்படைக் காரணங்களை நாம் கருத்துக்கெடுக்காது இந்திய மத்திய அரசைக் குறை காண்பதால் எதுவும் நடந்து விடமுடியாது. இந்தியாவை நாம் எதிரியாகக் கணிப்பது, மேலாதிக்கம் பற்றிய கணிப்பு, ஆரிய மாயை, பார்ப்பனீய அரசு, நேரு குடும்ப ஆதிக்கம், இந்து சமுத்திர பிராந்தியப் பொலிஸ் போன்ற பல குற்றச்சாட்டுகளை ஈழத்தமிழர்கள் சுமத்தியுள்ளனர். இவைகளுக்கு எதிராக வாதிடுவதல்ல எனது நோக்கம். விடயங்களை ஆய்வு செய்வதன் மூலம் முடிவுக்கு வரலாம்.

முதலாவதாக "இந்திய எதிர்ப்பு" என்பதற்கான காரணங்கள் வேறுபடல் மிக முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டும். முதலாளித்துவ ஜனநாயக வழிவகைகளில் முதலில் பார்ப்போம் இலங்கையின் முதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ வாதிகள் இந்தியாவை எதிர்ப்பதற்கான காரணங்கள் இல்லை. (முதலாளித்துவ) ஏகாதிபத்திய ஐக்கியவாதிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருபகுதி அமெரிக்காவிடமும் அதன் நேசநாடுகளிடமும் உதவிகளைப் பெறுவதற்காக இந்திய எதிர்ப்பை காட்டுகிறது. தேசிய முதலாளித்துவ வாதிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு பிரிவினரும் இன்னும் சோவியத் சார்பான கம்யூனிஸ்ட்டுகள் ஒரு கம்யூனிஸை அமைப்பை இந்தியா விடாது என்பதனுல் இந்திய தேசிய முதலாளித்துவ அரசை எதிர்க்கின்றனர். பிரிவினை வாதிகளான புலிகள் தமது பிரிவினையை இந்தியா அனுமதிக்காது என்பதனுல் எதிர்க்கின்றனர்.

இந்த வித இந்திய எதிர்ப்புகளின் சாதக, பாதகமான நிலைமைகள் எவை எனப் பார்ப்போம், முதலாவதாக இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளின் இந்திய எதிர்ப்பு மேற்கு நாடுகளுக்கு வெகுவாக உதவியிருக்கிறது. முஸ்லீம் சாம்ராச்சியங்களும் பின் ஐரோப்பியரும் அடிமை கொண்டு இந்தியாவின் கலை கலாச்சாரங்கள் சிதைக்கப்பட்டன. இந்தியா அடிமைப்படுத்தப் படுமாயின் அதைச் சுற்றியுள்ள நாடுகள் மிகக் குறுகிய காலத்தில் அடிமைப் படுத்தப்படும் ஆகவே எமது பாரம்பரிய கலாச்சாரங்கள் அழியாதிருக்க முதலில் இந்தியா நிமிர்ந்து நிற்க வேண்டும். சீனுவோ ரஷியாவோ அமெரிக்காவோ நாளை இந்தியாவை வெற்றி கொண்டு அடிமைப்படுத்த முடிந்தால் அன்றே நாங்களும் அவர்களுக்கு அடிமைகளாகவோமென்பதை நாம் மறத்தலாகாது. எமது பிரச்சனையில் இந்தியாவின் ஆதரவு எமக்கு கிடைக்காததால் இந்தியாவை எதிர்ப்பது தாச்சி சட்டியிலிருந்து

தவறி அடுப்பில் நெருப்புக்குள் விழுவதாகும்.

இந்தியாவை எதிர்க்கக் கூடாது என்ற கொள்கைகளைச் சிங்கள அரசு கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய சூழல் மேற்கூறிய பிராந்தியப் பாதுகாப்புக்காகும். சில மேற்கு நாடுகளுக்கு வந்த கல்விமான்கள் இந்திய எதிர்ப்பை காட்டுவது இங்கு தமது வாழ்வை உயர்த்திக் கொள்ளவேயாகும். இது தன் நலன் சம்பந்தமானது.

முக்கிய விடயமென்னவெனில் அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனம் அமெரிக்க அரசின் கொள்கைகளுக்கு முரணாகக் கூடச் சிலசமயம் இந்திய எதிர்ப்பு வேலைகளைச் செய்து வந்தது. இதுபற்றி ரோ பற்றி பார்க்கும் போது காணலாம். நாங்கள் எமது கலாச்சார மையங்களை (இந்து கலாச்சாரம்) உடைப்பதற்கு அந்நியனுக்குத் துணை போகலாமா? இந்திய கலாச்சாரம் எமது கலாச்சாரம், சிங்களவர் கலாச்சாரம், எல்லாம் ஒன்றாயிருக்க மேற்குலக, சீனா அரபுக் கலாச்சாரங்களுக்கு அடிமைப்படவேண்டிய ஒன்றா என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

அடுத்ததாக கம்யூனிஸ்ட்டுகளின் இந்திய எதிர்ப்புப் பற்றிப் பார்க்கும்போது இலங்கைக் கம்யூனிஸ்ட்டுக்கள் ஏன் இந்தியாவை எதிர்க்கவேண்டும் அதனால் ஏற்படக் கூடிய நன்மை என்ன? இந்தியா கம்யூனிஸ நாடாக மாறுமேயானால் மிகக் குறுகிய காலத்தில் இலங்கை கம்யூனிஸ நாடாகுவது தவிர்க்க முடியாதது. ஆகவே இலங்கைக் கம்யூனிஸ்டுகள் இந்தியக் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஐக்கியமாக வேலை செய்வதேயன்றி இந்திய எதிர்ப்பைக் காட்டுவதனால் ஏகாதிபத்திய நன்மைகளுக்குத் துணை போகவே முடியும் இலங்கைக் கம்யூனிஸ்டுகள் இந்தியாவை எதிர்ப்பதன் மூலம் அல்லது இந்திய முதலாளித்துவ அரசை எதிர்ப்பதன் மூலம் கம்யூனிஸ்டுகளுடனான உறவை இழக்கவேண்டியிருக்கும் ராஜீவின் கொலையினால் இந்திய மத்திய அரசும் தமிழகமும் எமது விடுதலையைப் பகைத்துக் கொண்டது போல.

கம்யூனிஸ்ட்டுகள் ரஷ்யாவையும், சீனாவையும் இந்தியாவையும் அமெரிக்கா, நேசநாடுகளையும் தத்துவரீதியாக எதிர்க்க காரணம் இருக்கலாம். ஆனால் உலகின் சகல அம்சங்களையும் நிராகரிக்கும் ஒரு தத்துவம் சூன்யத்துக்கே இட்டுச் செல்லும் இந்தியாவையும் சீனாவையும் சிதைக்க உதவுவது வரலாற்றை மீண்டும் பழைய நிலைக்குத் திருப்பும் வேலையாகும் ஆகவே கம்யூனிஸ்ட்டுகள் இன்றைய நிலையில் இந்திய எதிர்ப்பு வாதம் என்பதை மீள்பரிசீலனை செய்தல் வேண்டும். தேசிய முதலாளித்துவ வாதத்தை எதிர்க்கப்போய் இன்று இலங்கையில் தீவிர வலதுசாரி வாதம் பல்லாயிரம் உயிர்களைக் குடித்ததை மறந்து விடலாகாது.

இனி, எமது பிரிவினைவாதிகளின் இந்திய எதிர்ப்புப் பற்றிப் பார்ப்போம். குறிப்பாகத் தமிழீழ விடுதலைப்புலிகள், புளட் என்பன இந்திய எதிர்ப்பு வாதத்தையும் ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, ஈரோஸின் ஒரு பகுதியினரும் இன்னும் உதிரிகளும் இந்திய ஆதரவையும் கொண்டிருந்தன. இந்த எதிர்ப்பு ஆதரவு என்பன இரண்டிலும் அந்நிய ஊடுருவல், ரோவின் பங்கு அல்லது பிரிவினையை இந்தியா ஆதரிக்காததால் எழுந்த முரண்பாடு ஆகியனவே முக்கிய இடம் பிடிக்கின்றன. இவைபற்றி பின்னர் பார்ப்போம்.

இறுதியாக இந்தியாவும் தமிழகமும் என்னும் விடயத்தில் முக்கியமான சில விடயங்களைக் குறிப்பிட்டு முடிப்போம். 1965 களில் காலஞ்சென்ற எம்.ஜி.ஆர் யாழ்ப்பாணம் வந்து துரையப்பா விளையாட்டரங்கில் சன சமுத்திரத்தின் மத்தியில் உரையாற்றும்போது அறிஞர் அண்ணாவின் செய்தியெனக் கூறி "உலகில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களின் அபிலாசைகளுக்குத் துணை நிற்பது தாய்த் தமிழகத்தின் கடமை" என்றார். இது வெறும் "தமிழர்" என்பதனால் மட்டுமே என்பதல்ல, அதற்கும் மேலாக இருக்கக் கூடிய பொருளாதாரக் காரணிகளை நாம் மறந்து விடலாகாது. தமிழகம் உலகமெங்கும் வாழும் தமிழர்களால் பல கோடி டொலர்களை ஆண்டுதோறும் பெறுகின்றது. இது சினிமா, இசைத்துறை, இசைத்தட்டுக்கள், காஞ்சிபுரம், பட்டு வகையறுக்கள், சந்தனம் ஜவ்வாது, வாசனைத் திரவியங்கள் கொத்தமல்லி, மைசூர் பருப்பு வகைச் சிறு தானியங்கள். பத்திரிகை, சஞ்சிகை இலக்கிய நூல்கள் என நீளுகின்றன. பேசும் படம் சினிமா எக்ஸ்பிரஸ் வீடியோ, படங்களுடன் தொடர்புடையதனால் எமது மக்கள் மிக ஆர்வத்துடன் படித்து இன்ன இன்ன படங்கள் வரவிருக்கின்றன என்பது முதல் பிரபல நடிகை குஸ்பு (தவறெனில் மன்னிக்க) வுக்குத் தலைமுடி உதிர்ந்த செய்தி வரை அதிர்ச்சி தரக்கூடியதும், அறிவை வளர்க்கக் கூடியதுமான செய்திகளை ஆர்வத்துடன் படித்து தமிழகத்துக்கான வெளிநாட்டுச் செலவாணியை உயர்த்துகின்றனர்.

ஆனால் எமது சினிமா சஞ்சிகை, இலக்கியம் எதுவும் தாய்த்தமிழகத்தில் பிரபல்யமாக மாட்டா இது ஒரு வகை மேலாதிக்கம்தான், அமெரிக்கா, ரஷ்யா மேற்குலக நாடுகள் கூட ஏழை நாடுகளில் எடுத்ததில் ஒருபகுதியை திருப்பி ஏதோ ஒருவழியில் உதவுகின்றன. ஆனால் தாய் தமிழகம் சேய்களுக்கு என்ன செய்கிறது. ஏன் செய்யவில்லையென்று மேற்கூறிய பொருட்களை நாங்கள் வாங்காமல் விடப்போவதில்லை என்பதும் தமிழகத்துக்கும் தெரியும். எமது பிரிவினையை வைத்தும் தமது அரசியலையே வளர்க்கும் தமிழகத்தின் போக்கு "இனம்" பற்றிய கூக்குரல்களைப் போலியாக்குகிறது. இந்தியாவும்– இலங்கையும் பற்றி அடுத்த இதழில் தொடரும்

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

**பரீட்சித்துப் பாருங்கள்**
Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

## இலக்கிய...

கனடாவில் ரொரன்ரோவில் அதுவும் பொதிகை சஞ்சிகையில் 1993 மார்ச்–ஏப்பிரல் இதழில் "கனடாவில் பிறக்கும் தமிழக் குழந்தைகளின் தாய் மொழி எது?" என்ற தலைப்பில் நால்வரின் கருத்துக்களை தொகுத்திருந்தார் இந்த மகரந்தன். அதே இதழில் நிலா குகதாசனும் "சரியா இன்னும் ஒரு மாதம் கிடக்குது" எனும் ஆக்கத்தையும் தந்திருந்தார். ஆக.. இவர் தனது ஆக்கங்களை மட்டுமா ஆக்கம் என படிப்பவரா? அல்லது தொகுப்பு ஒரு ஆக்கம் அல்ல எனக்கருதுகிருரா?

அதீத வாசகர் என்று தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொள்ளும் ப.ஸ்ரீஸ்கந்தன் சொல்லுகிருர் பாமதி என்ன எழுதினுர் என்று அறிய முடியவில்லையாம். "கடைசி வரை விழுதுகள் வேருன்றும்" என்பது பாமதி எழுதிய கவிதை. இது தேடல் பத்தாம் இதழில் உள்ளது. அப்படியாயின் ஸ்ரீஸ்கந்தன் தன்னைத்தானே அதீத வாசகன் எனச் சொல்லிக் கொண்டது பொய்யல்லவா?

நிலா குகதாசன் சொல்கிருர் ஒருவர் முக்கியமான விஷயம் எழுதும் போது சொந்தப் பெயரிலோ அறிமுகமான பெயரிலோதான் எழுதவேண்டும என. ஒருவர் அதுவும் புனைபேரில் புதிசா எழுதக்கூடாது என்கிருரா? அப்படி எழுதினுல் விபச்சாரமா? அப்படி என்ருல் புனைபெயர்களில் எழுதும் பலரது அதுவும் கன்னி ஆக்கங்கள் எல்லாம் விபச்சாரமாய் அமையுதல்லவா! அடுத்தவர் ப.ஸ்ரீஸ்கந்தன் இவர் சொல்லுகிருர் புனைபெயரில் உள்ளவரிடம் எப்படி சத்தியத்தையும் நேர்மையையும் எதிர்பார்ப்பது என்று. அப்படியாயின் சொந்த பெயர்களில் எழுதுபவர்களெல்லாம் சத்தியவான்கள்! நேர்மையானவர்கள்! அப்படியாயின் உங்கள் பத்திரிகைப பிதா டி.பி.எஸ். ஜெயராஜ் பற்றி கியூறியஸ் கூற்றை உறுதிப்படுத்தும் 9–2–94 சக்தி பத்திரிகையை வாசியுங்கள். நீங்கள் வாசித்திருபபீர்கள். நீவிர் அதீத வாசகன் ஆச்சே.

அப்போ நீங்கள் என்னதான் நினைக்கிறீர்கள்? புதிதாய் எழுதுபவர்களும் புனைபெயரில் எழுதுபவர்களும் நிலா குகதாசனுக்கும் ப.ஸ்ரீஸ்கந்தனுக்கும் மு ன் பிரசன்னமாகி தங்கள் இலக்கிய மேன்மையை நிரூபிக்க வேண்டும்' என்கிறீர்களா? ஆளையும் பேரையும் என்ன பார்க்கிறீர்கள். எழுத்தில் உள்ள விஷயங்களைப் பாருங்கள். ஏற்புடையனவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? உங்கள் இருவரையும் இலக்கியவாதிகளாய் ஏற்கவேண்டும் என்பதுதானே. இது சின்ன விஷயம்.

இதற்குத்தான் நிலா குகதாசன் கேட்கிருர். "எமது இலக்கியங்களையும் ஏன் ஒப்புக்கொள்ள கூடாது?" என்று. உங்கள் ஆதங்கம் உங்கள் கடிதங்களின் நோக்கம் இதிலிருந்து எமக்கு விளங்காமல் இல்லை. ஏதோ ஒருவர் உங்களின் பெயர்களை விட்டுவிட்டார்கள் என்பதற்காக வாசகர்களாகிய எங்களை ஏன் இப்படி ஆட்டுகிறீர்கள்? உங்கள் காழ்ப்புணர்ச்சிகளை எங்களுக்கு திணிக்கிறீர்கள்? மகரந்தனையே ஏற்றுக் கொள்ளாத நீங்கள் அவரது தரவுகளை வேதவாக்காக்கி எடுத்ததன் முரண்பாடு என்ன? ப.ஸ்ரீஸ்கந்தன் எழுதுகிருர் இத்தகைய தவருன தகவல்கள் தவருன வரலாற்றுப் பாதைகளுக்கு இட்டுச் செல்லுமாம், சுபமங்களாவில் பிரசுரமாகும் தரவுகள்தான் இலக்கிய வேதமோ? சுபமங்களாவும் தாயகம் மஞ்சரி போன்ற தனியார் முயற்சிகளே. கியூறியஸ் சொன்னது போல் சுபமங்களாவின் ஆசீர்வாதத்தை நம்பி கனடா எழுத்தாளர்கள் இல்லை. கனடா தமிழ் இலக்கிய வரலாறும் இல்லை. சுபமங்களா நிலா குகதாசனுக்கு வசிட்டராய்தெரிந்தால் அதற்கு யார் பொறுப்பு? சுபமங்களாதான் தமிழ்வரலாற்று சுவடு என்று கட்டுக்கட்டாய் கட்ட காத்திருப்பது ப. ஸ்ரீஸ்கந்தனின் அவா என்ருல் அதற்கு யார் பொறுப்பு? ஒரே ஒரு ஆக்கத்தை யாரும் தந்தால் கூட இலக்கியவாதியாய் அங்கீகரிக்க உங்களால் ஏற்க முடியாது என்ருல் அதற்கு நாம் வாசகர்கள் என்ன செய்ய? தாம் தரமின்மை வாசகர்களினுல் தீர்மானிக்கப் பட வேண்டியது. அது காலங் கடந்தும் நடக்கும். உங்கள் போன்ற எழுந்தமான முடிவுகொள்வோரால் அல்ல. ஒருவர் படைத்த இலக்கிய எண்ணிக்கையை மட்டும் வைத்து இலக்கியவாதியின் தரத்தை எடை போடுவதோ ஆக்கங்களை புத்தகமாய் வெளியிடுவதை உறுதி பண்ணிய பின்தான் இலக்கியவாதியாக அங்கீகரிப்பதோ ஒரு வகையில் குறுகிய மனப்பான்மையே. நீங்கள் பயப்படுவதுபோல் சுபமங்களாவில் சரியான தகவல் வராவிட்டால் இலக்கியமோ இலக்கியவாதியோ அழிந்துவிடப் போவதில்லை. எல்லாத் தரவுகளையும் ஒருவரால் தரமுடியாது. நீங்கள் கூட விடுபட்டன எனத் தந்திருந்த தகவல்களே முற்றுபெருதது இதனை மேலும் உறுதிசெய்யும். அப்படி ஒருவர் முழுத்தகவல்களும் தருவதாயின் சுபமங்களா இதழில் ஒரு பின்னிணைப்பு தரப்பட்டிருக்கும்.

இதில் இன்னுமொன்று கவனிக்கப்படவேண்டும். மகரந்தனின் கட்டுரையில் சில இலக்கிய கர்த்தாக்களின் பெயருடன் உதாரணப்படுத்தி 'என இப்பட்டியல் தொடரும்' என வருகிறது. மகரந்தன் என்பவர் சொன்னதால் இச்சொற் கூட்டத்துக்கு அர்த்தம் இல்லாமல் போகாது. தொடரும் என்பதற்குள்ளே விடுபட்ட ஏனைய இலக்கிய கர்த்தாக்கள் அடங்கிக்கொள்கிருர்கள் என்பதே என் அபிப்பிராயம். இதனுல் பல பெயர்கள் விடப்பட்டது என்னைப் பொறுத்தவரை குற்றமாய் படவில்லை. ஆனுல் இக்கடிதங்களை அனுப்பியிருந்த இருவரும் மகரந்தனுல் சில விடயங்கள் தவற விடப்பட்டது உணரப்பட்டமையால் "அவற்றைத் தருகிறோம்" என தமது பட்டியலைக் சுபமங்களாவில் கொடுத்திருந்தால் அல்லது இங்குள்ள பத்திரிகைகளுக்கு பிரசுரிக்கச் செய்திருந்தால் அது நாகரீகமாகவும் எவருக்கும் பாதகம் இல்லாமலும் இருந்திருக்கும். அதைவிட்டு உலகத்தமிழர் புலிகள் தேடல்காரர் சுயேச்சை என்று கட்சி கட்டிக்கொண்டு எழுதத் தொடங்கியதாலே சின்னப்பிரச்சனை பூதாகரமானது. மகரந்தனின் கட்டுரையின் பின்பு அல்ல இவர்களின் கடிதங்களின் பின்புதான் சுபமங்களாவில் ஈழத்தமிழர்களின் ஆக்கங்கள் நின்று விடப்போகிறது.

இதற்கிடையில் தனிப்பட்ட கருத்து வேறு. ஈழத்துச் சினிமாவோ இலக்கியமோ இருளில் இருக்க காரணம் தென்னிந்திய ஆதிக்கமாம். இந்த தென்னிந்தியா என்பதில் எந்த எந்த மாநிலங்களை நிலாகுகதாசன் அவர்கள் அடக்குகிருர்? கேரள இலக்கியமும் சினிமாவும் எப்படி எம்மை இருளில் தள்ளின. ஐயா சினிமாக் குப்பை என்கிறீரே இளையநிலா உங்களுடைய தயாரிப்போ இல்லை வேறு நிலா குகதாசனே... ஐயோ எனக்கு தலை சுற்றுகிறது.. கொஞ்சம் பொறுங்கள் ஒரு மாத்திரை போடுவோம். எனக்கு இலக்கிய வியாதி ஐயா!

# வாசகர் கடிதங்கள்: சில உள்வீட்டுப் பிள்ளைகளின் திருவிளையாடல்

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

பத்திரிகைகள், சஞ்சிகைகளை நான் வாசிக்கும்போது முக்கியமாக வாசிப்பது வாசகர் கடிதங்கள். முதலில் வந்த விடயங்கள் பற்றி பொதுஜன கணிப்பீடு என்ன என்பதை இதில் வாசிக்கலாம் என்பது மட்டுமல்ல, முதலில் தவறாக வந்த விடயங்கள் பற்றிய திருத்தங்களும் இதில் தான் வரும். 'உண்மையைத் தேடி' அலையும் கியூறியஸ் படும் பாடு புரிகிறதா? முதல் வாரம் யாரையும் பற்றி எழுதியிருந்தால் அடுத்த வாரம் எழுதப்பட்டவரது பதில் வரும், அது தவறு என்று. அல்லது அவரது சட்டத்தரணி போட்ட மான நட்ட வழக்கினால் ஆசிரியரின் மன்னிப்புக் கோருதல் வரும்.

இந்த வாசகர் கடிதங்களில் பொதுஜனத்தின் நாடித்துடிப்பு என்ன என்று அறியலாம். எதை சொன்னாலும் ஆமா, ஆமா, அவர்கள் செய்தால் சரிதானே என்ற கூட்டத்தை போலன்றி, யார் எதைச் சொன்னாலும் அதை விமர்சிக்கும் வாசகர்கள் உள்ளார்கள். ஆனால் எல்லாப் பத்திரிகைகளும் தங்கள் எழுத்தாளர்களை விமர்சிக்கும் கடிதங்களை பிரசுரிப்பதில்லை. ரொறன்ரோ சண்ணில் ஒரு குறிப்பிட்ட ஊரவர்கள் பற்றி கேவலமாக எழுதிய போது அவர்கள் அப்பத்திரிகையுடன் தொடர்பு கொண்ட போதும் அவர்களது கருத்து காதுக்குள் எடுக்கப்படவில்லை. சமீபத்தில் ஒட்டாவாவில் நடைபெற்ற விழா ஒன்று பற்றி தாயகம் நிருபர் எழுதிய கட்டுரை சம்பந்தமாக இருவர் ஆட்சேபக் கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் தாயகத்தில் அவை பிரசுரமாகவில்லை. கட்டுரையை விட கடிதங்கள் நீளமாய் இருந்தன.

ஸ்டாரில் வாரத்தில் ஒரு நாள் நீங்கள் நினைத்த எது பற்றியும் கடிதம் எழுதலாம். அதில் பூனையைக் காணவில்லை என்பது முதல் பஸ் சாரதி செய்த உதவி பற்றி எழுதலாம். கியூறியஸ் கூட தனக்கு கனடிய குடிவரவு அதிகாரிகள் தன்னை விசாரணை செய்யாத அநீதி பற்றி ஸ்டாருக்கு எழுதிய போது ஞாயிற்றுக்கிழமை கடிதம் பிரசுரமாக, திங்கட் கிழமை குடிவரவு திணைக்களம் விசாரணைக்கு திகதி அனுப்புவதாக போன் பண்ணியிருந்தார்கள். பத்திரிகைக் கடிதம் செய்த வேலை அப்படி.

இந்த வாசகர் கடிதங்களை எழுதுவதை பொழுதுபோக்காக வைத்திருப்பவர்கள் பற்றியும் வாசித்திருக்கிறேன். புதுடில்லியில் வாசகர் கடிதங்கள் எழுதுபவர்கள் பற்றி ஒரு தடவை செய்தி முகவர் செய்திக் குறிப்பு ஒன்று வந்தது. அதில் ஒருவர் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. இவ்வாறானவர்கள் எதைக் கண்டாலும் அது பற்றி பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதி விடுவார்கள். பஸ்ஸில் கண்டக்டர் சில்லறை கொடுக்கா விட்டாலும், ரோட்டில் லைட் இல்லா விட்டாலும் ஒரு நாலு வரி எழுதி பத்திரிகைக்கு அனுப்பா விட்டால் இவர்களுக்கு தூக்கம் வராது. இவர்களைப் பொறுத்தவரை பத்திரிகை ஆயுதம் தான். ஆனால் பிரச்சனை என்னவென்றால் சில புண்ணியவான்கள் வாசகர் கடிதம் எழுதும் போது கூட புனைபெயரில் அனுப்புவார்கள், விலாசம் எதுவுமே இராது.

வாசகரில் இன்னொரு ரகம் உண்டு, தனது பெயரை அச்சில் காணும் ஆர்வம் காரணமாகவோ என்னவோ, ஆக்கங்களையும் பத்திரிகைகளையும் புழுகோ புழுகு என்று புழுகுவர். அப்படியானால் தான் பிரசுரிப்பார்கள் என்ற நம்பிக்கை. ஊரில் கண்ட கடிதங்களில் பெரும்பாலானவை இந்த ரகம் தான். சென்ற வாரம் பிரசுரமான கதை அபாரம் போங்கள்... கதையை வாசித்து கண்ணீர் வந்து விட்டது என்றெல்லாம் வரும். பெரிதாக வாங்கு வாங்கென்று யாரும் வாங்கியதைக் காண்பது அபூர்வம். உண்மையில் அப்படியான கடிதங்களை பத்திரிகைகள் பிரசுரிக்காமல் அமுக்கினவோ என்னவோ?

ஆனால் புகலிடத்தில் வாசகர் கடிதங்கள் கொஞ்சம் வித்தியாசமானவை. தாயகம் ஆரம்பித்த நாட்களில் கடும் விமர்சன கடிதங்கள் வந்தன. அப்போது கடிதமும் பிரசுரிக்கப்பட்டு கீழே ஆசிரியரின் பதிலும் இருக்கும். புகழ்ந்து வரும் கடிதங்களை தாயகம் பிரசுரிப்பதில் தயக்கம் காட்டியது. ஒரு தன்னடக்கம் தான்!

பிறகு வாசகர் கடிதங்கள் வந்த மாதிரி பத்திரிகைகள் வந்தன.




அறு (சு) வை

இந்த பத்திரிகைகளில் வந்த வாசகர் கடிதங்கள் மிகவும் சுவாரஸ்மானவை. புதிதாக பத்திரிகை வந்திருக்கும். அடுத்த கிழமை வாசகர்கள் 'ஐயகோ, என் வாழ்நாளில் நான் தவமிருந்தது இந்த பத்திரிகை-சஞ்சிகைக்காகத் தான். இப்போது தான் பிறவிப் பெரும்பயன் எய்துற்றேன்' என்று வந்திருக்கும். டாய்.. இங்க வா.. நீ பிறந்த நாள் முதல் ஒன்றுமே வாசித்ததில்லையா? இதெல்லாம் பெரும்பாலும் 'உள்வீட்டுப் பிள்ளைகளின் திருவிளையாடல்'. தங்கள் பத்திரிகை, சஞ்சிகைக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கான நடவடிக்கை இது. அதிலும் ஏற்கனவே வந்த பத்திரிகைகளில் கொஞ்சம் கோபம் என்றால் அந்தக் கடிதங்களில் 'இங்கே சிலர் பத்திரிகை நடத்துகிறோம் என்று சொல்லி தனிப்பட்டவர்கள் மீது சேறு வாருகிறார்கள். உங்கள் பத்திரிகையைக் கண்டதும் தமிழ் சமூகத்திற்கு விடிவெள்ளி ஒன்று உதித்துவிட்டது என்றுதெரிந்தது. பத்திரிகைக்கே இலக்கணம் வகுத்தமாதிரி...' என்று இருக்கும். அந்த 'அந்த இங்கே சிலர்' யார் என்று தெரிந்திருக்குமே!

பிறகு பாப்புவா நியூ கினி போன்ற இடங்களிலிருந்து எல்லாம் வாசகர் கடிதம் வரும்.. தங்களுக்கு உலகளாவிய வாசகர் கூட்டம் இருக்கிறது என்று காட்ட. நூற்றுக்கணக்கில் வாசகர் கடிதம் வந்தது என்று உடான்ஸ் விடப்பட்டிருக்கும். அங்கு யாருமே எழுதியிருக்க மாட்டார்கள்.

இதற்குள் பத்திரிகையில் ஆசிரிய தலையங்கம் முக்கியமானது என்பது 'இந்த உள்வீட்டு வாசகர்களுக்கு' தெரியும். உங்கள் ஆசிரிய தலையங்கம் அபாரம்.. ஆசிரிய தலையங்கம் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும். . என்று சொல்லி விட்டு 'இங்கே சிலர் ஆசிரிய தலையங்கம் எழுதுகிறோம் என்று சொல்லிக் கொண்டு...' என்று போகும். ஏன் என்று உங்களுக்குத் தெரியும் தானே! ஒரு சஞ்சிகை ஒன்று தனது வாசகர் கடிதங்களில் பெரும்பகுதியை ஆசிரிய தலையங்கத்தை பாராட்டுவதில் செலவிட்டது. இதைப் பார்த்து முனியும் கியூறியஸும் பேசிக் கொண்ட போது கியூறியஸ் சொன்னான்.. நான் அதில் வாசகர் கடிதங்களைத் தான் கவனமாய் வாசிப்பேன் என்று. ஏன்? என்று முனி கேட்க... அதில் தான் ஆசிரியரின் உண்மையான கருத்து இருக்கும் என்று கியூறியஸ் பதில். . அந்த வாசகர் கடிதங்களிலும் ஒவ்வொரு வாசகரும் தங்களுக்குள் 'பேசி' தீர்மானித்த மாதிரி ஆசிரிய தலையங்கங்களின் வெவ்வேறு பகுதிகள் பற்றித் தான் வியந்துரைப்பார்கள். இப்படியாக தங்கள் பத்திரிகை பற்றி தாங்களே புழுகிக் கொள்வர். அதைப் போல ஒரு சஞ்சிகையைப் பார்த்தால் வாசகர் கடிதங்கள் எல்லாம் பிரபல எழுத்தாளர்கள் எழுதியிருப்பார்கள். ஆக்கங்கள் மட்டும் சாதாரணமானவர்களிடம் இருந்து வந்திருக்கும். காரணம் சஞ்சிகை வெளியிட்டதும் முதல் வேலையாக உலகம் முழுவதும் உள்ள இலக்கியகாரர்களுக்கு சஞ்சிகை அனுப்பப்படும். அவர்களும் முகத்துக்காக இரண்டு வரி எழுதும் நட்புக் கடிதத்தில் எழுத.. அது சஞ்சிகையில் பிரசுரமாகும். இதனால் தங்கள் சஞ்சிகைக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது என்ற நினைப்போடு கனவு காணலாம்.

வாசகர்களும் சும்மா இல்லை. தீர்க்கதரிசனம் நிறைந்தவர்கள். ஒரு சஞ்சிகை ஒரு முறை மாவீரர் சிறப்பிதழ் விட்டது. மாவீரர் சிறப்பிதழ் வருவதாக முன்பு அறிவித்தல் வரவில்லை. ஆனால் கேள்வி பதில் பகுதியில் சொல்லி வைத்தாற் போல எல்லா வாசகர்களுமே மாவீரர்கள் பற்றித் தான் கேட்டிருந்தார்கள். இன்னொரு முறை ஒரு வணக்கத்துக்குரியவரைப் பேட்டி கண்ட போதும் முன்பு சொல்லா விட்டாலும் வாசகர்கள் மத சம்பந்தமாகத் தான் கேட்டிருந்தார்கள். பார்த்தீர்களா? வாசகர்களின் திறமையை... மன்னிக்க.. உள்வீட்டுப் பிள்ளைகளின் திறமையை.

வாசகர் கடிதத்தின் இன்னொரு சுவாரஸ்யச் சம்பவம்.. ஒரு சஞ்சிகை ஆசிரியர் பற்றி இன்னொரு பத்திரிகையில் ஒருவர் எழுதி விட்டார். சஞ்சிகை ஆசிரியரோ முன்பு அந்த கட்டுரையாளர் தனக்கு எழுதிய சந்தாக் கடிதத்தை பிரசுரித்து விட்டார். வழமையில் பெரிய கட்டுரைக்கு சிறிய கடிதம் வரும். இதில் என்னடா என்றால்.. கடிதம் சிறியது.. அதை புகழ்ந்து ஆசிரியரே கட்டுரை எழுதி விட்டார். அது தான் தன் பதில் என்ற மாதிரி இருந்தது.

இன்னொரு முறை சஞ்சிகை ஒன்றின் வெளியீட்டு விழாவில் நடந்த கவியரங்கில் கவிஞர் ஒருவர் வாசித்த கவிதை கொஞ்சம் விமர்சனமானது. அழைத்தவர்களுக்கோ மேலிடத்தின் பயத்துக்கு ஆளாக வேண்டி வரப் போகிறதே என்ற பயம்... உண்மையில் அழைத்தவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? கவிஞரின் கருத்துச் சுதந்திரத்துக்குள்ள உரிமையை வலியுறுத்தியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? அடுத்த முறை ஒரு வாசகர் கடிதம்... கவிதை வாசிக்கத் தெரியாத ஒருவர் மேடையை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற மாதிரி...

இதுதான் அடுத்த ஸ்டைல். .. ஆசிரியர் தனக்கு பதில் அளிப்பதால் ஏற்படக் கூடிய இடையூறுகளை கவனத்தில் கொண்டு ஒரு கடிதத்தை தானே எழுதி தனது கருத்தை இன்னொரு பெயரில் மேடையேற்றுவார். இதனால் சம்பந்தப்பட்டவரைச் சந்திக்கும் போது 'எனக்குத் தெரியாதப்பா, வாசகர் ஒருவர் அனுப்பியிருக்கிறார்' என்று ஜகா வாங்கித் தப்பித்துக் கொள்ளலாம்.

முன்பு தாயகத்துக்கும் செந்தாமரைக்கும் இடையில் நடைபெற்ற லடாயில் திடீரென்று செந்தாமரையில் மூனு பக்கம்

வாசகர் கடிதம்... அதில் ஒரு கடிதம் வெளிநாட்டிலிருந்து எழுதிய கவிஞர் ஒருவர் பெயரில் வந்த கடிதம்... தாயகம் உடனடியாக அந்த கவிஞரிடம் இருந்து ஒரு ஃபாக்ஸ் பெற்று பிரசுரித்தது.

இந்த தொடரில் தற்போது ஒரு வாசகர் கடிதம்... இந்த பத்திரிகைக்காரரே பிரசுரிக்கின்ற கடிதங்களின் எனக்கு தனி கிக். கள்ளக் கோழி ருசிக்கும் என்ற மாதிரி... இந்த பத்திரிகையாளர்கள் சொந்தப் பெயரில் எழுதுகின்ற ஆக்கங்களை விட, இந்தக் கடிதங்கள் சுவாரஸ்யமாக இருக்கும். வீட்டுக்காரனை விட திருடனுக்கு மூளை அதிகமாக வேலை செய்யும் அல்லவா.. தான் பிடிபடக் கூடாது என்பதற்காக விசேட கவனம் எடுக்கப்படும். ஆனால் இறுதியில் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற மாதிரி முடிந்து போகும்.

'உள்வீட்டுப் பிள்ளைகளின் வாசகர் கடிதம்' என்று எப்படிக் கண்டுபிடிப்பது? முதலாவது வாசகரின் பெயர்.... முன்பின் கேள்விப்படாத சண்முக நாதபிள்ளை, கேதீஸ்வரமூர்த்தி என்றிருக்கும். வாசகரின் இடம் பிரேசில், கோணந்தோப்பு என்று இருக்கும். ஏற்கனவே தெரிந்த ஒரு எழுத்தாளரின் வாசகர் கடிதம் என்றால் பெயர் காட்டித் தரும். புதிதாக வரும் ஒருவரின் எழுத்து பண்பட்டதாக தோன்றினால் விசயம் விளங்க வேண்டும். எழுத்தில் ஒரு புத்திஜீவித் தனம் தெரியும். லொஜிக் ஒன்றைக் காட்ட முயற்சி எடுக்கப்பட்டிருக்கும்.

யாருடையவோ கேள்விகளுக்கு அதனூடாகப் பதில் வந்திருக்கும். அதிலும் ஆசிரியர் மீது சமீபத்தில் யாராவது கேள்விக்கணைகளைத் தொடுத்திருந்தால் அதற்கான பதில்கள் 'வாசகர்' கடிதத்தில் தெரிந்திருக்கும்.

இந்த பத்திரிகைகள் பலவற்றில் அவை பற்றி கண்டித்து ஒரு கடிதம் எழுதிப் பாருங்கள். பிரசுரிக்கவே மாட்டார்கள். நைசாக அமுக்கி விடுவார்கள். ஒரு தடவை ஒரு எழுத்தாளர் பற்றிய விமர்சனக் கடிதத்தை ஒரு பத்திரிகை பிரசுரிக்க மறுத்தது. சம்பந்தப்பட்டவர்கள் தாயகத்தை அணுகிய போது தாயகமும் மறுத்து விட்டது. பின்னர் இந்த நெருக்கடிகளால் இந்தக் கடிதம் பின்னர் அப்பத்திரிகையில் பிரசுரமானது.

இன்னொரு தடவை ஒருவர் எழுதிய கடிதத்தில் தங்களைப் பாராட்டிய பகுதிகளை மட்டும் பிரசுரித்து தனது பத்திரிகா தர்மத்தை காப்பாற்றியது. இது அதர்மம். ஒன்றில் பிரசுரிக்காது விடலாம். ஆனால் சொல்கின்ற விடயத்தை இருட்டடிப்பு செய்வது மோசம்.

ஏன் இவை தங்களை விமர்சிக்கின்ற கடிதங்களை பிரசுரிக்க மறுக்கின்றன? ஒன்று தாங்கள் மாசற்றவர்கள் என்ற 'முகமூடி' கிழிந்து விடுமே என்ற பயம். தங்களது தவறுகளை வெளியில் கொண்டு வர தங்கள் பத்திரிகையையே தளமாக அனுமதிப்பதா என்ற கேள்வி. மற்றது தன்னம்பிக்கைக் குறைவு. தங்கள் திறமையில் நம்பிக்கையில்லாதவர்கள் தான் விமர்சனத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். எந்த விமர்சனக் கடிதங்களிலும் தவறுகள் இருந்தால் அதை ஏற்றுக் கொண்டால், அல்லது சரியாகப் பதில் கொடுக்கத் தெரிந்தால் பயப்படத் தேவையில்லை. சரி, உங்களைத் தான் புகழ்கிறீர்கள். அதை கொஞ்சம் தன்னடக்கத்தோடு செய்தால் என்ன? ஆகா, ஓகோ என்று புகழும் போது கொஞ்சமாவது புத்தி வேண்டும், இந்த புகழுரைக்கு நான் தகுதியுள்ளவனா என்று.

தன் மீதான விமர்சனங்களுக்கு வாசகர்களின் பாதுகாப்பைத் தேடுவது சரியானதா? தனது கருத்துக்களை நியாயப்படுத்த முடியாதவன், வாசகர்களே எமது மலைகள் என்று வாசகர்களை துணைக்கழைத்து பாதுகாப்பு தேட வேண்டியவன் கருத்தைச் சொல்ல அருகதையற்றவன்.

**This newspaper is published by Georgicka communications.**
**A member of Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650.3216 @Compuserve.com**

**இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.**
**ஆசிரியர்;**
**ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

# மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

## SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

## P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்